உ

கடவுள்துணை.

# மண்டலபுருடன்

அருளிச்செய்த

# பதினோராவது நிகண்டு.

## ஒருசொற்பலபொருட்

பெயர்த்தொகுதி

மூலமும்-உரையும்.

இஃது,

நாகலாபுரம்

ம-ம-சேக்குமுகம்மது

ராவுத்தரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

திரிசிரபுரம்

தேரடிக்கடைவீதியில்

புத்தகவியாபாரம்

தி-சபாபதிபிள்ளையவர்களால்

சென்னப்பட்டணம்.

ம. சவுரியாகுட்டிமுதலியார்

அவர்களது

லைசியம்பிரஸில்அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

உருத்திரோர்க்காரி ௵ ஆனி ௴

# பிரசித்தப்பத்திரிகை.

இதனால் யாவருக்கும் தெரிவிப்பதியாதெனில் திரிசிரபுரம் தேரடிக் கடைவீதியில் புத்தகவியாபாரம் செய்யும் தி. சபாபதிபிள்ளை அவர்கள்கடையில்தமிழ் இங்கிலீசு கிறந்தபுத்தகங்களும் அகஸ்த்தியமகாமுனிஅருளியவயித்தியசாஸ்திரங்களும் விற்பனைசெய்துவருவதால் வேண்டியவர்கள் சரசமான விலைக்கு வாங்கிக்கொள்ளுவதுமன்றில் அரதேசத்திலுள்ளவர்கள் ஷையாருக்கு யெழுதிக்கொண்டு உண்டியில் அனுப்பினால் தபால்சிலவு அன்றியில் ஷை புத்தகம் அனுப்பபடும்.

இப்போது பதிப்பித்துவருகிரபுத்தகவிபரம்.

கம்பநாட்டாழ்வார் இயற்றிய,

இராமாயணம் அயோத்தியாகாண்டம்.
, , , ஆரணியகாண்டம்.
, , , உயுத்தகாண்டம்.

உ

கடவுள் துணை.

# பதினோராவதுநிகண்டு

மூலமும் - உரையும்.

## காப்பு.

முடிவிலின்பத்துமூவா முதல்வனைப்போற்றிசெய்தே ...*
யடிதொறுமிரண்டுமொன்றுமாதியிற்பொருளடக்கி......*
நடைபெறுககரமாதினகரவீறெதுகையாகப்...............*
படியிலோர்சொற்பொருட்பல்விதத்தொகைபகரலுற்றாம்*

(இதன்பொருள்.)

முடிவில்-அளவில்லாத-இன்பத்து-இன்பத்தையுடைய-மூவா - கெடாத முதல்வனை-அருகக்கடவுளை-போற்றிசெய்து-துதிசெய்து-அடிதொறும் - அடிகடோறும் - இரண்டும் - இரண்டுசொல்லினும் - ஒன்றும் - ஒருசொல்லினும்-ஆதியில்-முதலில்-பொருள்-பொருள்களை - அடக்கி - அமைத்து- நடைபெறு-நடைபெற்றுவரும்-ககரமாதி-ககரவெதுகைமுதல்-னகரவீறெதுகையாக-னகரவெதுகையிறுதியாக - படியில்-இவ்வுலகின்கண் - ஓர்சொற்பொருட்பல்விதத்தொகை - ஒருசொற்பலவகைப் பொருட்டொகுதியை-பகரலுற்றாம்-சொல்லலுற்றாமென்றவாறு.

## ககரவெதுகை.

(விருத்தம்.)

பகவனேயீசன்மாயோன்பங்கயனசினனேபுத்தன்........*
பகலேநாளொருமுகூர்த்தம்பகலவநடுவேதேசு..........*
மகரமேசுறாப்பூந்தாதாம்வசிகூர்மைவசியம்வாளே.........*
யகமனமனையேபாவமகலிடமுள்ளுமாமே..................*

(இ-ள்.) [பகவனென்பது] சிவனுக்கும் - திருமாலுக்கும் - பிரமனுக்கும்-அருகனுக்கும்-புத்தனுக்கும்பெயர் [பகலென்பது] நாள் - ஒருமுகூர்த்தகாலம்-சூரியன்-நடு-பிரகாசத்துக்கும்பெயர் [மகரமென்பது] சுறா-பூந்தாதுக்குபெயர் [வசியென்பது] கூர்மை-கைவசம் -வாளுக்கும்பெயர் [அகமென்பது] மனம்-வீடு - பாவம் - இடம் - உள்ளுக்கும்பெயர்-எ-று. (க)

சிகரிகோபுரமேவெற்புச்சீறெலிநாணாநாற்பேர் ... .......*
சிகழிகைமயிர்முடிப்பேர்சிறந்தவாசிகைதேமாலை.........*

சிகரமேமலையினுச்சி திரைசென்னிதிவலைவெற்பா.........*
மகம்யாகமோர் நாளென்ப மாய்வெனிபமறைவுஞ்சாவும்...*

(இ-ள்.) [சிகரியென்பது] கோபுரம்-மலை-எலி-நாரைக்கும்பெயர் [சிகழியென்பது]மயிர்முடி-கோத்தமாலை பூமாலைக்கும்பெயர் [சிகரமென்பது]மலையினுச்சி-அலை-தலை-துளி-மலைக்கும்பெயர் [மகமென்பது] யாகம்-ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் [மாய்வென்பது] மறைவு-சாவுக்கும்பெயர்.எ-று. (உ)

இகல்பகைவலிபோர்மூப்பே ரிகுளையேதோழிநட்பாம் ...*
புகரென்பமழைக்கோள்குற்றம்புற்கெனுநிறமுமுப்பேர் *
நகமலையுகிர்மரப்பேர்நகைமகிழ்வொளிசிரப்பாங்.........*
ககனம்விண்படைகாடென்ப கடவுளேமுனிநன்மைப்பேர்*

(இ-ள்.) [இகலென்பது] பகை-வலிமை - யுத்தத்துக்கும்பெயர் [இகுளையென்பது] தோழி - சினேகத்துக்கும்பெயர் [புகரென்பது]சுக்கிரன் குற்றம்-கபிலநிறத்துக்கும்பெயர்[நகமென்பது] மகிழ்ச்சி-பிரகாசம்-நகம்-மறத்துக்கும்பெயர் [நகையென்பது] மகிழ்ச்சி-பிரகாசம்-சிரிப்புக்கும்பெயர் [ககனமென்பது]ஆகாயம்-சேனை-காட்டுக்கும்பெயர் [கடவுளென்பது] தெய்வம்-முனிவன் நன்மைக்கும்பெயரொன்றவாறு. (ஙு)

சாகஞ்சாகினிவெள்ளாடு தேக்கெனுந்தருவேதேனி... ...*
பாகலேபாரவல்லி பலாவென்றும்பகரலாமே...........*
யூகமேகருங்குரங்கோடுட்பொருளுணர் தர் தர்க்கம்.......*
நாகம்விண்குரங்குபுன்னை நற்றூசுமலைபாம்பியானை......*

(இ-ள்.) [சாகமென்பது] சிறுகீரை-வெள்ளாடு-தேக்கமரம் -தேனீய்க்கும்பெயர் [பாகலென்பது] பாகல் - பலாமரத்துக்கும்பெயர் [யூகமென்து] கருங்குரங்கு-அகப்பொருளறிதல்-தருக்கத்துக்கும்பெயர் [நாகமென்பது] ஆகாயம்-குரங்கு-புன்னைமரம்-நல்லாடை-மலைப்பாம்பு-யானைக்கும்பெயர்-எ-று. (ச)

திகிரியேமூங்கில்வட்டந் தேருருளாழிவெற்பாஞ் .........*
சிகியயம்பமஞ்ஞைதீயாந் தீதறுகேதுவும்பேர்...........*
ஞெகிழியேசிலம்பினமை நெருப்புறுகொள்ளிக்கும்பே ...*
எகினமேபுளிமாஞாளி கவரிமாநீர் நாயன்னம்...........*

(இ-ள்.) [திகிரியென்பது] மூங்கில்-வட்டவடிவு-தேர்-தேருருளை-சக்கராயுதம்- மலைக்கும்பெயர் [சிகியென்பது] மயில் - நெருப்பு - கேதுவெனுமோர் கோளுக்கும்பெயர் [ஞெகிழியென்பது] சிலம்பு-நெருப்புறுவிறகுக்கும்பெயர் [எகினமென்பது]புளி-மாமரம்-நாய்-கவரிமான்-நீர்நாய் - அன்னப்புள்ளுக்கும் பெயரொன்றவாறு.

ஆகுவேயெலியினமமாம்பெருச்சாளிக்கும்பேர் .........*
யோகமேதியானங்கூட்ட முபாயமாமுயற்சிக்கும்பேர்,யோ

இயிந்திரன்பாம்பென்ப போகில்புட்பொதுப்பூமொட்டாங்
கோகிலங் குயில்பல்லிப்பேர்குடங்கரோகுடிகைகும்பம் ...*

(இ-ள்.) [ஆகுவென்பது] எலி-பெருச்சாளிக்கும்பெயர் [யோகமென்பது] தியானம்-கூட்டம்-உபாயம்-உயர்சிக்கும்பெயர்[போகியென்பது] தேவேந்திரன்-பாம்புக்கும்பெயர்] போகிலென்பது]பறவைப்பொது பூவரும்புக்கும்பெயர் [கோகிலமென்பது] குயில்-பல்லிக்கும்பெயர் [குடங்கரென்பது]குடிசை குடத்துக்கும்பெயரென்றவாறு. (சு)

பொகுட்டுத்தாமரைப்பூங்கொட்டைபொருப்புச்சேற்றெழுந்தகொளி குத்தலேசெகுத்தல்வீழ்த்த விரித்தலோடழைத்தலீதல்.. [ப்பு
புகைக்கிடுநாமந்தூமம் ம்பாற்றும்யோசனைக் கும்பேரோ ... ...*
யகைத்தல்வேதனையொடித்த லறுத்திடலுயர்த்தலாமே... ...*

(இ-ள்.) [பொகுட்டென்பது] தாமரைக்கொட்டை-மலை- சேற்றிலெழுங்குமிழிக்கும்பெயர்[இகுத்தலென்பது]கொல்லுதல்-தள்ளுதல்-சாய்த்தல்-அழைத்தல்-கொடுத்தலுக்கும்பெயர் [புகையென்பது] புகை-யோசனை- தூரத்துக்கும்பெயர்[அகைத்தலென்பது] வருத்தம்-முறித்தல்-அறுத்தல்-உயர்த்தலுக்கும்பெயர்-என்றவாறு. (எ)

சிக்கமேகுடுமிநாமஞ் ப்புட னுறியுமேற்கும் ... ...*
கொக்குமாமரமேசெந்நாய் குரண்டமேமூலநாளாம் ... *
வக்கிரங்கொடுமைமீளன் மடங்குதலுடனேவட்டஞ் ......*
சக்கிரிகுயவன்செக்கான் றராபதிநெடுமால்பாம்பு .. .... *

(இ-ள்.) [சிக்கமென்பது]குடுமி-சிப்பு-உறிக்கும்பெயர் [கொக்கெனபது]மாமரம்-செந்நாய்-கொக்கு-மூலநட்சத்திரத்திற்கும்பெயர்[வக்கிரமென்பது]கொடுமை-மீளுதல்-மடங்குதல்-வட்டத்துக்கும்பெயர்[சக்கிரியென்பது] குயவன்-செக்கான்-அரசன்-திருமால்-பாம்புக்கும்பெயர்-எ-று. (அ)

தூக்கென்பபாட்டுங்கூத்துந் துலாமுமாராய்தலும்பேர். *
பாக்கென்பதெதிர்காலத்தைப்பகரிடைச்சொற்றுவர்க்காய்*
மேக்குமேற்றிசைமேலும்பேர்மெய்புண்மையுடலுமாமே*
யூக்கமேவலியுற்சாக முள்ளத்தின்மிகுதிக்கும்பேர் ...... *

(இ-ள்.) [தூக்கென்பது] செய்யுள்-கூத்து-நிறுபலம்-ஆராய்தலுக்கும்பெயர் [பாக்கென்பது] எதிர்காலவிடைச்சொல்- பாக்குக்கும்பெயர் [மேக்கென்பது] மேற்றிசை-மேலுக்கும்பெயர்[மெய்யென்பது]நிசம்-சரீரத்துக்கும்பெயர்[ஊக்கமென்பது]வலிமை-உற்சாகம்-உள்ளக்கிளர்ச்சிக்கும்பெயர்-எ-று. (கூ)

பகடிபம்பெருமையேறுபஃறியாண்மேதியைம்பேர் ... *
தகடிலையமைபென்ப தபனனேயிரவிதீயா... ... ...*
மகடென்பநடுவேகுக்கி யருளென்பகருணைசத்தி .........*
மகரந்தங்கள்ளுந்தேனு மலர்த்தாதும்வழங்குமுப்பேர் ...*

(இ-ள்.) [பகடென்பது] யானை-பெருமை-எருது-ஓடம்-எருமைக்கடாவுக்கும்பெயர்[தகடென்பது] இலை-அச்சவடிவுக்கும்பெயர் [தபனனென்பது]சூரியன்-நெருப்புக்கும்பெயர்[அகடென்பது]நடுவயிற்றுக்கும்பெயர் [அருளென்பது கிருபை சிவசத்திக்கும்பெயர் [ மகரந்தமென்பது] கள்- தேன்-பூந்தாதுக்கும் பெயர்-எ-று. (௰)

சகுந்தம்புட்பொறுநீள்பூகஞ் சடையென்பவேணிவேராஞ்*
சிகண்டியேபாலையாழின் றிறத்திசைமயிலலிப்பேர் ... ...*
சகுனிபுண்ணிமித்தம்பார்ப்பேன்சமமென்பதமரொப்பாகு
சகுனமேகிழங்குபுள்ளின் சாதியுநிமித்தமும்பேர் ...... [ஞ்

(இ-ள்.) [சகுந்தமென்பது]பறவைப்பொது-கமுகுக்கும்பெயர்[சடையென்பது]சடை-வேருக்கும்பெயர்[சிகண்டியென்பது]பாலையாழின்றிறத்தோரிசை மயில்-பேடிக்கும்பெயர்.[சகுனியென்பது] பறவை- சகுனம்பார்ப்பவனுக்கும் பெயர்[சமமென்பது]யுத்தம்-உவமைக்கும்பெயர்[சகுனமென்பது] கிழங்கு-பறவைச்சாதி-சகுனத்துக்கும்பெயர்-எ-று. (௰௧)

சக்கரம்பெருமையோர்புட் டரணியேபிறப்புவட்ட.*
மிக்கதேருருளையாழிவரையெனவிளம்புமெண்பேர்*
பக்கம்புட்சிறகுநட்பு பகர்திதியருகுமாகு ...... ...*
நக்கனேயருகன்சம்பு நிருவாணிநாட்டுமுப்பேர் ... *

(இ-ள்.) [சக்கரமென்பது]பெருமை ஓர்பறவை-பூமி-பிறப்பு-வட்டவடிவு தேருருளை-கடல்மலைக்கும்பெயர்[பக்கமென்பது]பறவையினிறகு-சிநேகம்-பிரதமைமுதலியதிதி-பக்கத்துக்கும்பெய்யர்[நக்கனென்பது]அருகன்-சிவன்-திகம்பரனுக்கும்பெயர்-எ-று. (௰௨)

பூகமேதிரளைபூகம் புன்கணென்பதுநேர்துன்பம் ......*
வாகுவேயழகுதோளா மாசியேமகமோர்மாதம் ... ... *
பாகமேபிச்சைபங்காம் பயோதரம்புயலேகொங்கை... [ம்.
வாகைபண்டொழுக்கம்வெற்றிதவந்தொழில்வழங்கன்மிக்கா

(இ-ள்.) [பூகமென்பது] திரண்டவடிவு -கமுகமரத்துக்கும்பெயர் [புன்கணென்பது]வியாதி-துன்பத்துக்கும்பெயர்[வாகுவென்பது] அழகு-புயத்துக்கும்பெயர்[மாசியென்பது]மகநட்சத்திரம்-ஓர்மாதத்துக்கும்பெயர் [பாகமென்பது] பிச்சை-பங்குக்கும்பெர் [ பயோதரமென்பது ] மேகம்-முலைக்கும்பெயர் [வாகையென்பது]குணம்-ஒழுக்கம்-விசயம்-தவர்-வேலைகொடுத்தால்-மிகுதிக்கும்பெயர்-எ-று. (௰௩)

தோக்கென்பதழகுபார்வை நுதலென்பபுருவநெற்றி*
சேக்கையேமிருகந்துஞ்சு மிடமுலைசிறந்தபாயல்...*
பூக்கமேகமுகூரென்ப புலிங்கந்தீப்பொறியூர்புள்ளா*
மாக்கம்பூமகள்செல்வப்பேர ரறல்கருமணநீராமே *

(இ ள்.) [நோக்கென்பது] அழகு - கண்ணுக்கும்பெயர் [நுதலென்பது] புருவம் - நெற்றிக்கும்பெயர் [சேக்கையென்பது] விலங்கின் படுக்கையிடம் மூலை-பாயலுக்கும்பெயர் [பூக்கமென்பது] கமுகமரம்-ஊர்க்கும்பெயர்[புலிங்கமென்பது] நெருப்புபொறி-ஊர்க்குருவிக்கும்பெயர் (ஆக்கமென்பது) இலக்குமி-செல்வத்துக்கும்பெயர் (அறலென்பது) கருமணல் நீருக்கும்பெயர்-எ-று

சிகரங்கரகம்வீசுங்கவரியுந்திவலையும்பேர்..................*
சாகரந்துயிலொழித்தல் சமுத்திரமிருபேர்சாற்றும் ......*
காகுளிதவிசுகண்டத் தெழுமொலியிசையுங்காட்டு.........*
மீகைபொன்கொடையிண்டைப்பேரிரவியேமலையாதித்தன்

(இ-ள்) (சீகரமென்பது) கரகம்-சாமரம் - துளிக்கும்பெயர் (சாகரமென்பது) நித்திரையொழிப்பு-கடலுக்கும்பெயர் (காகுளியென்பது) ஆசனம்-மிடற்றெழுமோசை - இசைக்கும்பெயர் (ஈகையென்பது) பொன் - கொடுத்தல்-இண்டங்கொடிக்கும்பெயர் (இரவியென்பது) மலை-சூரியனுக்கும்பெயர்-எ-று

தகையென்பதழகுபண்புதயையொடுபெருமைநாற்பே...*
ரகியென்பதரவிரும்பாமரிட்டமேகள்ளுக்காக்கை.........*
ககமென்பதம்புபுள்ளாங்கடுத்தலொப்பையம்வேக ,.. ...*
மகவல்பாமயிற்குரல்கூத்தந்தமேயழகீறென்ப ... ... ...*

(இ-ள்.) [தகையென்பது] அழகு-குணம்-அன்பு - பெருமைக்கும்பெயர் [அகியென்பது]பாப்பு-இரும்புக்கும்பெயர்[அரிட்டமென்பது ]கள்-காக்கைக்கும்பெயர்(ககமென்பது)அன்பு-பறவைக்கும்பெயர்[கடுத்தலென்பது]உவமை சந்தேகம்-சீக்கிரத்துக்கும்பெயர்(அகவலென்பது) ஓர்பா-மயிலொளி-ஆடலுக்கும்பெயர் (அந்தமென்பது) அழகு-முடிவுச்கும்பெயர்-எ-று. (௰சு)

அக்கென்பவிடமுறிப்பு மணிசங்குமணியுமாகும் .........*
நக்கலே நகைபுண்டர்பேர் ஞாட்பமாபாரங்கூட்ட ... ...*
மிக்கென்பகரும்புகள்ளா மீரமேகுளிர்ச்சியன்பு ... ...*
மக்கண்மானுடர்சிறார்பேர் வனாதலேகொள்ளனீக்கல் ... *

(இ-ள்) [அக்கென்பது] இடத்தின்முறிப்பு-சங்குமணிக்கும்பெயர் (நக்கலென்பது) சிரிப்பு-புசித்தலுக்கும்பெயர் (ஞாட்டென்பது) யுத்தம்-கனக்-கூட்டத்துக்குப்பெயர் (இக்கென்பது) கரும்பு-கள்ளுக்கும்பெயர் (ஈரமென்பது ) குளிர்ச்சி -அன்புக்கும்பெயர் (மக்களென்பது) மனிதர்- பிள்ளைகட்கும்பெயர் (வனாதலென்பது) கொள்ளுதல்-தள்ளுதலுக்கும்பெயர்-எ-று. (௰எ)

கேகயம்ஞ் ஞைஞயோர்பண் ணசுணலாக்கிளத்துமுப்பேர் . *
தோகையேமயில்வான்மஞ்ஞை விலங்கின்வால்சொல்லுமுப்

பேர்,போகமேபாம்பின்மெய்யம்போகத்தின்விகற்பமாகும்
போகுதநெடுமைநேர்மை போகுதலெனுமப்பேரே ... *

(இ-ள்.) (கேகயமென்பது) மயில்- ஓர்பெண் அசுணப்புள்ளுக்கும்பெயர். (தோகையென்பது) மயில்வால்-மயில் - மிருகத்தின்வாலுக்கும்பெயர் (போகமென்பது) பாம்பினுடல்-போகத்தின்வேறுபாட்டுக்கும்பெயர் (போகுதலென்பது) நீளம்-நேர்மை-போகுதலுக்கும்பெயர்-எ-று.

கைக்கிளையிசைவிகற்ப மொருதலைக்காமமப்பேர் ... ...*
சுக்கைதாரகைமாலைப்பேர்சூத்திரம்பொறிநூனூற்பா ... *
வெக்கமேசொறிதலோடு குவிதலுமிருபேரொன்ப ... ...*
மொக்குளேகுமிழிபூவின் முகுளெனமொழியலாமே ... *

(இ-ள்.) (கைக்கிளையென்பது) இராகத்தின்வேறுபாடு - ஒருதலைக்காமத்துக்கும்பெயர்(சுக்கையென்பது)நடசத்திரம் பூமாலைக்கும்பெயர் (சூத்திரமென்பது) இயந்திரம்-பஞ்சிநூல்- இலக்கணச்சூத்திரத்துக்கும்பெயர். (எக்கமென்பது) சொரிதல்-குவிதலுக்கும்பெயர்(மொச்குளென்பது) நீர்க்குமிழி - பூவரும்புக்கும்பெயரொன்றவாறு. (மக)

ககரவெதுகை-முற்றிற்று.

## ஙகரவெதுகை,

புங்கமேயுயர்ச்சியம்புபொருமம்பிற்குதைமப்பேரே ....*
திங்களப்புலிமாதப்பேர்சித்திரனேவன்றச்சன்..............*
கங்கென்பவரம்பின்பக்கங்கருந்தினைபருந்துமாமே ... ..*
தொங்கலேபீலிககஞ்சந் தூக்கொடுதொடுத்தமாலை ... ...*

(இ-ள்.) (புங்கமென்பது) உயரம்-அம்பு-அம்புக்குதைக்கும்பெயர் (திங்களென்பது) சந்திரன்- மாதத்துக்கும்பெயர் (சித்திரமென்பது) சித்திரக்காரன் தச்சனுக்கும்பெயர் (கங்கென்பது ) வரம்பின்பக்கம்- கருந்தினை- பருந்துக்கும் பெயர்-எ-று.
(க)

சங்கமேகணைக்காலேரரொண் சபைசங்குபுலவர்நெற்றி ... *
பங்கென்பமுடமேயாகும் பாதியுஞ்சனியுமேற்கும் .. ...*
வங்கமேவெள்ளிநாவாய் வழுதலையீயமாமே............ ... *
யங்கணஞ்சேறுமுற்ற மாஞ்சலதாரைக்கும்பேர்............*

(இ-ள்.) (சங்கமென்பது) கணைக்கால்-ஒரிலக்கம்-கூட்டம்-சங்கு-புலவர் நெற்றிக்கும்பெயர் (பங்கென்பது) முடம்-பாதி-சனிக்கும்பெயர் ( வங்கமென்பது) வெள்ளி மரக்கலம்-வழுதலை ஈயத்துக்கும்பெயர் (அங்கணமென்பது ) சேறு-முன்றில்-சலதாரைக்கும்பெயர்-எ-று.
(உ)

ஞாங்கர்வேல்பக்கமுன்பு மேலெனநான்குமாகுந் ... ...*
தூங்கலேநிருத்தம்யானை துயில்சோம்புதராசுதாழல் ..... *
வாங்கலேவளைத்தல்கொள்ளல் வையெனல்கூர்மைவைக்கோல்*
வேங்கைபொன்புலிமரப்பேர் வீநீக்கம்பூப்புட்சாவாம் ... *

(இ-ள்.) (ஞாங்கரென்பது) வேலாயுதம்-பக்கம்- முன்பு- மேலுக்கும்பெயர் (தூங்கலென்பது) கூத்து-யானை- நித்திரை-சோம்பல்- தராசு தாழ்தலுக்கும்பெயர் (வாங்கலென்பது) வளைத்தல் - கொள்ளுதலுக்கும்பெயர் (வையென்பது) கூர்மை-வைக்கோலுக்கும்பெயர் (வேங்கையென்பது) பொன்-புலி-ஓர்மரத்துக்கும்பெயர் (வீயென்பது) நீக்கம்-மலர்-பறவை-சாவுக்குப்பெயர்-எ-று. (௫)

மங்குல்காரிருள்விண்முப்பேர்மருந்தமுதொடுமெருத்தாம்*
பங்கியேபுறமயிர்க்கும் பகருமாண்மயிர்க்கும்பேரா ... *
மங்கதம்பன்னகந்தோ ளணியுடன்வசைச்சொல்லாகும் ... *
பங்கமேசேறுதூசு பழுதொடுபின்னடாமே... ... ...*

(இ-ள்.) (மங்குலென்பது) மேகம்-இருள்- ஆகாயத்துக்கும்பெயர் (மருந்தென்பது) அமுதம்-மருந்துக்கும்பெயர் (பங்கியென்பது) புறமயிர்-குடுமிக்கும்பெயர் (அங்கதமென்பது) பாம்பு-வாகுவலயம்- வசைச்சொல்லுக்கும்பெயர் (பங்கமென்பது) சேறு-வஸ்திரம்-குற்றம்-வேறுபாட்டுக்கும்பெயர்-எ-று. (௬)

அங்கமேயுடலுறுப்பென் பாரங்கங்கட்டிலும்பேர் ... ...*
பிங்கலம்பொன்னும்பொன்னி னிறத்தையும்பேசலாகும் *
பொங்கரேமரத்தின்கோடு பொருப்புயரிலவும்பேர் ...*
பொங்கலேகொதித்தன்மிக்காம் பொச்சாப்புமறதிதீதாம்.*

(இ-ள்.) [அங்கமென்பது] உடல்-அவயவம்-எலும்பு-வேதாங்கம்-கட்டிலுக்கும்பெயர் [பிங்கலமென்பது] பொன்-பொன்னிறத்துக்கும்பெயர் [பொங்கரென்பது] மரக்கொம்பு- மலை- இலவமரத்துக்கும்பெயர் [பொங்கலென்பது] பொங்குதல்-மிகுதிக்கும்பெயர்[பொச்சாப்பென்பது] மறதி-பொல்லாங்குக்கும்பெயர்-எ-று. (௭)

ஙகரவெதுகை-முற்றிற்று,

## சகரவெதுகை

பாசனமென்பசுற்றம் பாண்டமுண்கலமும்பன்னும் ... *
வாசமேயிருப்பிடம்பூ மணம்புள்ளின்சிறகுதூசாங் ... *
கோசமேமதிலுறுப்பான் குறிமுட்டைமறைபண்டாரந் *
தேசிகன்வணிகன்தேசாந் தரியொடுகுருவுமாமே ... ...*

(இ-ள்.) [பாசனமென்பது] உறவு- பாத்திரம்- உண்காலத்துக்கும்பெயர் [வாசமென்பது] இருப்பிடம்-பூமணம்- பறவையினிறகு- வஸ்திரத்துக்கும்பெயர் [கோசமென்பது] மதிலுறுப்பு-ஆண்குறி-முட்டை-புத்தகம்-பொக்கிஷத்துக்கும்பெயர் [தேசிகனென்பது] செட்டி-தேசாந்திரி-குருவுக்கும்பெயர்-எ-று.()

மூசன்மொய்த்திடல்சாவென்ப முடலையேதிரட்சியுண்டை*
சீசகங்குரங்குவேயான் கேழ்நிறமொளியொப்பாகும் ... *
வீசலேயெறிதலீவாம் வெம்மையுட்டினம்விருப்பங் ... *
கேசரமகிழ்பூந்தாதாங் கிருட்டியோரீற்றுப்பன்றி ......*

(இ-ள்.) [மூசலென்பது] மொய்த்தல் - சாவுக்கும்பெயர் [முடலையென்பது] திரண்டவடிவு-உருண்டவடிவுக்கும்பெயர் [சீசகமென்பது] குரங்கு -மூங்கிலுக்கும்பெயர் [கேழென்பது] நிறம்-பிரகாசம்- ஒப்புக்கும்பெயர் [வீசலென்பது] எறிதல்- கெடுதலுக்கும்பெயர் [வெம்மையென்பது] வெப்பம்-ஆசைக்கும்பெயர் [கேசரமென்பது] மகிழமரம்-பூந்தாதுக்கும்பெயர் [கிருட்டியென்பது] தலையீற்றுப்பசு-பன்றிக்கும்பெயர்-எ-று. (உ)

அசிபடைக்கலமேவாளே யவமதிச்சிரிப்புமுப்பேர் ... ...*
நிசியிராமஞ்சள்பொன்னு நீர்புனல்குணம்பூராடம் ... ...*
பிசியென்பபொய்யுஞ்சோறும் பேசரும்பொருளுமுப்பேர்
சுசிகோடைசுத்தந்தீயாஞ் சுடர்விளக்கிரவியங்கி ... ... *

(இ-ள்.) [அசியென்பது] ஆயுதம்-வாள்-அவமதிச்சிரிப்புக்கும்பெயர் [நிசியென்பது] இரவு-மஞ்சள் -பொன்னுக்கும்பெயர் [நீரென்பது] சலம்- பண்பு-பூராடநட்சத்திரத்துக்கும்பெயர் [பிசியென்பது] பொய்-சோறு- அரும்பொருளுக்கும்பெயர் [சுசியென்பது] கோடைகாலம் - சுத்தம்- நெருப்புக்கும்பெயர் [சுடரென்பது] விளக்கு-சூரியன்-நெருப்புக்கும்பெயர்-எ று. (௩)

ஆசென்பவிரைவுகுற்ற மற்பமெய்க்கவசநாற்பேர்... ...*
காசென்பகோழைகுற்றங் கதிர்விடுமணிமுப்பேரே ... ...*
ஆசினிபலாவிசேட மரவுரிமரக்காழ்விண்ணும்... ... ...*
தேசிகமழகுகாந்தி திசைச்சொலோர்கூத்துச்செம்பொன்*

(இ-ள்.) [ஆசென்பது] சீக்கிரம்- குற்றம்- சிறுமை- மெய்க்கவசத்துக்கும்பெயர் (காசென்பது) கோழை-குற்றம்-இரத்தினத்துக்கும்பெயர் (ஆசினியென்பது) ஈரப்பலா -மரவுரி- மரவயிரம் - ஆகாயத்துக்கும்பெயர் (தேசிகமென்பது) அழகு -ஒளி - அவ்வந்நாட்டுச்சொல் - ஓர்கூத்து - செம்பொன்னுக்கும் பெயர்-எ-று. (௪)

பச்சையேமரகதத்தோல் பரிமளப்புதன்மால்புந்தி... ...*
கச்சையென்பதுதழும்பு மயிரொடுகவசமும்பேர்... ...*

செச்சைமைவெட்சிதேய்வை திசையென்ப்திசைசுணங்கா.*
மிச்சையேபொய்த்தலாகு மிடித்தலஞ்ஞானமுப்பேர் ...*

(இ-ள்.) (பச்சையென்பது) மரகதம்-தோல் - ஓர்வாசனைப்புல்- திருமால்-புதனுக்கும்பெயர் (கச்சையென்பது) உடற்றழும்பு-கயிறு-கவசத்துக்கும்பெயர் (செச்சையென்பது) ஆடு-வெட்சி-சாந்தின்குழம்புக்கும்பெயர்(திசையென்து) திசை - தேமலுக்கும்பெயர் (இச்சையென்பது) பொய்-தரித்திரம்-அறிவில்லாமைக்கும்பெயரொன்றவாறு. (௫)

பிச்சமாண்மயிரும்பீலிக் குடையும்வெண்குடையுமாகும் *
கச்சம்யானைக்கழுத்திற்கயிறளவொடுமாக்கா... ... ...*
லெச்சமேகுறைசேயாக மிபமென்பமரக்கோடியானை... *
யச்சமேயகத்தியம்மை யஞ்சலிம்மூப்பேராமே ... ...*

(இ-ள்.) (பிச்சமென்பது) குடுமி-பீலிக்குடை - வெள்ளைக்குடைக்கும்பெயர் (கச்சமென்பது) யானைக்கழுத்திடுகயிறு அளவு-மரக்காலுக்கும்பெயர் (எச்சமென்பது) குறைவு-புத்திரன்-யாகத்திற்கும்பெயர் [இபமென்பது] மரக்கொம்பு-யானைக்கும்பெயர்[அச்சமென்பது] அகத்திமரம் அச்சவடிவு பயத்துக்கும்பெயரொன்றவாறு. (௬)

ஆசையேதிசைபொன்னம்பர்மாகுலம்வருத்தமோசை ...*
காசையேகாயா நாணல்காமர்தானழகுகாதல் ... ... *
பாசமேகயிறுகூலிபகருசித்துளையன்பாகும்... ... ...*
தூசென்பதாடையானைப் புரசைதூசிப்படைப்பேர் ...*

(இ-ள்.) [ஆசையென்பது] திக்கு - பொன் - இஷ்டத்துக்கும்பெயர் [ஆகுலமென்பது]வருத்தம்-சத்தத்துக்கும்பெயர்[காசையென்பது]காஞ்செடி நாணற்புல்லுக்கும்பெயர் [காமமொன்பது] அழகு-ஆசைக்கும்பெயர் [பாசமென்பது]கயிறு-பிசாசம்-ஊசித்தொளை-அன்புக்கும்பெயர்[தூசென்பது]புடவை யானைப்புரசை-படைமுன்னணிக்கும்பெயர்-எ-று. (௭)

தாசியேபரணிகூளை தளியென்பதளியேகோயில்... ... *
வேசரிகழுதையேகோ வேறுவேசரியுமாகும்... ... ...*
ஆசுகம்பகழிகாற்றும் அந்தரியுமைகேதுர்க்கை... ... *
கோசிகஞ்சாமவேதங் கூறுபட்டாடைக்கும்பேர் ... ...*

(இ-ள்) [தாசியென்பது] பரணிநட்சத்திரம்-அடியாளுக்கும்பெயர் [தளியென்பது] துளி-கோயிலுக்கும்பெயர் [வேசரியென்பது] கழுதை-கோவேறு கழுதைக்கும்பெயர் [ஆசுகமென்பது] அம்பு-காற்றுக்கும்பெயர் அந்தரியென்பது] பார்வதி - துர்க்கைக்கும்பெயர் [கோசிகமென்பது] சாமவேதம் - பட்டுவஸ்திரத்துக்கும் பெயர்-எ-று. (௮)

பசுவேறுசீவனுவாம் பாரதிவாணிதோணி ... ... ...*
வசுவேயான்கன்றும்பொன்னும் வசுக்களுந்தீயுநாற்பேர் *
அசமூவாண்டுறுநெல்லாடாம் அணையென்ப கனையேமெத்
தை-சசியென்பகர்ப்பூரஞ்சந் திரனயிராணிமுப்பேர் ...*

(இ-ள்.) [பசுவென்பது] இடபம்-உயிர் - பசுவுக்கும்பெயர் [பாரதியென்பது]சரஸ்வதி-தோணிக்கும்பெயர்[வசுவென்பது]பசுவின்கன்று-பொன்-தேவர்களிலோர்பிரிவாகிய அஷ்டவசுக்கள் - நெருப்புக்கும்பெயர் [அசமென்பது] மூன்றுவருடத்தநெல்-ஆட்டுக்கும்பெயர் [அணையென்பது]கனை - மெத்தைக்கும்பெயர் [சசியென்பது] கர்ப்பூரம்-சந்திரன்-இந்திராணிக்கும்பெயர்-எ-று.

விசும்புபொன்னுலகுமேகம் விண்ணொடுதிசையநாற்பேர் *
தசும்புநற்குடமிடாவாஞ் சாத்தனேயருகனைய ... ... *
னிசைபுகழ்கிளவிபாட்டா மேங்கலேயொலியிரங்கல் ...*
பிசுனனேகோளன்பொய்யனுலோபனும்பேசுமுப்பேர் *

(இ-ள்.) [விசும்பென்பது] தேவலோகம்-மேகம் - ஆகாயம் - திசைக்கும்பெயர் [தசும்பென்பது] குடம்-மிடாவுக்கும்பெயர் [சாத்தனென்பது] அருகன்-அரிகரபுத்திரனுக்கும்பெயர் (இசையென்பது) புகழ்-சொல் - பாட்டுக்கும்பெயர் (ஏங்கலென்பது) சத்தம் - அழுகலுக்கும்பெயர் (பிசுனனென்பது) கோளன்-பொய்யன்-உலுத்தனுக்கும்பெயர்-எ-று. (ம)

வச்சிரஞ்சதுரக்கள்ளி வயிரமேகுலிசமுப்பேர் ... ...*
நொச்சியேசிந்துவார மதில்சிற்றூர்நுவலலாமே ... *
தச்சனேசித்திரைப்பேர் தடபியன்றுனுமாகு... ... ...*
மூச்சிநண்பகலுச்சிப்பே ருறுப்பவயவமுடம்பாம் ... *

(இ-ள்)[வச்சிரமென்பது]சதுரக்கள்ளி-வயிரம்-வச்சிராயுதத்துக்குக்பெயர் (நொச்சியென்பது)நொச்சிச்செடி மதில்-சிற்றூருக்கும்பெயர்(தச்சனென்பது) சித்திரைநட்சத்திரம்-தச்சனுக்கும்பெயர் (உச்சியென்பது) நடுப்பகல் - உச்சந்தலைக்கும்பெயர் உறுப்பென்பது அவயவம்-சரீரத்துக்கும்பெயர்-எ று (மக)

பாசென்பபசுமைமூங்கில்பப்பென்பபரப்போடொப்பாம்
மாசென்பசிறுமைகுற்ற மழையழுக்கொடுநாற்பேரோ ...*
கேசம்பெண்மயிர்க்குமாண்பான் மயிருக்குங்கிளைத்தலாகும்
வாசியேகுழன்மூன்றுண்மா வாசியென்னேவனுற்பேர் ...*

(இ-ள்) (பாசென்பது)பசுமை-மூங்கிலுக்கும்பெயர்(பப்பென்பது)பரப்பு ஒப்புக்கும்பெயர் (மாசென்பது) அற்பம்-குற்றம்-மேகம்- அழுக்குக்கும்பெயர் கேசமென்பது கூந்தல்-குடுமிக்கும்பெயர்(வாசியென்பது)இசைக்குழல்-அச்சுவினிநட்சத்திரம்-குதிரை-வாசியென்னேவலுக்கும்பெயர்-எ-று. (மஉ)

மிசையென்பதுணவுமேடு மீமிசைச்சொல்லுமுப்பேர் .. *
விசயமேவென்றிவெல்லம் வெங்கதிர்மண்டலப்பேர் ... *
முசலியேயுடும்புதாழை முந்தியவிராமனேந்தி... ... *
வசதிநல்லிடமூர்வீடாம்வரனயன்பரமன்காந்தன்... ...*

(இ-ள்.) [மிசையென்பது] உணவு-மேடு- மீமிசைச்சொல்லுக்கும்பெயர் [விசயமென்பது] வெற்றி-வெல்லம்-சூரியமண்டலத்துக்கும்பெயர்[முசலியென்பது] உடும்பு-தாழை-பலதேவன்-ஓந்திக்கும்பெயர் [வசதியென்பது] நல்லிடம்-ஊர்- வீட்டுக்கும்பெயர் [வரனென்பது] பிரமன்- சிவன் - தலைவனுக்கும் பெயர்-எ-று. (௰௧)

சகரவெதுகை-முற்றிற்று.

# ஞகரவெதுகை.

துஞ்சலேநிலைபேறுகுந் துயில்சோம்புசாவுமாகும் .. *
பஞ்சரஞ்செருந்திகூடாம் பரதரோகழியர்நாய்கர்... .. *
கஞ்சமேதாளங்குல்லைகமலம்வெண்கலம்வட்டப்பம் .. *
குஞ்சமீயோட்டிநாழி குறள்குன்றிகுறளைச்சொல்லே ...*

(இ-ள்.) (துஞ்சலென்பது) நிலைபெறுதல்-நித்திரை-சோம்பல்- சாவுக்கும் பெயர் (பஞ்சரமென்பது) செருந்திமரம் -கூட்டுக்கும்பெயர் (பரதரென்பது) நெய்தநிலமாக்கள்-செட்டிகட்கும்பெயர் (கஞ்சமென்பது) தாளம்- கஞ்சா- தாமரை-வெண்கலம்-அப்பத்துக்கும்பெயர்(குஞ்சமென்பது)ஈயோட்டி-நாழிகை குறுமை-குன்றிக்கொடி-குறளைச்சொல்லுக்கும்பெயர்-எ-று. (௧)

நெஞ்சென்ப மனமார்பின்பேர் நிழல்செல்வங் குளிர்ச்சிசா
யை-மஞ்சுபூண்வலிவனப்பு மழையானைமுதுகிவ்வைத்தே*
வஞ்சிமேற்செல்வோரூர்பாவல்லிமென்மருங்குற்பெண்ணுந்
தஞ்சமேயெளிமையென்ப தருபற்றுக்கோடுமாமே ... *

(இ-ள்.) (நெஞ்சென்பது) மனம்-மார்புக்கும்பெயர் (நிழலென்பது) செல்வம்-குளிர்ச்சி-நிழலுக்கும்பெயர் (மஞ்சென்பது) ஆபரணம்-வலிமை-அழகு மேகம்- யானைமுதுகுக்கும்பெயர் (வஞ்சியென்பது) பகைவர்மேற்செல்லுதல்-ஓரூர்-ஓர்பா- ஓர்கொடி- பெண்ணுக்கும்பெயர் (தஞ்சமென்பது) எளிமை-பற்றுக்கோடுக்கும்பெயரொன்றவாறு. (௨)

அஞ்சனங்கறுப்புமெய்திக்காணையிலொன்றுமுப்பேர் ...*
மஞ்சரியேபூங்கொத்து மாலைசெந்தளிருமாகு ... ... *
மஞ்சலிவணங்கல்வாவர் பறவையுமாகுமென்ப ... ...*
விஞ்சியேபுரசையிஞ்சி யெறுழென்பவலிதண்டாமே... *

(இ-ள்.) (அஞ்சனமென்பது) கறுப்பு- மை -மேற்றிசையானைக்கும்பெயர் (மஞ்சரியென்பது) பூங்கொத்து -பூமாலை -தளிருக்கும்பெயர் (அஞ்சலியென்பது) கும்பிடல்-வாவற்பறவைக்கும்பெயர் (இஞ்சியென்பது) மதில் -இஞ்சிக்கும்பெயர் (எறுழென்பது) வலிமை-தண்டாயுதத்துக்கும்பெயர்-எ-று. (௫)

கிஞ்சுகமுருக்குச்செம்மை கிருட்டினன்முன்மால்பார்த்தன் *
கஞ்சனமேகண்ணுடி கரிக்குருவிக்கும்பேரே... ... ...*
பஞ்சமேசிறுமையைந்தாம் பகழியம்பிதன்குதைப்பேர் *
வஞ்சனைமாயைபொய்யா மாயன்மால்கருநிறத்தோன் ...*

(இ-ள்.) (கிஞ்சுகமென்பது) முருக்கமரம்-சிகப்புக்கும்பெயர் (கிருட்டினனென்பது) கண்ணன்-அருச்சுனனுக்கும்பெயர் (கஞ்சனமென்பது) கண்ணாடி கரிக்குருவிக்கும்பெயர் (பஞ்சமென்பது) சிறுவிலைக்காலம்- ஐந்துக்கும்பெயர் (பகழியென்பது) அம்பு-அம்புக்குதைக்கும்பெயர்(வஞ்சனையென்பது) மாயை பொய்க்கும்பெயர் மாயனென்பது) திருமால்-கருநிறத்தோனுக்கும்பெயர்எ-று

குஞ்சியாண்மயிர்புட்பார்புக் குன்றியின்புதன்மூப்பேரே *
வஞ்சமேகபடம்வாளா மாயம்வஞ்சனைபொய்யென்ப .. *
கஞ்சனேகுறளன்வேதன் களங்கந்தானழுக்குக்குற்றங் ...*
கஞ்சிகைசிவிகையாடை கட்டிடுதிரையுமாமே ... ... *

(இ-ள்.) [குஞ்சியென்பது] குடுமி - பறவைக்குஞ்சு- குன்றிப்புதருக்கும்பெயர் [வஞ்சமென்பது] கபடம் -வாளாயுதத்துக்கும்பெயர் [மாயமென்பது] வஞ்சனை-பொய்க்கும்பெயர் [கஞ்சனனென்பது] குறியன்-பிரமனுக்கும்பெயர் [களங்கமென்பது] அழுக்கு- குற்றத்துக்கும்பெயர் [கஞ்சிகையென்பது] தண்டிகை-வஸ்திரம்-திரைச்சீலைக்கும்பெயர்-எ-று. (௬)

ஞகரவெதுகை-முற்றிற்று.

---

# டகரவெதுகை,

நடலைவஞ்சனைபொய்யென்ப நடுங்கியநுடக்கமும்பேர் ...*
மடல்பனையேடுபோல்வ மலரிதழோர்நூற்கும்பேர் ... *
படர்நடைநினைப்புநோவாம் பகர்ந்திடில்வீரர்க்கும்பேர். .*
குடநகர்பசுவோர்கூத்துக்கும்பமேகரும்பின்கட்டி ... *

(இ - ள்.) [நடலையென்பது] கபடம் - பொய் - அசைவுக்கும்பெயர், [ மடலென்பது ] பனையோடுபோல்வன - பூவிதழ் - ஓர்பிரபந்தத்துக்கும் பெயர் [ படரென்பது ] வழி - நினைப்பு - துன்பம் - படை வீ ரருக்கும்

பெயர் (குடமென்பது) பட்டணம்-பசு-ஓர்கூத்து- குடம்-வெல்லக்கட்டிக்கும் பெயர்-எ-று. (௧)

மாடமேயுழுந்தோடில்லா மழையென்பகுளிர்ச்சிமேகம் . *
கூடமின்மறைவுகொல்லன் சம்மட்டிகுவட்டினுச்சி .. .. *
சேடனோர்சாதிபாங்கன் செகந்தாங்குமனந்தனென்ப ...*
கேடகம்பரிசைவேறோர் கேடியூர்பலகைமுப்பேர் ... *

(இ-ள்.) (மாடமென்பது) உளுந்து-வீட்டுக்கும்பெயர் (மழையென்பது) குளிர்ச்சி-மேகத்திற்கும்பெயர் (கூடமென்பது) வீடு-மறைவு- கொல்லன்-சம்மட்டி-மலையினுச்சிக்கும்பெயர் (சேடனென்பது) ஓர்சாதியான்- தோழன்- பூமிதாங்கு-மனந்தனென்னும் -பாம்புக்கும்பெயர் (சேடகமென்பது) தோற்பலகை-ஊர்-கேடகத்துக்கும்பெயர்-எ-று. (௨)

இடங்கரோமுதலைதூர்த்தர்குடங்கரிம்மூப்பேரொன்ப, முடங்கலேமடங்கல்கைதைமூங்கிலேயோலையம்பேர், படங்கு மேற்கட்டியென்பபகர்பெருங்கொடியுமாகும், விடங்கமேற்கொடிகொடுங்கை மிதவையேதெப்பஞ்சோறும்... .. *

(இ-ள்.) (இடங்கரென்பது) முதலை-விடர்-குடத்துக்கும்பெயர் (முடங்கலென்பது) மடங்குதல்-தாழை மூங்கில் -வியாதி- ஓலைக்கும்பெயர் (படங்கென்பது) மேற்கட்டி-பெருங்கொடிக்கும்பெயர்(விடங்கமென்பது) அழகு-துகிற்கொடி- கொடுங்கைக்கும்பெயர் (மிதவையென்பது) தெப்பம்- சோற்றுக்கும் பெயர்-எ-று. (௩)

குடிஞைபுட்பொதுவும்யாறுங் கூகையுமாகுமென்ப......*
தடிவயலுலக்கைவில்லுத் தண்டுமின்றசையுடும்பாந் ... ...*
தொடிவளையொருபலப்பேர் சூழ்தேகங்கணமுமாகு......*
மடியடங்குதலேசோம்பு வயிறுநோய்புடைவைதாழை ...*

(இ-ள்.) (குடிஞையென்பது) பறவைப்பொது-நதி-கோட்டானுக்கும்பெயர் (தடியென்பது) கழனி-உலக்கை-வில்லு- தண்டாயுதம்- மின்னல்-தசை-உடும்புக்கும்பெயர் (தொடியென்பது) கைவளை- ஒருபலம் -கங்கணத்துக்கும் பெயர் (மடியென்பது) அடங்குதல்-சோம்பல்- வயிறு-வியாதி- புடைவை-தாழைக்கும்பெயர்-எ-று. (௪)

படிவமேவடிவநோன்பாம் பந்தமேகிளையுங்கட்டும் ... ...*
வெடியச்சம்பரிமளிக்கு மென்புகைவெளியிம்மூப்பேர்...*
துடியேலம்பறைகாலப்பேர் தூய்த்தூய்துன்பற்றுக்கோடாம்.
கொடிறுபூசங்கதுப்பாங் குரவையேகடலோர்கூத்து ... *

(இ-ள்.) (படிவமென்பது) உருவம்-நோன்புக்கும்பெயர்(பந்தமென்பது) உறவு-கட்டுக்கும்பெயர் (வெடியென்பது) பயம்-நறும்புகை-வெளிக்கும்பெயர் (துடியென்பது) ஏலம்-குறிஞ்சிப்பறை-ஓர்காலத்துக்கும்பெயர் (தூவென்பது) சுத்தம் -தசை- பற்றுக்கோட்டுக்கும்பெயர் (கொடிறென்பது) பூசநட்சத்திரம்-கபோலத்துக்கும்பெயர் (குரவையென்பது) கடல்-ஓர்கூத்துக்கும்பெயர்-எ-று

கடிகைநாழிகையேதுண்டங் கதவிடுதாளேழுப்பேர்......*
படிறுபொய்களவிரண்டாம் பகர்தலேவிற்றல்பேசல் ... *
சுடிகையேமகுட்முச்சி சுட்டியுமிட்டபேரோ ... ... ...*
யிடியிடிப்பேரோனென்மா வெற்றிடுமுறுதிச்சொல்லே...*

(இ-ள்.) (கடிகையென்பது) நாழிகை-துணிக்கை- கதவிடுதாளுக்கும்பெயர் (படிறென்பது) பொய்-களவுக்கும்பெயர் (பகர்தலென்பது) விற்றல்-பேசலுக்கும்பெயர் (சுடிகையென்பது) கிரீடம்-நடுத்தலை-நெற்றிச்சுட்டிக்கும்பெயர் (இடியென்பனு) இடி-நென்மா-உறுதிச்சொல்லுக்கும்பெயர்-எ-று. ௬

நாடிநர்சிகைநரம்பா நந்தல்கேடுடனேயாக்கம்... ...*
பாடியேநகரநாடு பாசறையாயரூர்ப்பேர்... ... ... *
கோடிகந்துகில்பூந்தட்டாங் குடம்பையேமுட்டைகூடு ...*
கோடியெண்புதுமைதுசாங் குடுமியேவெற்றியுச்சி ...*

(இ - ள்.) [நாடியென்பது] மூக்கு - நரம்புக்கும்பெயர் [நந்தலென்பது] கேடு-ஆக்கத்துக்கும்பெயர் [பாடியென்பது] நகரம்-நாடு- முனைமேற்சென்றோருறைவிடம்- ஆயர்பாடிக்கும்பெயர் [கோடிகமென்பது] வஸ்திரம் பூந்தட்டுக்கும்பெயர் [குடம்பையென்பது] முட்டை கூட்டுக்கும்பெயர் [கோடியென்பது] ஒவொண்-புதுமை-வஸ்திரத்துக்கும்பெயர் [குடுமியென்பது] விசயம்-உச்சிக்கும்பெயரொன்றவாறு. (எ)

உடுவிண்மீன்கிடங்குநாவா யோட்டுங்கோலம்பிலீர்க்காங்.*
கடுவிடமுள்ளுத்தானே யரிதகிகசப்புநாற்பேர் ... ... *
படுமரக்குலையேகள்ளுப் பரவுநீர்நிலைநன்மைப்பேர்......☆
படுதலேயொலிபின்றுதல் பகரினுண்டாதல்பூத்தல்... ...*

(இ-ள்.) [உடுவென்பது] நட்சத்திரம்- அகழி- மரக்கலமோட்டுங்கோல்-அம்பினிறகுக்கும்பெயர் [கடுவென்பது] நஞ்சு-முள்- கடுமரம்-கசப்புக்கும்பெயர் [படுவென்பது]மரக்குலைகள்-குளம்-நன்மைக்கும்பெயர் [படுதலென்பது] சத்தம்-இல்லாமை-உண்டாதல்-பூத்தலுக்கும்பெயர்-எ-று. (அ)

மாடுபொன்பக்கஞ்செல்வம் வைகல்வைகறைநாட்ங்கள் ...*
சேடென்பபெருமைநன்மை திரட்சியேயழகுநாற்பேர் ...*
பாடிடம்பெருமையோசை பட்டேபட்டாடைசிற்றா ... *
ரீடென்பகுழைவேயொப்பே வலியொடுபெருமையென்ப.

(இ-ள்.) [மாடென்பது] பொன்- பக்கம் - செல்வத்துக்கும்பெயர் [வைகலென்பது] விடியற்காலம் - நாள் - தங்குதலுக்கும்பெயர் [சேடென்பது] பெருமை - நன்மை - திரண்டவடிவு - அழகுக்கும்பெயர் பாடெ

ன்பது] இடம் - பெருமை- ஒலிக்கும்பெயர் [பட்டென்பது] மட்டுவஸ்திரம்-சிற்றூருக்கும்பெயர் [ஈடென்பது] நெகிழ்தல்-ஒப்பு-வலிமை- பெருமைக்கும் பெயரொன்றவாறு. (க)

மடையென்பமதகுசோறுமணிப்பணிக்கடைப்பூட்டும்பேர் *
படைபடைக்கலங்கலப்பைபரிக்கைபல்லணமேதானே ... *
அடைநடுவென்பமற்று மிடப்பெயர் நுசுப்புமாமே... ... *
மடமறியாமைசத்திர மன்னியமுனிவாசப்பேர்... ... ... *

(இ-ள்) [மடையென்பது]மதகு-சோறு-ஆபரக்கடைப் பூட்டுக்கும்பெயர் [படையென்பது] ஆயுதம்-கலப்பை-நித்திரை-குதிரைச்சேணம்- சேனைக்கும் பெயர் [இடையென்பது] நடு - இடம் - இடைக்கும்பெயர் [மடமென்பது] அறிவின்மை-சத்திரம்-முனிவரிருப்பிடத்தும்பெயர்-எ-று. (ய)

வாடையென்பதுதான்வீதி வடகாற்றுத்தானுமாமே... ... *
யாடுமேழகம்வெற்றிப்பே ரல்கனாட்குருங்கல்லைவகல்... ... *
கோடைமேய்காற்றிஞேடு குதிரைவெண்காந்தளென்ப... *
ஒடைநீர்நிலைகிடங்கே யொளிமணிப்பட்டமும்பேர் ... ... *

(இ-ள்.) [வாடையென்பது] தெரு - வடகாற்றுக்கும்பெயர் [ஆடென்பது] ஆடு - வெற்றிக்கும்பெயர் [அல்கலென்பது] நாள் - குறைதல்- தங்கலுக்கும்பெயர் [கோடையென்பது] மேல்காற்று-குதிரை- வெண்காந்தளுக்கும்பெயர் [ஓடையென்பது] தடாகம் அகழி-நெற்றிப்பட்டத்துக்கும்பெயர்-எ-று. ()

அடுப்பென்பபரணிநாளே யச்சமேசுல்லிமும்பேர் ... ... *
வடுச்செம்புதழும்புவண்டா மத்தகநெற்றிசென்னி ... ... *
இடக்கரேமறைத்தவார்த்தை கும்பமுமென்பநூலோர் ... *
கடைப்பிடிமறப்பிலாமை கருதியதேற்றலாமே... ... ... *

(இ-ள்.) [அடுப்பென்பது] பரணிநட்சத்திரம் - பயம் - அடுப்புக்கும்பெயர் [வடுவென்பது] செம்பு - தழும்பு - வண்டுக்கும்பெயர் [மத்தகமென்பது] நெற்றி - தலைக்கும்பெயர் [இடக்கரென்பது] மறைத்தசொல் - குடத்துக்கும்பெயர் [கடைப்பிடியென்பது] மறவாமை-தேற்றத்துக்கும்பெயர் எ-று. (யஉ)

பட்டமேயோடைதூசு பதவிவாள்கவரிமாவாம் ... ... ... *
புட்டமேகாகமாகும் புடைவாயுநிறைவுமப்பேர்... ... *
குட்டமேதொழுநோயாழங்குளமெனப்பெயர்முப்பாற்றே,
வட்டமேபரிசைநீர்ச்சால் வலயங்கைம்மணிதூர்சூர்கோள். *

(இ ள்.) [பட்டமென்பது] குளம் - வஸ்திரம் - பதவிவாள் - கவரிமாவுக்கும்பெயர் [புட்டமென்பது] காக்கை - சீலை - நிறைவுக்கும்பெயர் [குட்டமென்பது] குஷ்டவியாதி - ஆழம் - குளத்துக்கும்பெயர் [வட்டமென்பது] நீர்ச்சாவல் - வட்டவடிவு - கைம்மணி - சீலை-பரிவேட்த்துக்கும்பெயர்-எ-று.

திட்டையேபுரலுமேடுந் திண்ணையுநண்ணுமுப்பேர்.......*
தட்டையேவ்கிணைத்தாள்கிளிகடிகோலேமுண்டம்*
கிட்டியேதலைபீற்றுவாங் கிருட்டியாத்தாளமும்பேர்... ...*
கட்டளைநிறைகல்லொப்பே யிட்டிகையியற்றலாணி .. ...*

(இ-ள்.) [திட்டையென்பது] உரல் - மேடு - திண்ணைக்கும்பெயர் [தட்டையென்பது] மூங்கில் - தினைத்தாள் - கிளிகடிகோல் - மொட்டைக்கும்பெயர் [கிட்டியென்பது] தலையீற்றுப்பசு - பன்றி - கைத்தாளத்துக்கும்பெயர் [கட்டளையென்பது] நிறையறிகருவி - உவமை - செங்கலியற்றுங்கருவி-உரையறிகருவிக்கும்பெயர்-எ-று. (௰ச)

நாட்டங்கண்ணோர்பண்வாளா நாகுசங்கிளமைநத்தை......*
யோட்டமேலுதடேதோல்வி யுயிரொன்பகாற்றேசீவன் ...*
கோட்டங்கோண்டடப்பைநாடு கோயிலெளவியமான்கொட்
டி,தோட்டியங்குசங்கபாடந் துணையென்பதளவுமொப்பும்*

(இ-ள்.) [நாட்டமென்பது] கண் - ஓர்பண் - வாளாயுதத்துக்கும்பெயர் [நாகென்பது] சங்கு - இளமை-நத்தைக்கும்பெயர் [ஓட்டமென்பது]மேலுதடு தோற்றலுக்கும்பெயர் [உயிரென்பது] காற்று - சீவனுக்கும்பெயர் [கோட்டமென்பது] கோணல்-மருதநிலத்தூர்-நாடு கோயில்-அழுக்காறு-தொழுவத்துக்கும்பெயர் (தோட்டியென்பது) யானைத்தோட்டி- கதவுக்கும்பெயர் (துணையென்பது) அளவு-ஒப்புக்கும்பெயர்-எ-று. (௰ரு)

தடமலைபெருமைகோணன் சரிகரையகலம்வாவி ... ...*
யடல்கொலைவலிபோராகு மருத்தமேபொருள்பொன்பாதி*
யுடல்பொருளாகமென்ப வோங்கல்வெற்புயரமூங்கில் ...*
விடபமேயிடபராசி விடைமரக்கொம்புமுப்பேர் ......*

(இ-ள்.) (தடமென்பது) மலை - பெருமை - வளைவு - வழி - குளக்கரை-அகலம் - குளத்துக்கும்பெயர் (அடலென்பது) கொல்லுதல் - வல்லமை - யுத்தத்துக்கும்பெயர் (அத்தமென்பது) சொற்பொருள்-பொன் - பாதிக்கும்பெயர் (உடலென்பது) பொன் - உடலுக்கும்பெயர் (ஓங்கலென்பது)மலை-உயர்ச்சி-மூங்கிலுக்கும்பெயர் (விடபமென்பது) இடபவிராசி-இடபம் - மரக்கொம்புக்கும்பெயரொன்றவாறு. (௰சு)

கடகமேசேனைவட்டங் கைவளைமதிற்பேரே.........*
வடகத்தோளத்தவாளம்வலமென்பதிடமேவெற்றி.......*
படுவிகள்விற்பாள்குண்டம் பரமென்பகவசமெய்யா......*
நொடிபிதிர்கிளவியாகு ஞானநிச்சயமேகுன்றல்...........*

(இ-ள்.) [கடகமென்பது] சேனை - வட்டவடிவு - கைவளை - மதிலுக்கும்பெயர் [வடகமென்பது] தோல்- உல்லாசத்துக்கும்பெயர் [வலமென்பது] இடம் - வெற்றிக்கும்பெயர் [படுவியென்பது] கள்விற்பவள் - வசவிக்கும்பெயர்

[பரமென்பது] கவசம் - சரீரத்துக்கும்பெயர் [நொடியென்பது] கைந்நொடி-சொல்லுக்கும்பெயர் [நானமென்பது] நிச்சயம்-குறைதலுக்கும்பெயர்-எ-று. ()

கடங்கயிறுவாக்கான்சார கதுப்புகமூடம்புநீதி ....... ...*
குடங்கடாமீமம்ய னைக் குழாங்கடன்மூழவைந்தேழா ... *
மடங்கலேசயனிசிய மறலிநோயுகமூழித்தீ ........ ......*
படங்கரிமுகபடாநற் றுகில்பாம்பின்பணமுப்பேரோ.....*

(இ-ள்) [கடமென்பது] கபிறு-யானைக்கவுள் -காடு- அருநெறுசரீரம்-நியாயம்-குடம்-யானை-மதம்-சுடலை-யானைக்கூட்டம் கடன்-குடமுழாவுக்கும்பெயர் [மடங்கலென்பது] இடி-சிங்கம்-இயமன்- வியாதி-யுகம்- வடவாமுகாக்கினிக்கும்பெயர் [படமென்பது] யானைமுகபடாம்-வஸ்திரம்- பாம்பின்படத்துக்கும் பெயரொன்றறு. (௰அ)

ஆடலேபெண்ணுண்கூடல் வார்த்தைகூத்தாடல்வென்றி...*
பாடலஞ்சிவப்பிம்னுடு பாதிரிகுதிரைமுப்பேர் ........*
கோடரங்குரங்குசோலை கொம்பொடுகுதிரையாகு ...... *
மாடவர்புருடர்நாம மாமினையவர்க்கும்பேரே ..........*

(இ-ள்.) [ஆடலென்பது] பெண்ணுண்கூடல்-வார்த்தை-கூத்தாடல்-வெற்றிக்கும்பெயர் [பாடலமென்பது] சிவப்பு- பாதிரிமரம்- குதிரைக்கும்பெயர் [கோடரமென்பது]குரங்கு-சோலை- மரக்கொம்பு-குதிரைக்பெயர்[ஆடவரென்பது] ஆண்மக்கள்-இளைஞருக்கும்பெயர்-எ-று. (௰க)

கடிமணம்விரைவுகூர்மை காலம்பேர்விளக்கங்காப்பு.....*
வடிவச்சம்வாசமையம் வரைவுவிம்மிதமேழாரும் ... ...*
வடுகேயிந்தளராகப்பேர் மருதயாழ்த்திறனுமாமே .....*
வடவையேகுதிரைப்பெட்டை யுவாப்பிடிவடவைத்தீயாம் *

(இ ள்.) [கடியென்பது] கலியாணம்-சீக்கிரம்-கூர்மை- காலம்-பிசாசம்-விளக்கம்-காவல்-அங்குல்-பயம்-வாசனை-சந்தேகம்-நீக்கல்- அதிசயத்துக்கும்பெயர்[வடுகென்பது] இந்தளராகம்-மருதயாழ்த்திறத்துக்கும்பெயர் [வடவையென்பது] பெண்குதிரை-பெண்யானை-ஊழித்தீய்க்கும்பெயர்-எ-று. (உ௰)

கோடுசங்கூதுகொம்பு மரக்கொம்புவிலங்கின்கொம்பு ... *
மோடுசெய்வரம்புகுன்றின் முகடுநீர்க்கரையேழ்பேராம் . *
மோடுமேடுதரமாகும் முறுவலேநகைத்தல்பல்லாம் ......*
ஆடியேயோர்மதங்கண் ணடியுத்திராடமாமே ... ... *

(இ-ள்.) [கோடென்பது] சங்கு-ஊதுகொம்பு-மரக்கொம்பு -மிருகத்தின் கொம்பு- கழனிவரம்பு - மலையினுச்சி- நீர்க்கரைக்கும்பெயர் [மோடென்பது] மேடு-வயிற்றுக்கும்பெயர் [முறுவலென்பது] சிரித்தல்-பல்லுக்கும்பெயர் [ஆடியென்பது] ஓர்மாதம்-கண்ணடி-உத்திராடநட்சத்திரத்துக்கும்பெயர் -எ-று. ()

தட்டுத்தேர்நடுவுகுற்றந் தட்டொடுபெரிசைமுட்டாகு ...*
செட்டிவாணிகன்செவ்வேளாம் செப்புரைகரண்டகப்பேர் *
மட்டெடன்பதெல்லைகள்ளாம் மார்க்கமேசமயம்வீதி ... *
பட்டிகையென்பகச்சுப் பகடெனிரதமாமே... ... ...*

(இ-ள்.) [தட்டென்பது] தேர்-நடுவு-குற்றம்-தட்டு-கேடகம்- விக்கினத்துக்கும்பெயர் [செட்டியென்பது] முருகனுக்கும்பெயர் [செப்பென்பது] சொல் கரண்டகத்துக்கும்பெயர் [மட்டென்பது] எல்லை - கள்ளுக்கும்பெயர் [மார்க்கமென்பது] சமயம்-தெருவுக்கும்பெயர் [பட்டிகையென்பது] மூலக்கச்சு-தெப்பம்-அரைஞாணுக்கும்பெயர்-எ-று. (௨௨)

கடைமுடிவிடம்வாயிற்பேர் களேபரம்பிணமுடம்பா ... *
முடைதுகில்செல்வமென்ப வுடுக்கைதண்ணிமைதிற்பேர்.,
அடையிலைகனமேயப்ப மடுத்தல்செல்வழியைம்பேராம் . *
நடைவழியொழுக்கஞ்செல்வம் நாணென்பகயிரன்பாமே ...*

(இ-ள்.) [கடையென்பது] முடிவு- இடம் -வாயிலுக்கும்பெயர் [களேபரமென்பது] பிரேதம்-சரீரத்துக்கும்பெயர் [உடையென்பது] வஸ்திரம் -செல்வத்துக்கும்பெயர் [உடுக்கையென்பது] உடுக்கை- வஸ்திரத்துக்கும்பெயர் [அடையென்பது] இலை-பாரம்-அப்பம்-அடுத்தல்-வழிக்கும்பெயர் [நடையென்பது] வழி-ஒழுக்கம்-செல்வத்துக்கும்பெயர் [நாணென்பது] கயிறு-இஷ்டத்துக்கும்பெய ரென்றவாறு. (௨௩)

விடையெதிர்மொழியுமேறும் விடுத்தலும்விளம்புமுப்பேர்
கிடைகிடையுவமைநெட்டி கீதமேயிசையும்வண்டும் ......*
படியங்கவடிசோபானம் பகைகுணமுவமைபாராம்... ...*
குடிகுலம்புருவமூராம் கொடிவல்லிதுவசங்காக்கை ... ...*

(இ-ள்.) [விடையென்பது] எதிர்மொழி-இடபம்-அனுப்பலுக்கும்பெயர் [கிடையென்பது] கிடை-உவமை-சடைக்கும்பெயர் (கீதமென்பது) இராகம் வண்டுக்கும்பெயர் (படியென்பது) குதிரையங்கவடிகற்படி-பகை-பண்பு-ஒப்பு பூமிக்கும்பெயர் (குடியென்பது) சாதி- புருவம்- ஊருக்கும்பெயர் (கொடியென்பது) படர்கொடி-தகிற்கொடி-காக்கைக்கும்பெயர்-எ-று. (௨௪)

நாட்டமேநடனங்கேடாம் நகரென்பமனையமூரும்... ...*
தோட்டலென்பதுவேயுண்ட லேண்டல்கை தீண்டன்முப்
பேர், தட்டலேதடைகிட்டற்பேர்தையொருமாதம்பூசம்....*
கட்டலென்பதுதடுத்தல் களைத்தல்பற்றித்தல்கள்ளல்......*

(இ-ள்.) [நட்டமென்பது) கூத்து-கேட்டுக்கும்பெயர் (நகரென்பது)வீடு ஊருக்கும்பெயர் (தொட்டலென்பது) உண்டல்-தோண்டுதல்-கையாற்றொடுத்தலுக்கும்பெயர் (தட்டலென்பது) தடுத்தல்-கிட்டுதலுக்கும்பெயர் (தையென்பது) ஓர்மாதம்-பூசநட்சத்திரத்துக்கும்பெயர் (கட்டலென்பது) தடுத்தல்-களைத்தல்-கட்டல்-திருடலுக்கும்பெயர்-எ-று. (௨௫)

புட்கரநிறைவுபாண்ட மூகந்தீர்த்தம்புனல்வான்சேனம் ..*
கட்கம்பங்கயமேயானைக் கைநுனி குருகோர்தாம்........*
வெட்சியென்பதுவேசெச்சை மிகுநிரைகவர்தலென்பு....*
பெட்டென்பபெருமையன்பாம்பிரசந்தேன்மதுவண்டாமே.

(இ-ள்.) (புட்கரமென்பது) நிறைவு-பாண்டமுகம்-தீர்த்தம்-நீர்-ஆகாயம் பருந்து-வாளாயுதம் தாமரை-யானைத்துதிக்கைநுனி- குருசெனுமோர்-பறவைக்கும்பெயர் (வெட்சியென்பது) வெட்சிப்பூஞ்செடி-பகைஞர்-பசுக்கூட்டத்தைக்கவர்தலுக்கும்பெயர் (பெட்டென்பது ) பெருமை - இஷ்டத்துக்கும்பெயர் [பிரசமென்பது]தேன் கள்-வண்டுக்கும்பெயர்-எ-று. (௨௬)

அடுதலேயட்டலென்ப வடர்தலுங்கொலையுமப்பேர்.....*
சடிலமேநெருங்கலோடு சடைகுதிரையுமப்பேர்... ...... *
படலையேபடர்தன்மாலை பதலையேவாசிக்கோவை ........*
கிடுகுநேர்மரச்சுற்றின்பேர் பரிசைக்குங்கிளர்த்தலாமே...*

(இ ள்.) [அடுதலென்பது] தீயிற்பாகமாக்குதல்-நெருங்கல்- கொல்லுதலுக்கும்பெயர் [சடிலமென்பது] நெருக்கல்-சடை-குதிரைக்கும்பெயர்[படலையென்பது] பரந்தவடிவு பூமாலை- வாயகன்றபறவை- குதிரைக்கிண்கிணி-மாலைக்கும்பெயர் [கிடுகென்பது] தேரின்மரச்சுற்று-கேடகத்துக்கும்பெயர்-எ-று. (௨௭)

படலிகைபீர்க்குவட்டம் பரந்தகம்மணிப்பூந்தட்டாம் ...*
கொடியனேகொடியன்கேதாம்குண்டாழந்தாழ்வாண்மாவே
தொடுவென்பமருதப்பூமி தோட்டங்கைதவமுப்பேரோ...*
மூடிமயிர்மூடியேசென்னி மகுடமுமொழியலாமே ...*

(இ-ள்.) [படலிகையென்பது) பீர்க்கு-வட்டவடிவு- கம்மணிப்பூந்தட்டுக்கும்பெயர் (கொடியனென்பது ) துன்மார்க்கன் - கேதுவெனும்பாம்புக்கும் பெயர் [குண்டென்பது) ஆழம்-தாழ்வு- ஆண்குதிரைக்கும்பெயர் (தொடுவென்பது) மருதநிலம்-தோட்டம்-வஞ்சத்துக்கும்பெயர் (மூடியென்பது) மயிர்மூடி-தலை-கிரீடத்துக்கும்பெயர்-எ-று. (௨௮)

ஆடகந்துவரைபொன்னு மஞராறிவிலரோ துக்கம் ... ... *
கோடகமுடியுறுப்புங் குதிரையும்புதுமையும்பேர் ......*
பீடிகையாவணம்பூந் தட்டொடுபீடமுப்பேர் ... ...*
தோடுபூவிதழேபெண்ணை மடல்போலதொகுதிக்கும்பேர்.*

(இ-ள்.) [ஆடகமென்பது) துவரை-பொன்னுக்கும்பெயர் (அஞரொன்பது) அறிவிலார்-துயரத்துக்கும்பெயர் (கோடகமென்பது) முடியுறுப்பு - குதிரை- புதுமைக்கும்பெயர் (பீடிகையென்பது) கடைவீதி - பூந்தட்டு- ஆசனத்துக்கும் பெயர் (தோடென்பது) பூவினிதழ்-பனையேடுபேடுபோல்வன-கூட்டத்துக்கும் பெயரொன்றவாறு. (௨௯)

அடரொன்பநெருங்குதற்பே ராம்மையின்வடிவுமாகும்...*
விடர்முனியிருப்புத்தூத்தர் கமற்வெற்பின்முழைகாடைம்பேர்

விடலையேதலைவன்பேரும் விறலொன்றன்பேருமாகும் ... *
அடிசெண்டுவெளிதானாதி கவிகையின்பாதமாமே ... *

(இ-ள்,) [அடவொன்பது) நெருங்கல் - அச்சவடிவுக்கும்பெபர் (விடவொன்பது) முனிவரிருப்பிடம்-ஊத்தர்-வெடிப்பு-மலைப்பிளப்பு - காட்டுக்கும்பெயர் விடலையென்பது) பாலைநிலத்தலைவன்- வெற்றியாளனுக்கும்பெயர்(அடியென்பது) குதிரை-வையாளிவீதி-கால்முதல் பாட்டினடிக்கும்பெயர்-எ-று. (௩௰)

டகரவெதுகை முற்றிற்று.

## ணகரவெதுகை.

புணர்வுதோய்ந்திடலிசைப்பாம் பொழில்புவிபெருமைசோலை
உணர்வென்பதெளிவேயூட லொழிதலேயறிவுமாகும் ... *
குணமென்பகயிறுபண்பு கும்பம்விண்ணுணிறுத்தபேர் ... *
கணமுடுநோய்த்திரட்சி காலநுட்பம்பேய்வட்டம் ... ... *

(இ-ள்) (புணர்வென்பது) கல்வி - இசைப்புக்கும்பெயர் (பொழிலென்பது) பூமி - பெருமை - சோலைக்கும்பெயர் (உணர்வென்பது) தெளிவு- ஊடலொழித்தல் - அறிவுக்கும்பெயர் (குணமென்பது) கயிறு - குணம் - குடம்-விண்ணுணிக்கும்பெயர் (கணமென்பது) நட்சத்திரம்-ஓர்நோய்-கூட்டம்- காலநுட்பம்-பேய்-வட்டவடிவுக்கும்பெயரொன்றவாறு. (க

ஆணமேகுழம்பேபாடம்பாம் அலநாஞ்சிலமைவுமாமே...*
யோணமாம்யாறளாறு முதியமிலாபங்கல்வி ...... ......*
காணமேபரியூண்செக்கோர் கண்ணல்பொற்காசுநாற்பேர்*
கோணமேமாறுபாடுங் கூனுமாம்வளையுமாமே... ......*

(இ-ள்.) (ஆணமென்பது) குழம்பு - இலிடத்துக்கும்பெயர் (அலமென்பது) கலப்பை - அமையுமென்றலுக்கும்பெயர் (ஓணமென்பது)திருவோண நட்சத்திரம்- நதிக்கும்பெயர் [ஊதியமென்பது] ஆதாயம்-வித்தைக்கும்பெயர் காணமெமென்து) குதிரையுண்வு- செக்கு-ஓர்சட்பிராணி - பொற்காசுக்கும்பெயர்(கோணமென்பது) மாறுபாடு-கூன்-வளைவுக்கும்பெயர்-எ-று. (௨)

குணில்குறுந்தடிகடிப்பாங் குல்லையேதுளவுவெட்சி... ...*
மணிநவமணியேகண்டை மனப்பொடுகருமைநன்மை ... *
துணிசோதிநாளே துண்டந் துளிமழைத்துளிபெண்ணுமை
பிணிமுகமயிற்புட்பேராம் பிசிதநீரிலறச்சிவேம்பு ... ...*

(இ-ள்) (குணிலென்பது) குறுந்தடி-பறையடிக்குங் குறுந்தடிக்கும்பெயர். (குல்லையென்பது) துளசி - வெட்சிப்பூஞ்செடிக்கும்பெயர் (மணியென்பது) நவமணி - யானைமணி - அழகு - கறுப்பு - நன்மைக்கும்பெயர் (துணியென்பது) சோதிநட்சத்திரம் - துண்டத்துக்கும்பெயர் (துளியென்பது) மழைத்

துளி-பெண்ணுமைக்கும்பெயர் (பிணிமுகமென்பது) மயில்- பறவைப்பொதுவுக்கும்பெயர் (பிசிதமென்பது) நீர்-இறைச்சி-வேம்புக்கும்பெயர்-எ-று. (௩)

நாணிலச்சைப்பேர் தானே கயிறொன்று நாட்டலாகும் ..... *
தோணியேகடைநாள்மரக்கலந் தொடுகணைதெப்பஞ்சேறு.. *
வாணியேயோர்கூத்தின்பேர் வாக்குநாமகளுமாமே ..... *
ஏணியேயுலகோடெல்லை யிறைவைமாணென்றுஞ்சொல்லும்.

(இ-ள்.) (நாணென்பது) வெட்கம்-கயிற்றுக்கும்பெயர்(தோணியென்பது) இரேவதிநட்சத்திரம் - மரக்கலம் - அம்பு - தெப்பம் - சேற்றுக்கும்பெயர் (வாணியென்பது) ஓர்கூத்து - சொல் - சரஸ்வதிக்கும்பெயர் [ஏணியென்பது] உலகம்-எல்லை-ஏணி-மாணுக்கும்பெயர்-எ-று. (௪)

திணைநிலங்குலமொழுக்கம் செவியென்பகாதுகேள்வி ... *
பிணையாசைவிலங்கின்பெண்பேர் பிலவங்கங்குரங்குதேனா.*
கணையம்புதிரட்சிபும்பேர்கட்சியேகாடுங்கூடும் ......... *
பணைவயல்பரியின்பந்தி பருத்தல்வேயரசுமீடாம் ...... *

(இ-ள்.) (திணையென்பது) பூமி-சாதி - நன்னிலைக்கும்பெமர் [செவியென்பது) காது-கேள்விக்கும்பெயர் (பிணையென்பது) ஆசை-பெண்மிருகத்துக்கும் பெயர் (பிலவங்கமென்பது) குரங்கு - தேனைக்கும்பெயர் (கணையென்பது) அம்பு - திரண்டவடிவுக்கும்பெயர் (கட்சியென்பது) காடு - பறவைக்கூட்டுக்கும்பெயர் (பணையென்பது) கழனி - குதிரைப்பந்தி - பருத்தல்-மூங்கில்-அரசமரம்-பெருமைக்கும்பெயரொன்றவாறு. (௫)

யாணரோபுதுமைதச்சரெய்தியவனப்புநன்மை ... ........*
பாணந்தான்மேகவண்ணக்குறிஞ்சியெய்கணைபூம்பட்டாம் *
சேணென்பதகலநீளஞ்செப்பிடுயரமும்பேர் ... ......*
ஆணைமெய்யுடனேவென்றி சூளேவலாகுநாற்பேர்... ......*

(இ-ள்.) (யாணரென்பது) புதுமை - தச்சர் - அழகு - நன்மைக்கும்பெயர் (பாணமென்பது) மழை - வண்ணக்குறிஞ்சி - அம்பு - பட்டுவஸ்திரத்திற்கும் (சேணென்பது)அகலம்-நீளம்-உயரத்துக்கும்பெயர்(ஆணையென்பது)உண்டை வெற்றி-சபதம்-ஏவலுக்கும்பெயர்-எ-று. (௬)

அண்டமாகாயமுட்டைஅயிலென்பவேலேகூர்மை....... *
துண்டமேசாரைப்பாம்பு துணியொடுவதனமூக்காம்...... *
கண்டமேகவசம்வெல்லங் கழுத்திடுதிரைவாடுண்டம்...... *
முண்டகந்தாழைகள்ளு முளரிமத்தகமுண்மூலம்...... *

(இ-ள்.) (அண்டமென்பது) ஆகாயம் - முட்டைக்கும்பெயர் (அயிலென்பது) வேலாயுதம் - கூர்மைக்கும்பெயர் (துண்டமென்பது) சாரைப்பாம்பு- துண்டம்-முகம்-மூக்குக்கும்பெயர் (கண்டமென்பது) கவசம்-வெல்லம் - கழுத்து - திரைச்சீலை - வாளாயுதம்-துண்டத்துக்கும்பெயர் (முண்டகமென்பது) தாழை - கள் - தாமரை - நெற்றி-முட்செடிக்கும்பெயர்-எ-று. (௭)

அண்டமேபகைவர்வானோராய வொன்றுகுமூப்பேர்........*
சுண்டனேசதைய நாளுஞ் சூறனும்வேறுகாட்டும் .. ... ...*
கண்டல்கேதகைமுள்ளிப்பேர் கணாதலேவிளித்தலோசை. *
பண்டம்பொன்பணிகாரப்பேர்பாகுபால்குழம்புபாக்காம்*

(இ-ள்.) (அண்டமென்பது) பகைஞர் - தேவர் - இடையருக்கும்பெயர் (சுண்டென்பது) சதயநட்சத்திரம் - மூஞ்சூறுக்கும்பெயர் (கண்டலென்பது) தாழை-முள்ளிச்செடிக்கும்பெயர்(கணாதலென்பது) அழைத்தல்-சத்தத்துக்கும் பெயர் (பண்டமென்பது) பொன் - பலபண்டத்துக்கும்பெயர் (பாகென்பது) பக்கு-குழம்பு-பாக்குக்கும்பெயர். (அ)

விண்டென்பமாயோன்வெற்புமேகமேமூங்கில்காற்றும்...*
தொண்டென்பபழமையொன்பான் றொழும்பொடு வழிபா
டாமே, தண்டென்பகுழாயேவீணை தடிபடைமிதுனமோத்
தி, வண்டென்பசங்குகுற்றம்வளையளியாளியைம்பேர் ...*

(இ-ள்.) (விண்டென்பது) திருமால் - மலை - மேகம் - மூங்கில் - காற்றுக்கும்பெயர் (தொண்டென்பது) பழமை - ஒன்பது - அடிமை - வழிபடுதலுக்கும்பெயர் (தண்டென்பது) துளையுடைப்பொருள் - வீணை - தடி - சேனை-மிதுனவிராசி-ஒணுனுக்கும்பெயர் (வண்டென்பது) சங்கு - குற்றம்-கைவளை-வண்டு-அம்புக்கும்பெயர்-எ-று. (௯)

உண்டையேதிரளையாகு முறுபடைவகுப்புமென்ப......*
தொண்டையாதொண்டைகொவ்வை துங்கும்யானைத்துதிக்
கை, கொண்டையேமயிர்முடிக்கு மிலந்தையின் கனிக்குங்கூ
றும்,கண்டிகைபதக்கம்வாகு வலயமேகலன்பெய்செப்பு. *

(இ-ள்.) [உண்டையென்பது] திரண்டவடிவு- படை-வெப்புக்கும்பெயர் (தொண்டையென்பது) ஆதொண்டைச்செடி-கோவைக்கொடி-யானைதுதிக்கைக்கும்பெயர் (கொண்டையென்பது] மயிர்முடி-இலந்தைப்பழத்துக்கும்பெயர் (கண்டிகையென்பது) பதக்கம்-தோளணி-ஆபரணச்செப்புக்கும்பெயர்-எ-று ()

தண்ணமோர்கட்பறைப்பேர் தறித்திடுமழுவுமாகும் ......*
வண்ணமேசந்தம்பண்பாம் மறையிராச்சியமேவேதம் ...*
பண்ணெனப்பாட்டும்பண்ணும் பரிமாவின்கலனையும்பேர்*
மண்ணனுவெப்பணைப்பேர் முழவின்மார்ச்சனையுமாமே *

(இ-ள்.) [தண்ணமென்பது] ஒருகட்பறை-பரசாயுதத்துக்கும்பெயர்(வண்ணமென்பது) அழகு - நிறம்- குணத்துக்கும்பெயர் (மறையெனபது) மறைவு-வேதத்துக்கும்பெயர் [பண்ணென்பது) இளசப்பாட்டு-பண் -குதிரைச்சேணத்துக்கும்பெயர் [மண்ணென்பது] அணு-அலங்காரம்- மத்தளத்திற்பூசுமண்ணுக்கும்பெயரொன்றவாறு. (௰௧)

அணங்குநோயழகுதெய்வ மாசைபெண்குலவருத்தம் ..*
இணங்கையேயிழாப்பேய்கூத்தாமாதிரைநாளுஞ்சொல்லும்*

குணுங்கர்தோற்கருவிமாக்கள் குயிலுவரிழிஞர்மூப்பேர் . *
துணங்கரலிருள்விழாவாம் தோன்றலேசுதனுதன்பேர் ...*

(இ-ள்.) (அணங்கென்பது) வியாதி-அழகு-தெய்வம்-ஆசை- பெண்கொல்லுதல்-பிரயாசத்துக்கும்பெயர் [துணங்கையென்பது] திருவிழா-பேய்க்கூத்து திருவாதிரை-நட்சத்திரத்துக்கும்பெயர் (குணுங்கரென்பது) தோற்கருவியாளர் நரம்பினுயகருவிக்குரியோர் - சண்டாளருக்கும்பெயர் (துணங்கரலென்பது) இருள்-திருவிழாவுக்கும்பெயர்(தோன்றலென்பது)மகன்-அரசனுக்கும்பெயர்.)

புணரியேவாரிநீரிற் பொருதிரைகளைமூப்பேராம் ......*
பணிலமேசலஞ்சலஞ்சங் கிருபெயர்பகரலாமே ... ......*
கணிவேங்கைமரமதாகுங் கழனிசூழ்மருதமும்பேர் .......*
பணியேதோற்கருவிவார்த்தை பாம்புமெய்த்தொழிலுமாமே

(இ-ள்.) (புணரியென்பது) கடல் - அலை -கரைக்கும்பெயர் (பணிலமென்பது) வலம்புரியாயிரஞ் சூழ்ந்தசங்கு -சங்குக்கும்பெயர் (கணியென்பது) வேங்கைமரம்-மருதநிலத்துக்கும்பெயர் (பணியென்பது)தோற்கருவி-சொல்-பாம்பு-தொழிலுக்கும்பெயர்-எ-று. (மங)

பாணியூர்நீர்க்கையோசை பற்றுக்கான்போதுநாடு ... ...*
சேணுறுசோலைபண்டஞ் சிறந்தபல்லியம்பன்னொன்றும் *
தாணுவேசயிலங்குற்றி சங்கரனிலைதூணைம்பேர்..........*
வேணியேசடைவிசும்பாம் வியாளமேபுலியும்பாம்பும் ...*

(இ-ள்.) (பாணியென்பது) ஊர்-நீர்-கை-சத்தம்-பற்று-காடு-காலம்-நாடு-சோலை-பலபண்டம்-வாச்சியப்பொதுவிற்கும்பெயர் [தாணுவென்பது] மலை-குற்றி-சிவன்-நிலைபெறுதல்-தூணுக்கும்பெயர்[வேணியென்பது] மயிர்ச்சடை ஆகாயத்துக்கும்பெயர் [வியாளமென்பது] புலி-பாம்புக்கும்பெயர்-எ-று. (மச)

குண்டலங்குழைவிசும்பாங் குபேரனேதனதன்சோமன்...*
மண்டிலம்பரியூர்வட்டம் மந்தியேயூகம்வண்டு...........*
கொண்டலேமுகில்கீழ்காற்றுங்கோட்டியேவாயில்கூட்டம் *
மண்டலிபூனைபாம்புமண்ணொடுநாயுமாமே..............*

(இ-ள்.) [குண்டலமென்பது]குண்டலம் - ஆகாயத்துக்கும்பெயர்(குபேரனென்பது) குபேரன் - சந்திரனுக்கும்பெயர் [மண்டிலமென்பது] குதிரை-ஊர்-வட்டத்துக்கும்பெயர் [மந்தியென்பது] பெண்குரங்கு - வண்டுக்கும்பெயர் [கொண்டலென்பது] மேகம்-கீழ்காற்றுக்கும்பெயர் (கோட்டியென்பது) வாயில்-கூட்டத்துக்கும்பெயர் [மண்டலியென்பது] பூனை-பாம்பு-பூமி- நாய்க்கும்பெயரொன்றவாறு. (மரு)

புண்டரீகந்திக்காளை புலிவண்டுகழுகஞ்சத்.......... ...*
தண்டமேயானைசெல்லும் வழிதண்டாயுதங்குடைக்கால் ..*

பிண்டிநன்மாவசோகாம் பிதாச்சிவன்பிரமனுநா ........*
கண்டகஞ்சுரிகைமுள்வாள்களவேன்பகளாச்சோழட்பேர் *

(இள்.) (புண்டரீகமென்பது) தென்கீழ்த்திசை - யானை - புலி - வண்டு- கழுகு தாமரைக்கும்பெயர் (தண்டமென்பது) யானைசெல்லும்வழி - தண்டாயுதம் - குடைக்காம்புக்கும்பெயர் (பிண்டியென்பது) நென்மா- அசோகமரத்துக்கும்பெயர் (பிதாவென்பது) சிவன் - பிரமன் - நாரைக்கும்பெயர்(கண்டகமென்பது) உடைவாள் - முள் - வாளாயுதத்துக்கும்பெயர் (களவென்பது) களாச்செடி-திருட்டுக்கும்பெயரொன்றவாறு. (௰௬)

பண்ணவன்முனிவன்றேவன்பகர்குருவருகநாற்பேர் ......*
தண்ணடைமருதஞ்சாரூர் நாடெனவிருபேர்சாற்றும்...*
வண்மையேவழங்கல்வாய்மைவளம்புகழ்வலியாமென்ப...*
ஒண்மையேமிகுதிநன்மையொழுங்கறிவழகைம்பேரே...*

(இள்) (பண்ணவனென்பது) முனிவன் - தேவன் - குரு-அருகனுக்கும் பெயர் (தண்டையென்பது) மருதநிலத்தூர்-நாட்டுக்கும்பெயர் (வண்மையென்பது) கொடுத்தல்-உண்டை-வளமை-புகழ் - வலிமைக்கும்பெயர் (ஒண்மையென்பது) மிகுதி-நன்மை-ஒழுங்கு-அறிவு-அழகுக்கும்பெயர் எ-று. (௰௭)

எண்ணெனன்பதெள்ளிலகக் மெளிமைசோதிடம்விசாரங்...*
கண்ணிடங்கணுவேகண்ணுங் காஞ்சிமேகலையோர்பண்ணும்:
விண்முகிசுவர்க்கம்வானும் விபுலம்பார்விரிவுபீடு ... *
பண்ணையயேவயனீர்த்தாழ்வு மருதமாத்துயிலும்பாழி...*

(இ-ள்.) [எண்ணென்பது] எள்-இலக்கம்-எளிமை- சோதிடநூல் -ஆலோசனைக்கும்பெயர் [கண்ணென்பது] இடம் -மரக்கணு -மூங்கில்- கண்ணுக்கும் பெயர் [காஞ்சியென்பது] மாதரிடை யணியுளெழுகோவை-ஓர்பண்ணுக்கும் பெயர் [விண்ணென்பது] மேகம்-தேவலோகம்- ஆகாயத்துக்கும்பெயர் [விபுலமென்பது] பூமி-அகலம்- பெருமைக்கும்பெயர் [பண்ணையென்பது] கழனி குளம்-மருதநிலம்-விலங்கின்படுக்கையிடத்துக்கும்பெயர்-எ று. (௰௮]

காண்டமேதிரைகாடம்பு கமண்டலங்கலன்பெய்செம்பு..*
நீண்டகோன்முடிவுதூசு நீர்படைக்கலமீரைந்தாம் ... *
பாணடிலேறூர்திவட்டம் பனைகட்டில்விளக்குத்தாளம் ...*
ஈண்டெடன்பதிவ்விடத்தோ டிப்படிசடிதியும்பேர்... ...*

(இ-ள்.) [காண்டமென்பது] திடாச்சீலை-காடு-அம்பு-கமண்டலம்-ஆபரணம்வைக்குஞ்செப்பு-கோல்-முடிவு-வஸ்திரம்-நீர்- ஆயுதத்துக்கும்பெயர் [பாண்டிலென்பது]எருது-வாகனம்-வட்டவடிவு-மூங்கில்கட்டில்விளக்கு-தாளத்துக்கும்பெயர்[ஈண்டென்பது]இவ்விடம்-இவ்வண்ணம்-சீக்கிரத்துக்கும்பெயர்(

அண்டசமுதலையோந்தி யரணைபுள்ளுடும்புபல்லி... ...*
நண்டுமீன்றவளையாமை நாகடிப்பியுமீராறுஞ் ... ... *

சண்டன்கூற்றலிவெய்யோனுந் தாள்கதவறுதாள்பாதந். *
சுண்டையேசுண்டைகள்ளாஞ்சொர்க்கமேசுவர்க்கங்கொங்கை*

(இ-ள்.) [அண்டசமென்பது] முதலை-ஓணன்- அரணை- பறவை-உடும்பு-பல்லி-நண்டு-மீன்-தவளை-ஆமை-பாம்பு-இப்பிக்கும்பெயர்[சண்டனென்பது] இயமன்- பேடி-சூரியனுக்கும்பெயர் [தாளென்பது] தாப்பாள் - பாதத்துக்கும் பெயர் [சுண்டையென்பது] சுண்டைச்செடி-கள்ளுக்கும்பெயர் [சொர்க்கமென்பது) தேவலோகம்-முலைக்கும்பெயர்-எ-று. (உ௰)

பணமென்பதரவின்பையும் ப்ரம்பும்பொற்காசுமுப்பேர் *
மணமென்பவாசங்கூட்டம் வதுவையுமாகுமென்ப ... ...*
பணவையேபரணும்பேயும்பையுளேசிறுமைநோயா [பேர்
நுணவையெண்ணேலபிண்டி நுணியென்பநுனிநுண்மைப்

(இ-ள்.) [பணமென்பது] பாம்பின்படம்-பாம்பு-பொற்காசுக்கும்பெயர் [மணமென்பது] வாசனை-கூட்டம்- கலியாணத்துக்கும்பெயர் [பணவையென்பது] பரண் - பிசாசத்துக்கும்பெயர் [பையுளென்பது] அற்பம் -வியாதிக்கும் பெயர் [நுணவையென்பது] எண்ணேலை-மாவுக்கும்பெயர் [நுணியென்பது] கூர்மை-நுட்பத்துக்கும்பெயர்-எ-று. (உக)

ணகரவெதுகை-முற்றிற்று.

---

## தகரவெதுகை,

மதலையேகொன்றைபிள்ளை மரக்கலங்கொடுங்கைதூணும். *
சிதலைநோய்துணிசெல்லென்ப சீதநீர்குளிரோமேகம் ... *
பதலையோர்கட்பறைப்பேர் பருவரைதாழிக்கும்பேர் ... *
கதலியேவாழைதேற்று காற்றூடிதுவசநாற்பேர் ... ... *

(இள்) [மதலையென்பது] கொன்றைமரம்-மகன்-மரக்கலம்-கொடுங்கை தூணுக்கும்பெயர் [சிதலையென்பது] வியாதி - சீலைத்துணி- கறையானுக்கும் பெயர் [சீதமென்பது] நீர் - குளிர்ச்சி-மேகத்துக்கும்பெயர் [பதலையென்ப) ஒருகட்பறை-மலை-சாடிக்கும்பெயர் [கதலியென்பது] வாழை - தேற்றுமரம்-காற்றூடி-விருதுக்கொடிக்குபெயர்-எ-று. (க)

இதழ்பனையேபூவி னிதழுதடெனவிம்முப்பேர் ... ...*
கதழ்வுவேகஞ்சிறப்பாங் களிசெருங்கொடுகுழம்பு ... *
மதுகமேயிருப்பையெட்டி மதுரமாந்தராவுமாமே ... *
சிதடனந்தகன்மூடன்பேர் திதிபக்கநிலைபேறும்பேர் ... *

(இ-ள்.) [இதழென்பது] பனையோடு-பூவிதழ்- உதட்டுக்கும்பெயர் [கதழ்வென்பது] சீக்கிரம்-சிறப்புக்கும்பெயர் [களியென்பது] களிப்பு-குழம்புக்கும் பெயர் [மதுகமென்பது] இருப்பைமரம்-எட்டிமரம்-தித்திப்பு-பொன்முதலிய

வெழுவகைலோகத்தோன்ஹுக்கும்பெயர் [சிதடனென்பது] குருடன்-மூடனுக்கும்பெயர் [ திதியென்பது ] பிரதமைமுதலியதிதி - நிலைபெறுதலுக்கும்பெயரென்றவாறு. (உ)

ஆதனுருயிரோர்வில்லா னங்கியென்பதுதீச்சட்டை ... *
போதகம்யானைக்கன்று போற்றியவிளமைக்குப்பேர் ... *
ஏதந்துன்பங்குற்றப்பே ரீமமேமயானங்காட்டஞ் ... ...*
சூதன்றேர்ப்பாகன்சூதன் சுவேதமேவேர்வுவெண்மை ... *

(இ-ள்.) [ஆதனென்பது] உயிர் - அறிவிலானுக்கும்பெயர் [அங்கியென்பது] நெருப்பு-சட்டைக்கும்பெயர் [போதகமென்பது] யானைக்கன்று- இளைய தன்மைக்கும்பெயர் [ஏதமென்பது] துன்பம்-குற்றத்துக்கும்பெயர் [ஈமமென்பது] சுடுகாடு-விறகுக்கும்பெயர் [சூதனென்பது] தேர்ப்பாகன்-சூதாடுவோனுக்கும்பெயர் [சுவேதமென்பது] வேர்வை-வெண்மைக்கும்பெயர்-எ-று, (௩)

சூதமாமரமேவண்டு சூதுடனிரதந்தோன்றல் ... ... *
சூதகமேயாசுசந் தோகைமார்தோயாப்பூப்பாம் ... .. *
பூதமாலிறந்தகாலம் புனிதமைம்பூதல்சீவன் ... ... ...*
மாதவந்தவம்வசந்தம் வாதமேதர்க்கங்காற்றும்..........*

(இ-ள்.) [சூதமென்பது] மாமரம்-வண்டு-சூது- இரசம்- பிறப்புக்கும்பெயர் [சூதகமென்பது] அசுத்தம் - மகளிர் தடக்குக்கும்பெயர் [பூதமென்பது] ஆலமரம்- இறந்தகாலம்- சுத்தம்- பிருதி - விமுதலியவைம்பூதம்- உயிருக்கும்பெயர் [மாதவமென்பது] தவம்- வசந்தகாலத்துக்கும்பெயர் [வாதமென்பது] தருக்கம்-காற்றுக்கும்பெயர்-எ-று. (௪)

மதன்வலிவேள்வனப்பாம் வலித்தலேவளைத்தல்பேசல் ...*
பதங்கம்புட்பொதுவிட்டிற்பேர் பலிபூசைபிச்சைநீறுஞ் *
சிதம்விண்மீன்ஞானம்வெள்ளை செயமுறப்பட்டதாமே. *
நிதம்பமேயல்குலென்ப நெடுமலைப்பக்கமும்பேர் ... *

(இ-ள்.) [மதனென்பது) வலிமை-மன்மதன்-அழகுக்கும்பெயர் (வலித்தலென்பது) வளைத்தல்-பேசலுக்கும்பெயர் (பதங்கமெனபது) பறவைப்பொது வீட்டிற்பறவைக்கும்பெயர் (பலியென்பது) பூசை பிச்சை - நீற்றுக்குப்பெயர் (சிதமென்பது) நட்சத்திரம்-ஞானம்-வெண்மை - சயமுறப்படுதலுக்கும்பெயர் (நிதம்பமென்பது) அல்குல்-மலைப்பாகத்துக்கும்பெயர்-எ-று. (௫)

சதியுரோகிணிகற்பாட்டி வஞ்சனைதாளவொற்று ... ...*
விதியென்பவினையயன்பேர் வேட்டுவன்மகநாள்வேடன். *
பதியிறைகேள்வனூராம் பதுக்கையேபாறைதூறு ... *
பிதிர்கதைநொடி-தூவற்பேர் பிண்டமேதிரளைபிச்சை ... *

(இ-ள்.) (சதியென்பது) உரோகிணிநட்சத்திரம்- கற்புடைமகள்-சபடம்-தாளவொற்றுக்கும்பெயர் (விதியென்பது) தொழில்- பிரமனுக்கும்பெயர் (வே

ட்டுவனென்பது) மகநட்சத்திரம் -வேடனுக்கும்பெயர் (பதியென்பது) அரசன்-நாயகன்-ஊருக்கும்பெயர் (பதுக்கையென்பது) பாறை- சிறுதூறுக்கும்பெயர் (பிதிரென்பது) கதை -கைநொடி- தூவலுக்கும்பெயர் (பிண்டமென்பது) திரட்தி-பிச்சைக்கும்பெயர்-எ-று. (சு)

ஆதியேமுதனேரோட லருகன்மாலீசன்வேதன் ... ...*
பூதியம்புவியுடற்பேர் பொம்மலேசொலிவுஞ்சோறும்...*
பாதிரிபாடலப்பேர் பணைத்தெழுமூங்கிற்கும்பே ... ...*
ரேதியாயுதம்வாளென்ப விழைநூலாபரணமாமே... ...*

(இ-ள்.) (ஆதியென்பது) முதல்- நேரோடல்- அருகன்- திருமால்-சிவன் பிரமனுக்கும்பெயர் (பூதியமென்பது) பூமி- சரீரத்துக்கும்பெயர் (பொம்மலென்பது) மங்கலம்- சோற்றுக்கும்பெயர் (பாதிரியென்பது) பாதிரிமரம்- மூங்கிலுக்கும்பெயர் (ஏதியென்பது) ஆயுதம் - வாளாயுதத்துக்கும்பெயர் (இழையென்பது) நூல்-ஆபரணத்துக்கும்பெயர்-எ-று. (எ)

சாதியேபிரம்புகள்ளோர் தருசிறுசண்பகப்பேர்.........*
போதஞானந்தோணிப்பேர் புகல்குதிருடல்சொல்வெற்றி*
யோதிமபண்மயிரோபூனை யோந்திமெய்ஞ்ஞானம்வெற்பா.*
மேதிமமன்னம்லெற்பா முறுத்தலேதோற்றல்கோபம் ... *

(இ-ள்.) (சாதியென்பது) பிரம்பு-கள்- தேக்கமரம்- சிறுசண்பகத்துக்கும் பெயர் (போதமென்பது) ஞானம் - மரக்கலத்துக்கும்பெயர் (பகலென்பது) தானியக்குதிர்-சரீரம்- சொல்- வெற்றிக்கும்பெயர் (ஓதியென்பது) கூந்தல்-பூனை-ஓணான்-ஞானம்-மலைச்கும்பெயர் (ஓதிமமென்பது] அன்னப்பட்சி- மலைக்கும்பெயர் (உறுத்தலென்பது] முனைத்தல்-கோபத்துக்கும்பெயர்-எறு. (அ)

சுதைமகள்சுறவாத்தேனு சுண்ணச்சாந்தமுதுநாற்பேர் ...*
புதையென்பகணையின்கட்டும் புறமையுமறைவுமூப்பேர்*
மதுவென்பநறவுந்தேனும் வசந்தகாலமுமாமென்ப......*
கதைதண்டாயுதமேவார்த்தை காரணமிம்மும்பேரோ......*

(இ-ள்.) (சுதையென்பது) மகள்-உதைகாற்பசு-சுண்ணச்சாந்து- அமிர்தத்துக்கும்பெயர் (புதையென்பது) அம்மின்சுட்டு-புதுமை -மறைவுககும்பெயர் (மதுவென்பது) கள்-தேன்-வசந்தகாலத்துக்கும்பெயர் (கதையென்பது) தண்டாயுதம்-சொல்-காரணத்திற்கும்பெயர்-எ-று. (கூ)

சீதைபேபொன்னுங்காணி படைச்சால்சீராமன்றேவி ... *
மேதைதோல்புதனிறைச்சி மிக்கபேரறிவுகள்ளாங்.... ...*
கோதைமுன்கற்றோர்கட்டே குழனூர்காற்றெழூங்குசேர *
ஞோதைபேரொலிமதிற்பே ருக்கந்தீயிடையானேறு .......*

(இ-ள்.) (சீதையென்பது) பொன்னுங்காணி- உழுபடைச்சால்- சீதாதேவிக்கும்பெயர் (மேதையென்பது) தோல்-புதன்-இறைச்சி-பேரறிவு-கள்ளுக்கு

ம்பெயர் (கோதையென்பது) முன்கைத்தோற்கட்டு- பெண்மயிர்- பூமாலை-காற்று-ஒழுங்கு-சேரனுக்கும்பெயர் (ஒதையென்பது) ஆரவாரம்-மதிலுக்கும்பெயர் (உக்கமென்பது) நெருப்பு-இடை-பசு-எருதுக்கும்பெயர்-எ-று. (ய)

அத்தம்பொன்பாதிகைகண்ணடிசொற்பொருள்காடோர்நாள்.
புத்தகங்கோசமென்ப சித்திரப்படாமுமாமே ...........*
நத்தமேயிருளூர்சங்கு நந்துடனிரவுநாற்பேர்..............*
துத்தம்யாழிசைநாய்பாலேவயிறுகண்மருந்துஞ்சொல்லும்.

(இ-ள்.) [அத்தமென்பது] பொன்-பாதி-கை-கண்ணடி - சொற்பொருள்-காடு-ஓர்நட்சத்திரத்திற்கும்பெயர் [புத்தகமென்பது] எழுதுபுத்தகம்- எழுத்துச்சீலைக்கும்பெயர் [நத்தமென்பது] இருள்-ஊர்-சங்கு- இராத்திரிக்கும்பெயர் [துத்தமென்பது] யாழிலோர்நரம்பு - நாய்பால் - வயிறு - கண்மருந்துக்கும் பெயரொன்றவாறு. (யக)

அத்தென்பவரைஞாண்செம்மை யசைச்சொலோடிசைப்பு
நாற்பேர்,தொத்துப்பூங்கொத்துத்தொண்டாம்தூம்புவேய்
துளைமரக்கா,தத்தைமூத்தாள்கிளிக்காந் தழல்கிளிகடிகோல்
செந்தீ, யுத்தரமூழித்தீமேலொடுமெறுமொழிவடக்கு......*

(இ-ள்.) [அத்தென்பது] அரைநாண்-சிவப்பு-அசைச்சொல் - கூடிநிற்றலுக்கும்பெயர் [தொத்தென்பது]பூங்கொத்து - அடிமைக்கும்பெயர் [தூம்பென்பது] மூங்கில் - உட்டுளைப்பொருள் - மரக்காலுக்கும்பெயர் [தத்தையென்பது] அக்காள் - கிளிக்கும்பெயர் [தழலென்பது] கிளிகடிகோல்- நெருப்புக்கும்பெயர் [உத்தரமேன்பது] வடவாமுகாக்கினிமேல்-எதிர்மொழி- வடக்குக்கும்பெயரொன்றவாறு. (யஉ)

கூத்தனேவுயிர்தடன்பேர்குலங்குடிகோயில்கூட்டம்......*
ஊழ்த்தலேநினைத்தல்செவ்வி யுறுபதனழிவுமுப்பேர் ...*
பாத்தென்பகஞ்சிசோறுபகுத்திடல்வகுத்தமூப்பேர் . ...*
தீர்த்தமேவிழாவுநீரும் தீர்த்தனேயருகனுசான்............*

(இ-ள்.) [கூத்தனென்பது] உயிர் - நாடகனுக்கும்பெயர் [குலமென்பது] சாதி-அரசன-மனை - கூட்டத்துக்கும்பெயர் [ஊழ்த்தலென்பது] நினைத்தல்-பதம்-பதனழிவுக்கும்பெயர் [பாத்தென்பது]கஞ்சி-சோறு-பங்கிடலுக்கும்பெயர் [தீர்த்தமென்பது] திருவிழா-நீருக்கும்பெயர் [தீர்த்தனென்பது] அருகன் குருவுக்கும்பெயர் எ-று. (யங)

குத்திமண்ணடக்கமென்ப கோணம்வாள்குதிரைமூக்காம் *
பத்தியேமுறையொழுக்கம் பகர்வழிபாடுமுப்பேர்.......*
அத்தியார் கலியேயானை யகவெலும்பாகநாற்பேர் ... ...*
சத்தியஞ்சபதமெய்யாந் தபுதலேசாவுங்கேடும்............*

(இ-ள்.) [குத்தியென்பது] பூமி - அடக்கத்துக்கும்பெயர் [கோணமென்பது] வாளாயுதம் - குதிரை - மூக்குக்கும்பெயர் [பத்தியென்பது] முறைமை

கன்னிலை-வழிபடுதலுக்கும்பெயர் [அத்தியென்பது] சமுத்திரம்-யானை-அத்தி மரம் - எலும்புக்கும்பெயர் [சத்தியென்பது] சபதம் - உண்மைக்கும்பெயர் [தபுதலென்பது] சாதல்-கெடுதலுக்கும்பெயர்-எ-று. (மசு)

பித்திகைகருமுகைக்குப் பெயர்சுவர்த்தலமுமாகும் ......*
கத்திகைதொடர்விகற்பந் துவசமேகமழ்வாசநந்தி.........*
உத்திசெந்திருவுறுப்புச் சுணங்குறையாடன்முப்பேர் ...*
துத்தியேசுணங்குபாம்பின்சுடர்பொறிபுதலொன்றுமே. *

(இ-ள்.) [பித்திகையென்பது] சிறுசண்பகம் - சுவர்த்தலத்துக்கும்பெயர் [கத்திகையென்பது] மலையின்வேறுபாடு - துகிற்கொடி - குருக்கத்திக்கொடிக் கும்பெயர் [உத்தியென்பது] திருவுறுப்பெனுந்தலைக்கோலம்-தேமல் - உரைத் தலுக்கும்பெயர் [துத்தியென்பது] தேமல் - பாம்பின்படப்பொறி - ஓர்செடிக் கும்பெயரொன்றவாறு. (மஎ)

சித்திரபானுசெந்தீ திவாகரனாண்டொன்றிப்பேர்.........*
பத்திரமிலைவனப்புப்படைநன்மைசிறகேபாணம்.........*
சித்திரமழகோர்பாடல் சிறந்தவிம்மிதமேரண்டம்.........*
சத்திரங்குடையேயன்ன சாலகைவிடாவேல்வேள்வி......*

(இ-ள்.) (சித்திரபானுவென்பது) நெருப்பு-சூரியன் - ஓர்வருடத்துக்கும் பெயர் (பத்திரமென்பது) இலை - அழகு - ஆயுதம் - நன்மை - பறவையினி றகு-அம்புக்கும்பெயர் (சித்திரமென்பது) அழகு - ஓர்கவி-அதிசயம் - ஆமண க்குக்கும்பெயர் (சத்திரமென்பது) குடை - அன்னசத்திரம் - கைவிடாவேல்-யாகத்துக்கும்பெயர் எ-று. (மசு)

காத்திரங்கனமெய்சீற்றங் களிற்றின்முற்காலேகீரி..........*
நேத்திரங்கண்பட்டாடைநீலியேகருமைதுர்க்கை..........*
கோத்திரம்புடவிதானேகுலமொடுமலையுமாமே.... .......*
பாத்தியேசிறுசெய்யில்லம்பகுத்தலும்வகுத்தநாமம்......*

(இ-ள்·) (காத்திரமென்பது) கனம் - உடல் - கோபம் - யானைமுன்கால்-கீரிக்கும்பெயர் (நேத்திரமென்பது) கண் - பட்டு வஸ்திரத்துக்கும்பெயர் (நீலியென்பது) கறுப்பு-துர்க்கைக்கும்பெயர்(கோத்திரமென்பது)பூமி-குலம்-மலைக்கும்பெயர் (பாத்தியென்பது) சிறுவயல் - வீடு - பாகுபாட்டுக்கும்பெ யரொன்றவாறு. (மஎ)

சதமிலையிறகோரொன்றாம்சத்தமேயோசையேழாம்.......*
கதவமேசுதவுகாப்பாம் கழங்குபேய் நடங்கழற்சி.........*
பதமுரலின்பஞ்செவ்விபதவிநாள்வரிசைவார்த்தை.......*
மதியேமுன்னிலையசைச்சொல்மாதமம்புலியுத்திப்பேர்...*

(இ-ள்.) (சதமென்பது) இலை-இறகு-ஓரொன்னுக்கும்பெயர் (சத்தமென்பது) ஒலி - ஏழுக்கும்பெயர் (கதவமென்பது) கதவு - காவலுக்கும்பெயர் (கழங்கெ

ன்பது) பேய்க்கூத்து - கழற்காய்க்கும்பெயர் (பதமென்பது) சோறு-இன்பம்-காலம்-வழி-பாதம் - வரிசைசொல்லுக்கும்பெயர் (மதியென்பது) முன்னிலையசைச்சொல்-மாதம்-சந்திரன்-புத்திக்கும்பெயரொன்றவாறு. (௰அ)

பீதகஞ்சாந்துபொன்மை பெருத்தனமிருவேலிப்பேர்...*
சாதகம்வானம்பாடி சனனம்பாரிடமுப்பேரோ...........☆
சேதகஞ்சேறுசெம்மை தேயந்தானுடம்புநாடாம்......*
மாதரோயிடைச்சொல்சரதல் வனப்பொடுமகளிராமே...*

(இ-ள்.) (பீதகமென்பது)நால்வகைச்சாந்திலொன்று-பொன்னிறம்-செம்பொன்-வெட்டிவேருக்கும்பெயர் (சாதகமென்பது) வானம்பாடி-பிறப்பு-பூசத்துக்கும்பெயர் (சேதகமென்பது) சேறு - சிவப்புக்கும்பெயர் (தேயமென்பது) சரீரம் - நாட்டுக்கும்பெயர் (மாதரொன்பது) இடைச்சொல் - ஆசை - அழகு-பெண்களுக்கும்பெயரொன்றவாறு. (௰௯)

சோதிமாலருகன்மானு சுடர்விளக்கிசனோர்நாள்.........*
பூதியேநரகஞ்செல்வந் துர்க்கந்தம்புழுதிநீறும்.........*
வீதியேதெருநேரோடல்மேலேன்பதிடம்விண்மேற்காம்.*
மாதிரந்திசையாகாமமலையானைநிலமைம்பேரோ.........*

(இ-ள்.) (சோதியென்பது) திருமால் - அருகன் - சூரியன் - ஒளி-தீபம்-சிவன்-ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் (பூதியென்பது) நரகம்-செல்வம் - தீநாற்றம்-புழுதி - விபூதிக்கும்பெயர் (வீதியென்பது) தெருநேரோடலுக்கும்பெயர் (மேலென்பது) இடம்-ஆகாயம்-மேற்குக்கும்பெயர் (மாதிரமென்பது) திக்கு-ஆகாயம்-மலை-யானை-பூமிக்கும்பெயர்-எ-று. (உ௰)

தாதுபொன்முதலாமேழுஞ் சடமுறுதாதோமேழும்........*
பூதமோரைந்துங்காவிக் கல்லுடன்புகலுநாற்பேர்.........*
வேதிகைபலகைதிண்ணை வெதிரொன்பசெவிடுவேணு........*
கேதுவேசிவிபதாகை கிள்ளைதான்குதிரைதத்தை.........*

(இ-ள்.) (தாதென்பது) பொன்முதலியவெழுவகைலோகம்-உடலிற்றோன்றியவிரதமுதலியவெழுவகைத்தாது- மண்முதலியவை வகைப்பூதம்-காவுக்கல்லுக்கும்பெயர் (வேதிகையென்பது) கேடகம்-திண்ணைக்கும்பெயர் (வேதிரொன்பது) செவிடு - மூங்கிலுக்குப்பெயர் (கேதுவென்பது) ஓர்கோள் - துகிற்கொடிக்கும்பெயர் (கிள்ளையென்பது) குதிரை - கிளிக்கும்பெயர்-எ-று. (உக)

கதுப்பேயாண்மயிரும்பெண்பான்மயிரொடுகவுளுமுப்பேர்
விதப்பேகம்மிதமிக்காகும்வித்தம்பொன்பழிப்புருவம் *
அதிர்ப்பொலிநடுக்கமென்பஅகப்பாவேபுரிசைமேடை..*
ஒதுக்கமேநடைமறைப்பாம் ஒருத்தலாண்விலங்குவேழம்*

(இ-ள்.) [கதுப்பென்பது] மைந்தர்மயிர்- பெண்மயிர் - கபோலத்துக்கும்பெயர் [விதப்பமென்பது] நடுக்கம் - மிகுதிக்கும்பெயர் [வித்தமென்பது]

பொன்-இகழ்வு-ஞானத்துக்குப்பெயர் [அதிர்ப்பென்பது] சத்தம்-நடுக்கத்துக்குப்பெயர் (அகப்பாவென்பது) மதில் - மதிலுண்மேடைக்கும்பெயர் (ஒதுக்கமென்பது) நடை - மறைப்புக்கும்பெயர் (ஒருத்தலென்பது) ஆண்மிருகம்-யானைக்கும்பெயரொன்றவாறு. (௨௨)

பத்திரிபறவைகாளி பரியிலைபாணமைம்பேர் ... ....... ...*
அத்திரிகழுதைவிண்ணொட் டகம்பரியசலமம்பாம் ... ...*
சத்தியேயுமைவேல்கான்றல் குடைவலிதுவசந்தானும் ... *
சுத்தியேயகல்வெண்சங்கஞ் சுத்தமோர்கருவிக்கும்பேர். *

(இ-ள்.) [பத்திரியென்பது] பட்சி-காளி-குதிரை-இலை-அம்புக்கும்பெயர் [அத்திரியென்பது] கழுதை-ஆகாயம்-ஒட்டகம்-குதிரை-மலை-பாணத்துக்கும்பெயர் [சத்தியென்பது] பார்வதி-வேலாயுதம்-கக்கல்- குடை- வலிமை துகிற்கொடிக்கும்பெயர் [சுத்தியென்பது ] அகல் - சங்குசுசி - ஓர்கருவிக்கும்பெயரொன்றவாறு. (௨௩)

புத்தனமாலருகன்சாத்தன் பூழிமனகில்பூமிப்பேர் ......*
புத்தேளேபுதுமைதேவாம் பூட்கைதோன்மேற்கோயாளி.*
தைத்தலுன்னலங்கைத்தற்பேர் சாறுகள்விழவுதானும் ... *
மூத்தமேபுரியமோட்ட மருதநன்னிலமுத்தாமே ... ..*

(இ-ள்.) [புத்தனென்பது] திருமால்-அருகன்- புத்தனுக்கும்பெயர் [பூழிலென்பது] அகில்- பூமிக்கும்பெயர் [புத்தேளென்பது] புதுமை- தெய்வத்துக்கும்பெயர் [பூட்கையென்பது] யானை-மேன்மை - யாளிக்கும்பெயர் [தைத்தலென்பது] துணிமுதலியதைத்தல்-அலங்கரித்தற்கும்பெயர் [சாறென்பது] கள் திருவிழாவுக்கும்பெயர் [முத்தமென்பது] பிரீதி-உதடு-மருதநிலம்-முத்துக்கும்பெயரொன்றவாறு. (௨௪)

அத்தனேமூத்தோன்றந்தை யரனொடுகுருவுநாற்பேர் ... *
சித்தமேதிடமுள்ளப்பேர் சேகரந்தலைமாவேராம் ... ...*
கைத்தலேசினங்கைப்பாகுங் கஞறலேபொலிவுக்ன்றல் ...*
சித்தென்பசயமேஞானஞ் செய்யென்பநிலமேவற்பேர் ... *

(இ-ள்.) [அத்தனென்பது] மூத்தோன்-பிதா -சிவன் - குருவுக்கும்பெயர் [சித்தமென்பது] மெய்-மனதுக்கும்பெயர் [சேகரமென்பது] தலை - மாமரம்-அழகுக்கும்பெயர் கைத்தலென்பது] கோபம்-கசப்புக்கும்பெயர் [கஞறலென்பது] மங்கலம்- சினக்குறிப்புக்கும்பெயர் [சித்தென்பது] வெற்றி- ஞானத்துக்கும்பெயர் [செய்யென்பது] விளைநிலம்செய்யெனேவர்க்கும்பெயர்-எ-று.(௨௫)

உத்திரஞ்சித்திரஞ்சேர்ந் தொளிறுமில்லுறப்பேசடோர்நாள்*
பைத்தலேமுனிவிரேறு பசுத்தலும்பசலாமே... ......*
மத்திகையேசம்மட்டி சுடர்நிலைத்தண்டுமாலை ... ... ... *
மத்தென்பதயிர்மத்தோடும் மத்தமுமிருபேராமே .........*

(இ-ள்.) [உத்திரமென்பது] இல்லுறுப்பாகியவுத்திரம்- ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் [பைத்தலென்பது] கோபம்-பசுமைக்கும்பெயர் [மத்திகையென்பது] குதிரை - சம்மட்டி-விளக்குத்தண்டு- பூமாலைக்கும்பெயர் [மத்தென்பது] தயிர்முதலியகடையுமத்து-ஊமத்தைக்கும்பெயர்-எ-று. (உ௬)

மதர்வுமேவுதல்வனப்பு வலியிடமிகுதியையும்பேர் .........*
புதவென்பகதவோர்பல்லாம் புணர்ச்சியேகலவிகூடல் ... *
சிதருறிதிவலைவண்டு சீலையின்றுணிநாற்பேரோ ........... *
அதர்வழிபுழுதியாட்டி னதருநுண்மணலுமாமே.........*

(இ-ள்.) [மதர்வென்பது] ஆசை-பெருக்கம்-அழகு-வலிமை இடம்-மிகுதிக்கும்பெயர் [புதவென்பது] கதவு - ஓர்வகைப்புள்ளுக்கும்பெயர் [புணர்ச்சியென்பது] சையோகம்-இசைப்புக்கும்பெயர்[சிதரென்பது] உறி-துளி-வண்டு சீலைத்துணிக்கும்பெயர் [அதரென்பது] வழி-புழுதி-ஆட்டினதர்-நுண்மணலுக்கும்பெயரொன்றவாறு. (உ௭)

முதலைசெங்கிடையிடங்கர் முருந்தெனமொழியலாகும்...*
அறமிறங்குதல்பாதாளங் கீழுமென்றறையுமுப்பேர் ......*
கதிநடைவிரைவேநான்கு கதியோடுகதியுங்காட்டும் ... *
மதமிபமதஞ்செருக்காம் மாயையேமாயஞ்சத்தி .........*

(இ-ள்.) [முதலையென்பது] செஞ்சடைநீர்வாழ்முதலை-இறகினடிக்குருத்துக்கும்பெயர் [அதமென்பது] இறங்குதல்-பாதலம்-கீழுக்கும்பெயர் [கதியென்பது] நடையின்வேகம்-தேவகதிமுதலியநாற்கதி-முத்திக்கும்பெயர் [மதமென்பது] யானைமதம்- களிப்புக்கும்பெயர் [மாயையென்பது] வஞ்சனை- சத்திக்கும்பெயர்-எ-று. (உ௮)

பீதமேசாந்துமஞ்சள் பிங்கலந்தொடுபொன்மைப்பேர் *
பேதையேர்பருவமுடன் பெண்டரித்திரனேநாற்பேர். *
வாதுவர்யானைப்பாகர் வயப்பரிமாவடிப்பேர் ... ... ...*
மூதிரையாதிரைப்பேர் முக்கணன்பேருமாமே...........*

(இ-ள்.) [பீதமென்பது] நால்வகைச்சாந்திலொன்று - மஞ்சள் - பொன்-பொன்னிறத்துக்கும்பெயர் [பேதையென்பது] பேதைப்பருவம்-அறிவிலான் பெண்-தரித்திரனுக்கும்பெயர் [வாதுவனென்பது] யானைப்பாகர்- குதிரைப்பாகருக்கும்பெயர் [மூதிரையென்பது] திருவாதிரைநட்சத்திரம்-சிவனுக்கும்பெயரொன்றவாறு. (உ௯)

தாதியேபரணிநாளு மடிமையுமிருபேர்சாற்றும் ........*
போதுதான்காலம்பூவாம் போர்வைதோல்கவசமீக்கோல் *
சாதமேடம்பதப்பேர் தகைமையேரியல்புபீடாம் ... ... *
வீதலேல்கெடுதல்சாவே யிலம்பாடும்விளம்புமுப்பேர்.....*

(இ-ள்.) [தாதியென்பது] பரணிநட்சத்திரம் - அடிமைக்கும்பெயர் [போதென்பது] பொழுது- மலருக்கும்பெயர் (போர்வையென்பது) தோல்-மெய்க்

கவசம்-மேற்போர்வைக்கும்பெயர் (சாதமென்பது) உண்மை-சோற்றுக்கும்பெயர்(தகைமையென்பது) அழகு-குணம்-பெருமைக்கும்பெயர் (வீதலென்பது] கெடுதல்-சாதல்-வறுமைக்கும்பெயர்-எ-று. (௩௰)

தகரவெதுகை முற்றிற்று.

## நகரவெதுகை.

இந்தனம்விறகேயாகு மெரியிடுகனலுமாகும் ... ... *
சந்தமேநிறம்வனப்புச் சாற்றியகவிதைசாந்தம் ... ...*
கந்தமிந்திரியம்பகுத்தல் கழுத்தடிகிழங்குநாற்றம் ... ...*
மந்திரம்விசாரங்கோயில் வாசியின்குழாம்வீடேகள் ......*

(இ-ள்.) (இந்தனமென்பது) மேல். விறகு- அக்கினிச்சுவாலைக்கும்பெயர் (சந்தமென்பது) நிறம்-அழகு-கவிதை-சந்தனத்துக்கும்பெயர் (கந்தமென்பது) இந்திரியம் -பகிடுதல் -கழுத்தடி -கிழங்கு- வாசனைக்கும்பெயர் (மந்திரமென்பது) ஆலோசனை-தேவாலயம்-குதிரைக்கூட்டம்-வீடு கள்ளுக்கும்பெயர்-எ-று.()

அந்திலாங்கசைஇடப்பேர் அணவலேயணுகல்புல்லல் ..*
சந்தியேயந்திமூங்கில் சதுக்கமுமிசைப்புமப்பேர் ... ...*
நந்தியேசிவனும்மறு நந்தியீச்சுரனுமப்பேர் ...........*
உந்திதேருருளேயாறே யுவரிநீர்ச்சுழியேகொப்பூழ் ......*

(இ-ள்.) (அந்திலென்பதும் ஆங்கென்பதும்) அசைச்சொல்லுக்கும்பெயர் இடத்துக்கும்பெயர் (அணவலென்பது) கிட்டல் புணர்தலுக்கும்பெயர் (சந்தியென்பது) மாலைக்காலம் மூங்கில் நாற்றெருக்கூடுமிடம் இசைப்புக்கும்பெயர் (நந்தியென்பது) சிவன் இடபம் நந்தியீச்சுரனுக்கும்பெயர் (உந்தியென்பது) தேருருளை நதி கடல் நீர்ச்சுழி தொப்புளுக்கும்பெயர்-எ-று. (௨)

கந்துபண்டியுளிரும்புங் கம்பமும்யாக்கைமூட்டும் ... ...*
கந்துகங்குதிரைபந்தாங் கனமென்பபுயல்பாரப்பேர் ...*
பந்துகந்துகமுமட்டுப் படர்நீர்தாந்துருத்தியும்பேர் ... *
குந்தளமாதரோதி குழற்கொத்துக்குருளைமுப்பேர் ......*

(இ-ள்.) (கந்தென்பது) இருசு - தூண் - யாக்கையின்மூட்டுக்கும்பெயர் (கந்துகமென்பது) குதிரை - பந்துக்கும்பெயர் (கனமென்பது] மேகம்- பாரத்துக்கும்பெயர் (பந்தென்பது) எறியும்பந்து - மட்டத்துருத்திக்கும்பெயர் (குந்தளமென்பது ) பெண்மயிர் - மயிர்க்கொத்து - விலங்கின்குட்டிக்கும்பெயரொன்றவாறு. (௩)

வேந்தனேயரசன்றிங்கள் வியாழமிந்திரனுதித்தன் ... ...*
காந்தாரம்விசைகாடென்ப காழகங்கருமைதூசாம் ... ...*
ஏந்தல்பெருமைமேடாம்எஃகுருக்கொடுவேல்கூர்மை, ..*
கூந்தல்பெண்மயிர்பீலிப்பேர் குவலயங்குவளைபூமி......*

(இ-ள்.) (வேந்தனென்பது) இராசன்-சந்திரன்-சுரகுரு - தேவேந்திரன்-சூரியனுக்கும்பெயர் (காந்தாரமென்பது) ஓரிசை - காட்டுக்கும்பெயர் (காழகமென்பது) கறப்பு-ஆடைக்கும்பெயர் (எந்தலென்பது) பெருமை-மேட்டுக்கும்பெயர் (எஃகென்பது) உருக்கு - வேலாயுதம்-கூர்மைக்கும்பெயர்(கூந்தலென்பது) மாதர்மயிர் - மயிற்றோகைக்கும்பெயர் (குவலயமென்பது) குவளைப்போது - பூமிக்கும்பெயர்-எ-று. (௪)

அந்தரமுடிவுபேத மண்டமோடிடநாற்பேரோ ......... *
கந்தரமென்பமேகங் கழுத்தொடுமலைமுழைப்பேர்...... *
மந்தாரந்தருமரஞ்செம் பரத்தமுமாகுமென்ப ......... *
சிந்தூரம்புளிமாயானை செங்குடைதில்கஞ்செம்மை...... *

(இ-ள்.) [அந்தரமென்பது] முடிவு - வேறுபாடு - ஆகாயம்-இடத்துக்கும்பெயர் [கந்தரமென்பது] மேகம் - கழுத்து-மலைக்குகைக்கும்பெயர் [மந்தாரமென்பது] ஐந்தருவிலொன்று-செவ்வாத்தத்துக்கும்பெயர்[சிந்தூரமென்பது] புளிமா-யானை-சிவப்புக்குடை-பொட்டு-சிவப்புக்கும்பெயர்-எ-று. (௫)

கந்தருவம்பண்வாசி கவந்தமென்பதுநீர்மட்டை......... *
குந்தமேயொருவியாதிகுருந்தொடுகுதிரைகைவேல்...... *
செந்துவோரரகமோரிசீவனோடணுவுநாற்பேர்......... *
சிந்துநீர்முச்சீராறு கடல்குறளொருதேசப்பேர் ......... *

(இ-ள்) (கந்தருவமென்பது) இசைப்பாட்டு - குதிரைக்கும்பெயர் (கவந்தமென்பது) நீர் - உடற்குறைக்கும்பெயர் (குந்தமென்பது) ஓர்நோய் - குருந்தமரம் - குதிரை - கைவேலுக்கும்பெயர் (செந்துவென்பது) ஓரிநாகம்-கிழநரி-உயிர் - அணுவுக்கும்பெயர் (சிந்தென்பது) நீர் - முச்சீர் - நதி-கடல்-குள்ளம்-ஓர்தேசத்துக்கும்பெயர்-எ-று. (௬)

அந்திமுச்சந்திபாலை யாழிசையிரவுமாலை.................. *
நந்தென்பநத்தைசங்காம் நாறுதன்மணமுண்டாதல் .... *
மைந்தனேதிறலோன்சேயாம் வசந்தமேவேனில்வாசம் ... *
வந்தியர்புகழ்வோர்பேரு மலடிகள்பேருமாமே ......... *

(இ-ள்,) (அந்தியென்பது) முத்தெருக்கூடுமிடம்-பாலையாழிசை - இராத்திரி-மாலைகாலத்துக்கும்பெயர் (நந்தென்பது) நத்தை-சங்குக்கும்பெயர் (நாறுதலென்பது) மணத்தல்-உண்டாதலுக்கும்பெயர் (மைந்தனென்பது) திண்ணியன்-மகனுக்கும்பெயர் (வசந்தமென்து) வசந்தகாலம்-வாசனைக்கும்பெயர் (வந்தியரென்பது) புகழ்வோர்-மலடிகட்கும்பெயர்-எ-று. (எ)

விந்தமோரொண்ணும்வெற்பும் விருத்தமேவட்டமுப்பாம் *
அந்தணரறவோர்பார்ப்பார் அணிபடைவகுப்பணைப்பேர் *
அந்தகன்குருடன்கூற்றும் அங்காரகன்தீச்செவ்வாய்.... *
மந்தனேசனிகூர்ப்பில்லாமனுடனுமிருபேராமே.......... *

(இ-ள்.) (விந்தமென்பது) ஒரொண்-மலைக்கும்பெயர் (விருத்தமென்பது) வட்டவடிவு - மூப்புக்கும்பெயர் (அந்தணரென்பது) முனிவர் - பார்ப்பாருக்கும்பெயர் (அணியென்பது) படைவகுப்பு - ஆபரணத்துக்கும்பெயர் (அந்தகனென்பது) குருடன் - இயமனுக்கும்பெயர் (அங்காரகனென்பது) நெருப்பு- செவ்வாய்க்கும்பெயர் (மந்தனென்பது) சனி-கூர்மையில்லானுக்கும்பெயர்-எறு

நகரவெதுகை-முற்றிற்று.

# பகரவெதுகை.

உப்புமெல்லியலாராடலுவர்கடலினிமைநாற்பேர்........*
செப்பமேநடுநிலைப்பேர் தெருவொடுநெஞ்சமாகும்......*
துப்பரக்கூற்றந்தூய்மைதுகிர்பகையனுபவப்பேர்.......*
கப்பணமிரும்பிற்செய்தநெருஞ்சின்முட்கைவேலாமே. *

(இ-ள்.) (உப்பென்பது) மகளிர்விளையாட்டு-உவர்த்தல்-கடல் - தித்திப்புக்கும்பெயர் (செப்பென்பது) நடுநிலை - வீதி - மார்புக்கும்பெயர் (துப்பென்பது) அரக்கு - அறிவு- சுத்தம் பவளம் பகை அனுபோகத்துக்கும்பெயர் (கப்பணமென்பது) இரும்புனியற்றிய நெருஞ்சின்முள்-கைவேலுக்கும்பெயர் எறு-

தாபரமலைபோனிற்றல்சடமொடுதருவுமுப்பேர்... ... ...*
நீபமுத்திரட்டாதிப்பேர் நிமித்தநீர்க்கடம்புமாகும்.......*
யூபமேகவந்தம்வேள்விக்குறுதம்பம்படைவகுப்பாம்....*
சாபமேசபித்தல்வில்லாம் தளிமமேயழகுமெத்தை ... ...*

(இ-ள்.) (தாபரமென்பது) மலைபோனிற்றல் - உடல் - மரப்பொதுவிற்கும்பெயர் (நீபமென்பது) உத்திரட்டாதிநட்சத்திரம்-காரணம் - நீர்க்கடம்புக்கும்பெயர் (யூபமென்பது) உடற்குறை - யாசப்பசுவைச்கட்டுந்தறி - படைவகுப்புக்கும்பெயர் (சாபமென்பது) சபித்தல் - வில்லுக்கும்பெயர் (தளிமமென்பது) அழகு-மெத்தைக்கும்பெயர்-எ-று. (உ)

சிப்பென்பகதவிற்றாழுஞ் சிவுகங்குமாமென்ப...... ...*
நாப்பணென்பதும்தோட்தட்டு நடுவும்யாழுறுப்புமுப்பேர்,
காப்பென்பகாவலோடுகதவும்வெண்ணீறுமாகும்........*
யாப்பென்பகவிகைகட்டாம் இறாதேன்கூடெருதுமீனே *

(இ-ள்.) (சிப்பென்பது) தாருக்கோல்-சிப்புக்கும்பெயர் (நாப்பணென்பது தேர்த்தட்டு - நடுயாழினுறுப்புக்கும்பெயர் (காப்பென்பது) காவல் - கதவுவெண்ணீற்றுக்கும்பெயர் (யாப்பென்பது) பாட்டு - கட்டுக்கும்பெயர் (இறாலென்பது தேன்கூடு-எருது-ஓர்மீனுக்கும்பெயர்-எ-று. (௩)

பகரவெதுகை-முற்றிற்று.

# மகரவெதுகை,

சமன்யமனடுவுமாகும் சலமென்பவயிரநீர்போய்........*
கமலநீர்வனசமும்பேர் கலாஞ்சினங்கொடுமையாகும் ...*
குமரிசற்றாழைகன்னிகொற்றவைகாளிக்கும்பெயர் ... ...*
ஞமலிநாய்மயில்கள்ளென்பநனைகள்ளுமலர்மொட்டும்பேர்

(இ-ள்.) (சமமென்பது) இயமன் - நடுவுக்கும்பெயர் (சலமென்பது)தணியாக்கோபம் - நீர் - இபத்துக்கும்பெயர் (கமலமென்பது) சலம் - தாமரைக்கும்பெயர் (கலாபமென்பது) கோபம் - குரூரத்துக்கும்பெயர் (குமரியென்பது) சற்றாழை - கள்ளி - துர்க்கை காளிக்கும்பெயர்(ஞமலியென்பது) நாய்-மயில்-கள்ளுக்கும்பெயர் (நனையென்பது) கள்-பூவரும்புக்கும்பெயர்-எ-று. (க)

சாமமோர்வேதம்பச்சை சாமமேகருமைநாற்பேர் ... ...*
வாமமேகுறளிடப்பால் வனப்பொடுதொடையுமாமே ....*
பூமலர்வனப்புக்கூர்மைபொலிவொடுபிறப்புப்பூமி ......*
ஏமமேசேமங்காவலின்பம்பொன்னிரவேமையால்,........*

(இ-ள்.) [சாமமென்பது] ஓர்வேதம் - பச்சை - இரவு - கறுப்புக்கும்பெயர் [வாமனென்பது] குறள்-இடதுபக்கம்-அழகு-தொடைக்கும்பெயர் [பூவென்பது] மலர் - அழகு - கூர்மை - பொலிவு-பிறப்பு-பூமிக்கும்பெயர்(எமமென்பது) புதையல்-காவல்-சுகம்-பொன்-இராத்திரி- மயக்கத்துக்கும்பெயர்-எ-று.()

உம்பரோதேவராகு முயிர்நிலமுடன்மேலும்பேர்......... *
வம்பென்பபுதுமைகச்சு மணநிலையின்மைநாற்பேர்.....*
கும்பமேகுடமிராசி கும்பிமத்தகமுமாகும் ..............*
தும்பென்பசிம்புடோடாம்சுகமென்பகிளியேயின்பம்...*

(இ-ள்.) [உம்பரென்பது] தேவர்-தேவலோகம் - மேலுக்கும்பெயர் [வம்பென்பது] புதுமை-முலைக்கச்சு-வாசனை-நிலையில்லாமைக்கும்பெயர்(கும்பமென்பது]குடம்-ஓரிராசி-யானைமத்தகத்துக்கும்பெயர்[தம்பென்பது] சிம்புள்-ஓர் கயிற்றுக்கும்பெயர் [சுகமென்பது] கிளி-இன்பத்துக்கும்பெயர்-எ-று. (ரு)

ஆம்பல்வேய்கள்ளுக்கவ்வையல்லிவங்கியமேயானை........*
சாம்பல்கூம்புதல்பழம்பூத் தமிழென்பதினிமைநீர்மை ...*
தாம்பென்பகயிறுதானே தாமணிதனக்குப்பேராம்........*
காம்புவேய்மலர்த்தாள்பட்டே கடிமலர்க்கொம்பேநாற்பேர்

(இ-ள்:) [ஆம்பென்பது] மூங்கில் - கள் - துன்பம்-அல்லி-வேய்ங்குழல் யானைக்கும்பெயர் [சாம்பென்பது] குவிதல் - பழம்பூவிற்கும்பெயர் [தமிழென்பது] தித்திப்பு - குணத்துக்கும்பெயர் [தாம்பென்பது] கயிறு- தாமணிக்கும்பெயர் [காம்பென்பது] மூங்கில் - பூவின்காம்பு - பட்டுச்சீலை - மரக்கொம் பெயரொன்றவாறு.

(ச)

அம்மையேவருபிறப்பு மழகுமாந்தாயுமாகும், சும்மையெ
ன்பதுவேநெற்போர் நாடொலிசுமையுஞ்சொல்லு, செம்மை
செவ்வையுஞ்சிவப்புந் திரிதலேயுலாவல்கேடாம், கொம்மை
யேயிளமைவட்டங்கொங்கைகைகுவித்துக்கொட்டல். ....*

(இ-ள்.) [அம்மையென்பது] வருபிறப்பு - அழகு - தாய்க்கும்பெயர் [சும்மையென்பது] நெற்போர் - நாடு - சந்தம் - சுமைக்கும்பெயர் [செம்மையென்பது] செவ்வை - சிவப்புக்கும்பெயர் [திரிதலென்பது] உலவல் - கேட்டுக்கும்பெயர் [கொம்மையென்பது] இளமை - வட்டவடிவு - முலை - கைகுத்துக்கொட்டலுக்கும்பெயர்-எ-று. (௫)

அம்மழகசைச்சொனீராம்அழனந்திப்பிணமுமாகும். ...*
கம்மென்பதலையாகாயங்கனங்காநீர்விசிவெளுப்பு........*
செம்மலேபழம்பூவிசன்சினேந்திரன்சிறந்தோன்மைந்தன்*
கம்மியர்கைவினைப்பேர்கண்ணாளர்தாமுமாமே...........*

(இ-ள்.) [அம்மென்பது] அழகு - அசைச்சொல்-நீருக்கும்பெயர்[அழனமென்பது] நெருப்பு-பிரேதத்துக்கும்பெயர் [கம்மென்பது] தலை - ஆகாயம்-மேகம்-காற்று-நீர்-பிரமன்-வெண்மைக்கும்பெயர் [செம்மலென்பது] பழம்பூ-சிவன்-அருகதேவன் - சிறப்புற்றோன் - மகனுக்கும்பெயர் [கம்மியரென்பது] தொழில்செய்வோர்-கம்மாளருக்கும்பெயர் எ-று. (௬)

வாமனங்குறள்புராண மாதிரக்கயத்திலொன்றும் ........*
காமரமத்தநாளோ டடுப்பிசைப்பொதுவுங்காட்டும் .....*
நேமிசக்கரம்பார்வட்ட நேமிப்புட்கடலம்பேரோ... ...*
தேமென்பதிடந்தித்திப்புத் தேனுற்றந்திசைதேசப்பேர். .*

(இ-ள்.) [வாமனமென்பது) குள்ளம்-ஓர்புராணம் -தென்றிசையானைக்கும்பெயர் (காமரமென்பது) அத்தநட்சத்திரம்-அடுப்பு இசைப்பொதுவிற்கும்பெயர் (நேமியென்பது) சக்கராயுதம்-பூமி-வட்டவடிவு-சக்கரவாகப்புள்-சமுத்திரத்துக்கும்பெயர் (தேமென்பது) இடம்-தித்திப்பு-தேன்-வாசனை-திக்கு-தேசத்துக்கும்பெயர்-எ-று. (௭)

தாமம்வெற்பொழுங்குகொன்றை சாந்தொளிநகரந்தாம்பு*
பூமணிக்கோவைமாலை பொருகளங்கரியீராறும் ... ...*
சோமனோர்வள்ளலிந்து சுரும்பென்பமலையும்வண்டும் ...*
சாமியேமுதல்வன்செவ்வே டலைவியாசான்வெறுக்கை.....*

(இ-ள்.) (தாமமென்பது) மலை-ஒழுங்கு-கொன்றைமரம்- சாந்து-பிரகாசம்-பட்டணம்-கயிறு பூமணிக்கோவை-பூமாலை-போர்க்களம்- யானைக்கும்பெயர் (சோமனென்பது) ஓர்வள்ளல் - சந்திரனுக்கும்பெயர் (சுரும்பென்பது) மலை-வண்டுக்கும்பெயர் (சாமியென்பது) கடவுள்-முருகக்கடவுள்-முதல்வி-குரு-பொன்னுக்கும்பெயர்-எ-று. (௮)

குமுதமேயடுப்போர்திக்கின் குஞ்சரமொலிவெண்ணெய்தல்*
சிமயமேமலைவெற்புச்சி தீத்தீயேநரகுதீங்காம் ... ...... *
அமரலேபொலிவுதுன்னல அரிறூறுபிணக்குமாசு ... ...*
சிமிலியேதடிமூசிக்கஞ் சிள்வீடுதானுமாமே .. ... *

(இ-ள்.) (குமுதமென்பது) அடுப்பு-மேற்றிசையானை-சத்தம்- வெள்ளாம்பலுக்கும்பெயா (சிமயமென்பது) மலை- மலையினுச்சிக்கும்பெயர் [தீயென்பது) நெருப்பு-நகரம்-தீமைக்கும்பெயர் (அமரலென்பது) பொலிவு -நெருங்கலுக்கும்பெயர் (அரிலென்பது) சிறுதூறு-பிணக்கு-குற்றத்துக்கும்பெயர் (சிமிலியென்பது) சிகை-சிள்வண்டுக்கும்பெயர்-எ-று. (௯)

சம்புவேயிரவிநாவல் சங்கரனயன்மாலோரி ... ... ...*
தும்பியேகளிறுவண்டாம் துன்னலேசெறிதல்சோர்தல்.. *
கம்புளேசங்குசம்பங் கோழியென்றிருபேர்காட்டும் .....*
அம்பரங்கடல்விண்டுசாம் அண்ணலேதலைவன்பீடு .....*

(இ-ள்.) [சம்புவென்பது] சூரியன்-நாவன்மரம்-சிவன்-பிரமன்-திருமால் நரிக்கும்பெயர் [தும்பியென்பது) யானை-வண்டுக்கும்பெயர்(துன்னலென்பது) நெருங்கல் - கிட்டலுக்கும்பெயர் (கம்புளென்பது) சங்கு- சம்பங்கோழிக்கும் பெயர் (அம்பரமென்பது) கால்-ஆகாயம் - வஸ்திரத்துக்கும்பெயர் (அண்ணலென்பது) அரசன் பெருமைக்கும்பெயர்-எ-று. (௰)

கிம்புரிமுடிடந்தப்பூண் கேட்டைதான்மூகடியோர்நாள். *
கும்பிசேறானைபூமி குலைதான்செய்கரைகாய்க்கொத்தாம்...*
உம்பலாண்விலங்குவேழ முயர்குலமெழுச்சிக்கும்பேர் ...*
அம்பலேபழிச்சொல்சில்லோ ரறித்தவர்தூற்றலாமே.....*

(இ-ள்.) (கிம்புரியென்பது) மூடி -யானைக்கொம்பிற்பூணுக்கும்பெயர் (கேட்டையென்பது) மூதேவி-ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் (கும்பியென்பது) சேறு-யானை-நரகத்துக்கும்பெயர் (குலையென்பது) செய்கரை - மரக்குலைக்கும்பெயர் (உம்பலென்பது) ஆண்மிருகம்-யானை-குலம்-எழுச்சிக்கும்பெயர் அம்பலென்பது) பழிச்சொல்-சிலரறிந்து-தம்முட்புறம்கூறலுக்கும்பெயர்-எ-று. (௰௧)

கம்பலையச்சமோசை கம்பிகந்துன்பநாற்பேர் ... ... *
செம்புலம்பாலைசேருந் திணைசெருக்களமிரண்டாம் .....*
தம்பமேகவசத்தூணும் சமழ்த்தல்வருத்தநாணம் .....*
கம்பமேநடுக்கந்தம்பம் கந்தனேயருகன்செவ்வேள் .....*

(இ-ள்.) [கம்பலையென்பது] பயம்-சத்தம்- நடுக்கம்- துன்பத்துக்கும்பெயர் (செம்புலமென்பது) பாலைத்திணை- போர்க்காந்துக்கும்பெயர் (தம்பமென்பது) கவசம்- தூணுக்கும்பெயர் (சமழ்த்தலென்பது) வருத்தம்- வெட்கத்துக்கும்பெயர் (கம்பமென்பது) நடுக்கம்-தூணுக்கும்பெயர் [கந்தனென்பது) அருகதேவன்-முருகக்கடவுளுக்கும்பெயர்-எ-று. (௰௨)

அமரமேவிபுதர்தெவ்வர் அவந்திதான்கிளியேயூராம் ... *
அமுதபாறேவருண்டி யாகுமின் சுதையுமப்பேர்......... *
அமலையேயாரவாரமயினியேயுமையுமப்பேர் ............ *
தமமிருளிராகுவின்பேர் சாங்கம்விற்பொதுமால்வில்லா... *

(இ-ள்.) (அமரமென்பது) தேவ - பகைஞருக்கும்பெயர் (அவந்தியென்பது) கிளி-ஒரூருக்கும்பெயர் (அமுதமென்பது) பால்-தேவருணவு- அமிர்தத்துக்கும்பெயர் (அமலையென்பது) ஒளி-சோறு-பார்வதிக்கும்பெயர் (தமமென்பது) இருள்-இராகுகோளுக்கும்பெயர் (சாரங்கமென்பது) விற்பொது - திருமால்-வில்லுக்கும்பெயர்-எ-று. (௰௩)

ஆம்பிரம்புளிமாத்தேமா வாம்புளிப்பினுக்குமப்பேர் ... *
சாம்புபொன்பறையாமென்ப தாண்டவங்கூத்தேதாவல்... *
பாம்பென்பகஞமராளம் பையராப்படமேபச்சை ...... *
ஆம்பியேயொலிகாளானும் அயிராணியுமையிந்திராணி ... *

(இ-ள்.) [ஆம்பிரமென்பது] புளிமா-தேமா - புளிக்கும்பெயர் [சாம்பென்பது] பொன் பறைக்கும்பெயர் [தாண்டவமென்பது] கூத்து -தாண்டுதலுக்கும்பெயர் [பாம்பென்பது] சாரை- பாம்புக்கும்பெயர் [பையென்பது] பாம்பின்படம்- பச்சைக்கும்பெயர் [ஆம்பியென்பது] சத்தம் - காளானுக்கும்பெயர் [அயிராணியென்பது] பார்வதி-இந்திராணிக்குமபெயர்-எ-று. (௰௪)

காமனேவாசவன்வேள் கழுதுந்திப்பிலியுமாகும் ... ... *
காமமேவிரகமாசை கணிச்சிதான்மழுவேதொட்டி ... ... *
பூமனேபிரமன்செவ்வாய் புரையோரீழோர்மேலோர்... *
சேமமேகாவலின்பம் தெக்கணம்வலந்தெற்காகும்... ... *

(இ-ள்.) [காமனென்பது] தேவேந்திரன்-மன்மதன் -வண்டு-திப்பிலிக்கும்பெயர் [காமமென்பது] காமநோய்- ஆசைக்கும்பெயர் [கணிச்சியென்பது] மழு- அங்குசத்துக்கும்பெயர் [பூமனென்பது] பிரமதேவன் - செவ்வாய்க்கும்பெயர் [புரையோரென்பது] கீழ்மக்கள்- மேன்மக்கட்கும்பெயர் [சேமமென்பது] காவல்-இன்பத்துக்கும்பெயர் [தெக்கணமென்பது] வலப்பக்கம் - தெற்குக்கும்பெயர் எ-று. (௰௫)

காமுகன்விடன்வேண்மாலாம் காதென்பகொலையுங்காதும் *
கோமளம்பசுவனப்புக் கூறியவிளமைக்கும்பேர் ... ... *
நாமமாங்கலித்தல்மிக்கு நற்பொலிவெழுச்சியோசை ... *
மாமையேநிறம்வனப்பாம் மலயசஞ்சந்தந்தென்றல் ... ... *

(இ-ள்) [காமுகனென்பது] தூர்த்தன்- மன்மதன்- திருமாலுக்கும்பெயர் [காதென்பது] கொலை-காதுக்கும்பெயர் [கோமளமென்பது] பசு-அழகு-இளமைக்கும்பெயர் [கலித்தலென்பது] மிகுதி- பொலிவு-எழுச்சி- சத்தத்துக்கும்பெயர் [மாமையென்பது] நிறம்- அழகுக்கும்பெயர் [மலயசமென்பது] சந்தனமரம்-தென்றலுக்கும்பெயர்-எ-று. (௰௬)

மகரவெதுகை-முற்றிற்று.

# யகரவெதுகை.

காயமெய்விண்வெண்காயம் பெருங்காயம்கரிகரித்தல்... *
நேயநெய்யெண்ணெயன்பாம் நிறமென்பமருமங்காந்தி...*
ஆயமேகவற்றிற்ருயு மாதாயமாதர்கூட்டம்..............*
சாயலென்பதுமேம்பாடு தருமழகுடனேமேன்மை ... ...*

(இ-ன்.) [காயமென்பது] உடல்-ஆகாயம் வெண்சாயம் - பெருங்காயம்-கரிகரிப்புக்கும்பெயர் [நேயமென்பது] நெய்-எண்ணெய்- அன்புக்கும்பெயர் [நிறமென்பது] மார்பு-பிரகாசத்துக்கும்பெயர் [ஆயமென்பது]கவற்றிற்ருயம் இலாபம்-பெண்கள்கூட்டத்திற்கும்பெயர் [சாயலென்பது] மேம்பாடு-அழகு மேன்மைக்கும்பெயர்-எ-று. (க)

வயநீர்புட்பொதுவலிப்பேர் வயல்வெளிபழனமும்பேர்...*
சயம்வெற்றிசருக்கரைப்பேர் சடமுடல்வஞ்சம்பொய்யாம்*
நியமமேநியதிவீதி நிட்சயநகரங்கோயில்... ... ... ...*
இயமென்பவொலியேவார்த்தை வாச்சியமிம்மூப்பேரோ ...*

(இ-ன்.) [வயமென்பது] நீர்- பறவைப்பொது- வலிமைக்கும்பெயர் [வயலென்பது] வெளி-கழனிக்கும்பெயர் [சயமென்பது] வென்றி- சருக்கரைக்கும்பெயர் [சடமென்பது] சரீரம்-வஞ்சனை- பொய்க்கும்பெயர் [நியமென்பது] செய்கடன்-தெரு-நிச்சயம்-பட்டணம்- கோயிலுக்கும்பெயர் [இயமென்பது] சத்தம்-சொல்-வாச்சியப்பொதுவிற்கும்பெயர்-எ-று. (உ)

அயமென்பநீர்தடாக மாடுவாம்பரியிரும்பாம் ......... *
கயமேன்மைகுளமேயாழங் களிறுகீழ்பெருமைதேய்வாம் *
பயமென்பசுதைநீரச்சம் பாலொடுபயன்பேனாந்தே .....*
அயனமேவழியினும மாண்டினிற்பாதிக்கும்பேர் ........*

(இ-ன்.) [அயமென்பது] நீர்- குளம்- ஆடு- குதிரை-இரும்புக்கும்பெயர் [கயமென்பது] மேன்மை-குளம்-ஆழம்-யானை-கீழ்-பெருமை- தேய்வுக்கும்பெயர் [பயமென்பது] அமிர்தம் - நீர்-பயம்-பால்-பயனுக்கும்பெயர் [அயனமென்பது] வழி-வருடப்பதிக்கும்பெயர்-எ-று. (௩)

பயிரொலிபயிலேசைபைங்கூழ் பறக்கும்பட்குரலிந்நாற்பேர்*
கயினியேயத்தநாளுங் கைம்மையுமிருபேர்காட்டும் ......*
வயிரமேசெற்றங்கூர்மை வச்சிரமோர்பணியேசேகு ... ...*
கயில்பிடர்த்தலையேபூணின் கடைப்புணர்விருபேர்தானே *

(இ-ன்.) [பயிரென்பது] சத்தம்-சைகை-பயிர் பறவைக்குரலுக்கும்பெயர் [கயினியென்பது] அஸ்தநட்சத்திரம்-கைம்பெண்ணுக்கும்பெயர்[வயிரமென்பது] சலஞ்சாதித்தல்-கூர்மை-வச்சிராயுதம்-வச்சிரமணி-மரவயிரத்துக்கும்பெயர் [கயிலென்பது] பிடரி-ஆபரணக்கடைப்புணர்வுக்கும்பெயர்-எ-று. (௪)

ஐயமேபிச்சையேற்கு மோட னுமானம்பிச்சை ... ... ...*
ஐயனேமூத்தோன்சாத னப்பனீச்சுரனுற்பேரோ ...... ...*
தொய்யமேலவழவுஞ்சேறுந் துயரமூமகிழ்ச்சியும்பேர் ... *
மொய்செருக்களம்போரியானைமொய்த்தல்வண்டொடுதிரட்பேர்:

(இ-ள்.) [ஐயமென்பது] பிச்சையேற்கும்பாத்திரம்- சந்தேகம்-பிச்சைக்கும்பெயர் [ஐயனென்பது] மூத்தோன்-ஐயனுர்-தகப்பன்-சுவாமிக்கும்பெயர் [தொய்யமென்பது] உழவு- சேறு- துன்பம் -களிப்புக்கும்பெயர் [மெய்யென்பது] போர்க்களம்- யுத்தம்- யானை-மொய்த்தல்- வண்டு- கூட்டத்துக்கும்பெயரொன்றவாறு. (ரு)

வயவனேவீரனேடு வலியான்காதலனுமாகும் ... ....... ..*
குயிறமேலசெறிதல்கூவல் குடைதல்பண்ணிதனுற்பேரோ ...*
வயினிடமுதரம்வீடாம் வயாக்கருவருத்தங்காதல்.........*
மயல்செத்தைமயக்கம்பேயாம் மறவரோவயவர்வேடர்......*

(இ-ள்.) (வயவனென்பது) வீரன் - வலியன்-தலைவனுக்கும்பெயர் (குயிரலென்பது) நெருங்கல்-அழைத்தல்-குளித்தல்-செய்தலுக்கும்பெயர்(வயிலென்பது) இடம்-வயிறு-வீட்டிற்கும்பெயர் (வயாவென்பது) கருப்பம் - வருத்தம்-ஆசைக்கும்பெயர் (மயலென்பது) செத்தை-மயக்கம்-பேய்க்கும்பெயர் (மறவரென்பது) படைவீரர்-வேடருக்கும்பெயர்-என்று. (சு)

குயிலோகோகிலமுஞ்சொல்லுங் கொண்மூவுந்துளையுநாற்பேர், வயமாவேகுதிரைசிங்க மதகரிபுலியுமாகும்........ ...*
வியலென்பவிசாலப்பீடாம் வேய்துளையோற்றுமூங்கில்..*
மயிலையேமீனராசி மீனிருவாட்சிமுப்பேர்..................*

(இ-ள்.) (குயிலென்பது) ஓர்பட்சி-வார்த்தை-மேகம்- துளையுடைப்பொருளுக்கும்பெயர் (வயமாவென்பது)குதிரை-சிங்கம்-மதயானை-புலிக்கும்பெயர் (வியலென்பது)விரிவு-பெருமைக்கும்பெயர் (வேயென்பது) உட்டுளை-வேவு-மூங்கலுக்கும்பெயர் (மயிலையென்பது) மீனராசி - மீன - இருவாட்சிக்கும் பெயரொன்றவாறு. (எ)

சயிந்தவங்குதிரையோடு தலையுமிந்துப்புமாகும் ... ......*
குயந்தனமிளமையோடு கூரரிவாளுமுப்பேர்.......... ...*
நயந்தேனே நண்பன்கொண்கன் நலம்விருச்சிகமேநன்மை, பயம்பென்பதானைவீழும் படுகுழிபள்ளமாமே. ...*

(இ-ள்.) (சயிந்தவமென்பது) குதிரை-தலை - இந்துப்புக்கும்பெயர் (குயமென்பது) முலை - இளமை - அரிவாளுக்கும்பெயர் (நயந்தோனென்பது) தோழன் - கணவனுக்கும்பெயர் (நலமென்பது) தேள் - நன்மைக்கும்பெயர் (பயம்பென்பது) யானைவீழும்படுகுழி-பள்ளத்துக்கும்பெயர்-என்று. (அ)

இயனடைதமிழ்சாயற்பேர் எல்லையேபொழுதுவாலி. ...*
குயவென்பகரிகறித்தல் குளிர்நறும்புகையிரண்டாம்......*

செயிரொன்பசினங்குற்றப்பேர் சேடிவிஞ்சையரூர்பாங்கி *
உயவைகாக்கணமேமுல்லையுற்றகான்யாறுமாமே.. .....*

(இ-ள்.) (இயலென்பது) ஒழுக்கம்-இயற்றமிழ்-சாயலுக்கும்பெயர் (எல்லையென்பது) காலம்-தடாகத்துக்கும்பெயர் (குயலென்பத) தாளிப்பு-நறும்புகைக்கும்பெயர் (செயிரொன்பது) கோபம்-குற்றத்துக்கும்பெயர் (சேடியென்பது) வித்தியாதரருக்கும்-தோழிக்கும்பெயர் (உயவையென்பது) காக்கணஞ்சேகு-முல்லைக்கொடி-காட்டாற்றுக்கும்பெயர்-எ-று. (௯)

செய்யலேயொழுக்கங்காவல் சேறுசெய்வினைநாற்பேரே. *
நெய்தலேகடற்சார்பூமி நெய்தற்பூச்சாபறைப்பேர்.......*
வெய்யோனுதவனேதீயோன்விரும்பினன்றனக்கும்பேர் *
ஐயையேயாயுமையாதுர்க்கை மகளருந்தவப்பெண்ணுசான். *

(இ-ள்.) (செய்யலென்பது) ஒழுக்கம்-காவல்-சேறு- செய்தொழிலுக்கும்பெயர் (நெய்தலென்பது) நெய்தநிலம்-ஆம்பற்பூ-சாபறைக்கும்பெயர் (வெய்யோனென்பது) சூரியன்-கொடியோன்- விருப்புற்றோனுக்கும்பெயர் (ஐயையென்பது) பார்வதி-துர்க்கை-மகள்-தவப்பெண்-தலைவிக்கும்பெயர்-எ-று. (௰)

ஐயழகிடைச்சொல்கோழை யரசனேடிருமல்சாமு ......*
மையென்பதஞ்சனங்கார் மலடிருளாடுமாசாம்..........*
கையிடம்படைவகுப்பொப்பனைசெங்கைசிறுமைசீலம்....*
வையந்தேரோரோணி வசுந்தரா சிவிகையூர்தி..........*

(இ-ள்.) (ஐயென்பது)அழகு-இடைச்சொல்-கோழை-இராசன்-இருமல்-கடவுளுக்கும்பெயர் (மையென்பது) மை-மேகம்-மலடு-இருள்-ஆடு-குற்றத்துக்கும்பெயர் (கையென்பது) இடம்-படைவகுப்பு - அலங்காரம்- கைத்தலம்-அற்பம் - ஒழுக்கத்துக்கும்பெயர் (வையமென்பது) சேர் - எருத-உரோகிணி நட்சத்திரம்-பூமி-தண்டிகை-வானத்துக்கும்பெயர்-எ-று. (௰௧)

சேய்குகனிளமைதூரஞ் செம்மைசேண்சிறுவன்செவ்வாய். *
வாய்குழலிடம்வாய்மைப்பேர் மாருதியனுமன்வீமன் ...*
ஆய்தலேநுணுக்கந்தேர்தல் ஆறொன்பவழிநதிப்பேர்......*
வேய்தல்சூடுதன்முடற்பேர் விநாயகனருகன்முன்னோன். *

(இ-ள்.) (சேயென்பது) முருகக்கடவுள்-இளையதன்மை-தூரம் - சிவப்பு-நீலம்-மகன்-செவ்வாய்க்கும்பெயர் (வாயென்பது) ஊதுகுழல்-இடம் - உண்மைக்கும்பெயர் (மாருதியென்பது) அனுமன் - வீமனுக்கும்பெயர் (ஆய்தலென்பது) நுண்மை-ஆராய்தலுக்கும்பெயர் (ஆறென்பது) வழி- நதிக்கும்பெயர் (தேய்தலென்பது) தரித்தல்-முடுதலுக்கும்பெயர் (விநாயகனென்பது) அருகதேவன்-கணபதிக்கும்பெயர்-எ-று. (௰௨)

அயிர்கருப்பின்றேங்கட்டியான்றநுண்மணலேநுண்மை. .*
செயமொழிலொழுக்கமென்பதெய்வமேகடவுளுமாம். ...*

நயமென்பமகிழ்ச்சியின்ப நன்மைநற்பயனூற்பேரோ....*
பெயரொன்பபெருமைகீர்த்தி பேசுநாமப்பேராகும்......*

(இ-ள்.) [அயிரொன்பது] கருப்பங்கட்டி-நுண்ணல்- நுண்மைக்கும்பெயர் [செயலென்பது] தொழில்-ஒழுக்கத்துக்கும்பெயர்[தெய்வமென்பது) கடவுள்-ஊழிற்கும்பெயர் [நயமென்பது] களிப்பு-இன்பம்-நன்மை-பயனுக்கும்பெயர் [பெயரொன்பது) பெருமை-புகழ்பேருக்கும்பெயர்-எ-று. (யரு)

யகரவெதுகை-முற்றிற்று.

# ரகரவெதுகை,

சிகரமேகரகமாகுஞ் சென்னியிற்சோடுமப்பேர்.........*
கரகமேயாலங்கட்டி கமண்டலத்துளிநீர்கங்கை..........*
மரபுதான்முறைமைதொன்மை மறலென்பபிணக்குங்கூற்று
ம், சரபமெண்காற்புள்ளென்ப வரையாடுதானுமாமே ...*

(இ-ள்.) [சிகரமென்பது) கரகம் - தலைச்சிராவுக்கும்பெயர் [கரகமென்பது) மழைக்கட்டி-கமண்டலம்- நீர்த்துளி -கங்கைக்கும்பெயர் மரமெனபது] பாரம்பரியம்-பழைக்கும்பெயர் [மறலென்பது]பிணக்கு-இயமனுக்கும்பெயர் [சரபமென்பது) எண்காற்பட்சி-வரையாட்டுக்கும்பெயர்-எ-று. (க)

இரதமேபுணர்ச்சி சூத மின்சுவையயாஞான்பொற்றேர்...*
அரணமேகவசங்காடே யணிமதில்வேலிநாற்பேர்... ......*
கரணமெண்மனுதிகூத்துக் கல்விகாரணமைப்பேரோ......*
சரணந்தான்மறைபுகற்பேர் தன்னமான்கன்றேயற்பம் ...*

(இ-ள்) [இரதமென்பது] சையோகம்-இரசம்-இனியசுவை அரைநாண் தேருக்கும்பெயர் [அரணமென்பது] மெய்க்கவசம் - காடு- மதில்-வேலிக்கும் பெயர் [கரணமென்பது] எண்ணிக்கை- மனமுதலியகரணம் - கூத்தின்விகற்பம்-சய்யோகம்- உபகரணத்துக்கும்பெயர் [சரணமென்பது) கால் - அடைக்கலம்-புகுதலுக்கும்பெயர் [தன்னமென்பது] பசுவின்கன்று -சிறுமைக்கும்பெயரொன்றவாறு. (உ)

உரமென்பவலியேஞான மூக்கமேமார்புநாற்பேர்.........*
சிரமென்பநெடுங்காலப்பேர் சென்னியுமன்னதேயாம்... *
புரமென்பபுரிமூன்மெய்ப்பேர் புரவலன்வள்ளல்வேந்தன் *
கரமென்பகிரணஞ்செங்கை கழுகைநஞ்சிறுத்தலும்பேர் *

(இ-ள்.) [உரமென்பது] வலிமை - ஞானம்- உள்ளக்கிளர்ச்சி- மார்புக்கும் பெயர் [சிரமென்பது] நெடுங்காலம்- தலைக்கும்பெயர் [புரமென்பது) மருதநிலத்தூர்-முன்-உடலுக்கும்பெயர் [புரவலென்பது) கொடையாளன் அரசனுக்கும்பெயர் [கரமென்பது) ஒளி-கைத்தலம்-கழுதை-விடம் - குடியிறைக்கும் பெயரொன்றவாறு. (ங)

அரவநூபுரம்பாம்பேனா யாயவென்பருத்தமாய்தல்......*
பரவைவாரிதிபரப்புப் பங்கயமாதின்கூத்தே ... ... ......*
இரலையேகலையூதுங்கொம் பிரண்டுடன்முதனாளென்ப ... *
அரசன்னிராச்சியப்பேர் அம்பிநாவாயேதெப்பம் ... ...*

(இ-ள்.) [அரவமென்பது] காற்சிலம்பு-பாம்பு-ஒலித்தலுக்கும்பெயர்[ஆயவென்பது) வருத்தம்-ஆராய்தலுக்கும்பெயர் [பரவையென்பது) கடல்-பரப்பு திருமகளாடலுக்கும்பெயர் [இரலையென்பது) ஆண்மான்-ஊதுகொம்பு-அச்சுவினிநட்சத்திரத்துக்கும்பெயர் [அரசென்பது) அரசன் - இராச்சியத்துக்கும் பெயர் [அம்பியென்பது) மரக்கலம்-தெப்பத்துக்கும்பெயர்-எ-று. (௪)

அரம்பைதெய்வப்பெண்வாழை ஆணுவேயிரதநன்மை··· *
சரந்தனிவளிவடப்போர் சாயகநாணற்பற்பேர்..........*
நரந்தமென்பதுநாரத்தை நாருங்கத்தூரிக்கும்பேர் ......*
சுருங்கையேகரந்துபண்ணுங் கற்படைநுழைவாயிற்பேர் *

(இ-ள்.) [அரம்பையென்பது] தெய்வப்பெண்-வாழைக்கும்பெயர்[ஆணுவென்பது] இனிமை- நன்மைக்கும்பெயர் [சரமென்பது] மணிவடம்பு - யுத்தம்-அம்பு-நாணற்புல்லுக்கும்பெயர் [நரந்தமென்பது] நாரத்தை- கஸ்தூரிக்கும்பெயர் [சுருங்கையென்பது] கோட்டையிற்கள்ளவழி-நுழைவாலுக்கும்பெயரொன்றவாறு. (௫)

ஆரமேபதக்கமுத்த மாத்திசந்தனமேமாலை ..............*
வாரநீர்க்கரையேயம்பு மலைச்சாரல்கிழமைபங்கா ........*
தாரமல்லிசைநாவெள்ளி மனைவியாழிசைகண்ணென்ப *
கோரஞ்சோழன்மாவெட்டில் கொடுமைபூமொட்டுவாசி. .*

(இ-ள்.) [ஆரமென்பது] பதக்கம்-முத்து- ஆத்திமரம்- சந்தனமரம்- பூமாலைக்கும்பெயர் [வாரமென்பது] நீர்க்கரை-அம்பு - மலைச்சாரல்- எழுகிழமை-பங்குக்கும்பெயர் (தாரமென்பது] வல்லிசை-நா-வெள்ளிமனைவி-வீணைநரம்பிலொன்று-கண்ணுக்கும்பெயர் [கோரமென்பது] சோழன் -குதிரை- வட்டில்-கொடுமை-பூவரும்பு-குதிரைக்கும்பெயர்-எ-று. (௬)

இராசியமறைவேயோனி இறப்பென்பமிகுதிபோக்காம்*
பராகமேயிரேணுவாகும் பரிமளமலர்த்தூளும்பேர் .. ...*
துரோணமேசிம்புள்காக்கை தும்பைவில்லொடுபதக்காம். .*
இராகமேகீதஞ்செம்மை யிச்சையேநிறமுமேற்கும்... ...*

(இ-ள்.) (இராசியென்பது] மறைவு-பெண்குறிக்கும்பெயர் [இறப்பென்பது] மிகுதி-போதலுக்கும்பெயர் [பராகமென்பது] இரேணு- பூந்துகளுக்கும்பெயர் [துரோணமென்பது] எண்காற்பட்சி - காக்கை- தும்பைச்செடி-வில-பதக்குக்கும்பெயர் [இராகமென்பது] இசைப்பாட்டு-சிவப்பு- ஆசை-நிறத்துக்கும்பெயர்-எ-று. (௭)

பரிபரிசமத்தல்வேகம் பாதுகாத்திடல்வருத்தம் ...... ...*
புரிவளைவிரும்பல்செய்தல் புரத்தொடுகயிறுகட்டாம் ... *

பரிதலேயறுத்தலன்பு பகர்ந்திடிலிரங்கலும்பேர் ... ...*
வரிசுணங்கெழுத்துப்பாட்டு வாரிதியிறையெநெல்லு ... *

(இ-ள்.) [பரியென்பது] குதிரை - சுமத்தல் - சீக்கிரம் - பாதுகாத்தல்-வருத்தத்துக்கும்பெயர் [புரியென்பது]சங்கு - விரும்புதல் - செய்தல்-நரகம்-கயிறு - கட்டுக்கும்பெயர் [பரிதலென்பது] அறுத்தல் - அன்பு - இரங்கலுக்கும்பெயர் [வரியென்பது] தேமல் - எழுத்து - இசைப்பாட்டு- கடல் - குடியிறை-நெல்லுக்கும்பெயர்-எ-று. (அ)

சரிசரவளேவழிப்பெர் சராவமேயசல்சலாகை ... ... ...*
கரியவன்சனியின்பேராங் கண்ணனிந்திரனுமாமே ... *
பரிகமேகிடங்குமேடை பகர்மதில்கணைய நாற்பேர்... ...*
கரில்குற்றங்காழ்த்தலும்பேர் காதைசொற்கதையுமாமே. *

(இ-ள்.) [சரியென்பது] கைவளை - வழிக்கும்பெயர் [சராவமென்பது] அசல் - சலாகைக்கும்பெயர் [கரியவனென்பது] சனி - திருமால்-தேவேந்திரனுக்கும்பெயர் [பரிகமென்பது] அகழி - மதிலுண்மேடை - மதில் - வளைதடிக்கும்பெயர் [கரிலென்பது] குற்றம் - உறைதலுக்கும்பெயர் [காதையென்பது] சொல்-கதைக்கும்பெயர்-எ-று. (க)

மூரியேறெருமையாற்றன் மூனறமீடுநெரியுமாமே ... ☆
வாரிநீர்க்கதவுவெள்ள மதில்கடல்வருவாய்வட்டை ... ...*
நாரிபன்னடைபண்ணே நறவுவின்னணிநாற்பேர்... ...*
பாரியோர்வள்ளல்கட்டில் பாரிகட்டேசுழுந்நீர் ... ... *

(இ-ள்.) [மூரியென்பது] எருது-எருமை-வலிமை-பழமை-பெருமை-நெரிவுக்கும்பெயர் [வாரியென்பது] நீர்-கதவு-வெள்ளம்-மதில்கடல்- பொழிவு-வழிக்கும்பெயர் [நாரியென்பது] பன்னடை - பெண்வாசனை - வின்னணிக்கும்பெயர் [பாரியென்பது] கடையெழு-வளளலிலொருவன்-கட்டில்-மனைவி-கள்-ஆடை-கடலுக்கும்பெயர்-எ-று. (உ)

அருகலேசுருங்கல்சார்தல் அமுதமேசுதைநீர்மோக்கம் ...*
பொருளேசொற்பொருள்பல்பண்டம் பொன்பண்புபிள்ளைவாய்மை, குருநிறமோர்மீநாய்தேயங் குரவன்பாரம்வியாழம்*
அருணமென்பதுமான்செம்மை யாடலுமிச்சைநாற்பேர் *

(இ-ள்.) [அருகலென்பது] குறைதல்- சார்தலுக்கும்பெயர் [அமுதமென்பது] அமிர்தம்-நீர்-மோட்சத்துக்கும்பெயர் [பொருளெனபது] சொற்பொருள் பலபண்டம்-பொன்-குணம்-மகன்-உண்மைக்கும்பெயர்[குருவென்பது]நிறம் ஓர்வியாதி-ஒர்தேயம்-ஆசான்-பாரம்-பிரகஸ்பதிக்கும்பெயர்[அருணமென்பது) மான்-சிவப்பு-ஆடு-எலுமிச்சைக்கும்பெயர்-எ று. (ங)

முருகுகள்ளிளமைநாற்ற முருகவேள்விழாவனப்பாம் ... *
மருமானேமருமகன்பேர் வழித்தோன்றற்பேருமாமே...*
இருசுபண்டியுளிரும்புஞ் செவ்வையென்றிருபேரொன்ப *
கருமையேபெருமையாகுங் கறுப்பொடுவலியுமாமே.....*

(இ-ள்.) [முருகென்பது] கள் - இளமை - வாசனை - முருகன்-திருவிழா-அழகுக்கும்பெயர் [மருமானென்பது] மருமகன்-மகனுக்கும்பெயர் [இருசென்பது] வண்டியுளிரும்பு-செவ்வைக்கும்பெயர்[கருமையென்பது]பெருமை-கறுப்பு-வலிமைக்கும்பெயர்-எ-று. (௰௨)

கிருத்திமந்தோலேபண்ணல் கெட்டபொய்விட்டபூதம் ...*
விருத்தியேதொழிலிலாபம் விரிபொருள்வளர்ச்சிக்கும்பேர்.
துருத்தியாற்றிடைக்குறைப்பேர் தோலுமாந் துட்டைக்கும்
பேர்,அரத்தமேயிரத்தஞ்செம்மையரக்கொடுற்பலங்கடம்பு

(இ-ள்.) [கிருத்திமமென்பது] தோல்-செய்தல்-பொய்- பூதகணத்துக்கும் பெயர் [விருத்தியென்பது] தொழில்-இலாபம் விரிபொருள் - வளர்தலுக்கும் பெயர் [துருத்தியென்பது] ஆற்றிடைக்குறை-தோல்வசவிக்கும்பெயர் [அரத்தமென்பது] உதிரம் - சிவப்பு - அரக்கு - செங்குவளை - கடப்பமரத்துக்கும் பெயரொன்றவாறு. (௰௩)

சீர்செல்வந்தாளவொற்றுச் சீர்த்திகாத்தண்டேபாரம்......*
தார்கொடிப்படைப்பூந்தண்டு தாமங்கிண்கிணியின்கோவை.
சூவொன்பநோயேயச்சமஞ்சாமையணங்குஞ்சொல்லும் ✲
கார்நீர்வெள்ளாடுமேகங் கருப்பிருண்மாரிக்காலம்... ...*

(இ-ள்.) [சீயொன்பது] செல்வம்- தாளவொற்றுமிகுபுகழ்- சாவடித்தண்டு-கனத்துக்கும்பெயர் [தாவொன்பது] படைமுன்னணி- மலர் - சேனை- பூமாலை-கிண்கிணிமாலைக்கும்பெயர் [சூவொன்பது) வியாதி]- அஞ்சுதல் - அஞ்சுதலின்மை-தெய்வப்பெண்ணுக்கும்பெயர் [காவொன்பது] நீர்-வெள்ளாடு- மேகம்-கருமை-இருள்-கார்காலத்துக்கும்பெயர்-எ-று. (௰௪)

ஆர்கூர்மையாத்திரேரி னைந்தருவாணிக்கும்பேர் ... ... ...*
பீவொன்பமுலைபிற்பாலும் பீர்க்கொடுபசலைக்கும்பேர் ...*
வாவொன்பநெடுமைகச்சு மன்னுநீர்நேர்மைநாற்பேர் ... *
நேர்சமமீதில்பாதி நெடிலுடன்பாடுநுட்பம்.......... ...*

(இ-ள்.) [ஆவொன்பது) கூர்மை-ஆத்திரம்-தேரினகத்திற்செறி- சதிருக்கும் பெயர்[பீவொன்பது) முலைப்பால்-பீர்க்கு- துன்பத்தால்வேறுபட்டநிறத்துக்கும் பெயர் [வாவொன்பது] நீவம்முலைக்காச்சு- நீர் - நேர்மைக்கும்பெயர் [நேவொன்பது] ஒப்பு-கொடுத்தல். பாதி-நீளம்-உடற்பாடு-நுட்பத்துக்கும்பெயர்-எ-று.(௰௫)

அருணன்சூரியன்றேர்ப்பாகனுதித்தன்புதன்மூப்பேரோ.. *
வருணமேகுலநீராகும் மகனெனப்சிறந்தோன்மைந்தன் *
தரணிபாரிரவிவெற்பாம் தையல்பெண்ணழகுமாகும் ... *
கரிணியேமுழையும்வெற்புங்களிற்றொருபிடியுங்காட்டும். *

(இ-ள்.) [அருணமென்பது] சூரியன்-தேர்ப்பாகன்-சூரியன்- புதனுக்கும் பெயர்[வருணமென்பது] குலம்-சலத்துக்கும்பெயர் [மகனென்பது] சிறப்பு

த்ரேன் - புத்திரனுக்கும்பெயர் [தரணியென்பது] பூமி-சூரியன் - மலைக்கும் பெயர் [தையலென்பது] பெண்-அழகுக்கும்பெயர் [கரணியென்பது] மலையி னுட்குகை-மலை-யானை-பெண்யானைக்கும்பெயர்-எ-று. (௰சு)

மாரியேவிளிவுகள்ளு வடுகிநோய்மேகமைம்பேர் ... ......*
ஓரியாண்மயிரோவள்ளல் முதுநரிமுசுவென்றோதும்......*
காரியோர்வள்ளலையன் கடுச்சனிவடுகன்காக்கை........ ....*
தூரியமிடபமாடை துந்துமியெழுதுங்கோலே... ... ... *

(இ-ள்.) (மாரியென்பது) சாவு-கள்-காடுகள்-வியாதி-மேகத்துக்கும்பெயர் (ஓரியென்பது) குடுமி - ஒருவள்ளல் - கிழநரி - ஆண்முசுவிற்கும்பெயர் (காரி யென்பது) கடையெழுவள்ளலிலொருவன்-ஐயனார்-விடம்-சனி - வயிரவன்-காக்கைக்கும்பெயர் (தூரியென்பது) எருது-வஸ்திரம்-முரசம் - எழுதுகோலு க்கும்பெயர்-எ-று. (௰எ)

பிரமமேவேதம்வேள்வி மந்திரம்பிரமன்மாலோ ... *
டிரவிதீமுனிவர்முத்தியீசனம்புலிபன்றென்றே ...*
அரசனேவியாழமன்னும் அம்பணந்தோணியாமை *
குரல்கதிர்சிறகுமாதர்கூந்தல்யாழ்நரம்புநாற்பேர் . *

(இ-ள்.) (பிரமமென்பது) வேதம் - யாகம் - மந்திரம் - பிரமதேவன்-திருமால்-சூரியன்-நெருப்பு-இருடிகள்-மோட்சம்-சிவன்-சந்திரனுக்கும்பெயர் (அரசனென்பது) பிரகஸ்பதி - இராசனுக்கும்பெயர் (அம்பணமென்பது) தோணி-ஆமைக்கும்பெயர் (குரலென்பது) பயிர்க்கதிர் - இறகு - பெண்மயிர்-யாழினோர்நரம்புக்கும்பெயர்-எ-று. (௰அ)

தோரைநல்விதற்பமூங்கி லரிசிகைவரைசொன்முப்பேர்..*
ஆரையேமதில்புற்பாயம் அகலுளேபரப்பூர்நாடே ... ...*
ஓரையேமாதர்கூடி விளையாடலுடனிராசி..................*
தாரைகண்மழைநேரோடலுரைகைவழியேகூர்மை.........*

(இ-ள்.) (தோரையென்பது) ஓர்வகைநெல்-மூங்கிலரிசி- கையிறைக்கும் பெயர் (ஆரையென்பது)மதில்-புற்பாய்க்கும்பெயர்(அகலுலென்பது) அகலம்-ஊர்-நாட்டுக்கும்பெயர் (ஓரையென்பது) மகளிர்விளையாட்டு-இராசிப்பொது விற்கும்பெயர் (தாரையென்பது) கண்-மழை-நேரோடல்-நட்சத்திரம் - வழி-கூர்மைக்கும்பெயர்-எ-று. (௰கூ)

ஊர்திதேர்விமானம்பண்டி லும்பலேசிவிகைபாய்மா......*
ஆர்வமேநரகமன்பாம் அகலமார்பொடுவிசாலம்.........*
ஆர்வலர்கொண்கரன்பர் அணுவென்பதுயிர்நுண்மைப்பேர்,
ஆர்தலேநிறைதலுண்டல் அகளந்தான்மிடநற்றாழி ... ...*

(இ-ள்.) (ஊர்தியென்பது) தேர் - விமானம் - பண்டி - யானை-தண்டிகை-குதிரைக்கும்பெயர் (ஆர்வமென்பது) நரகம் அன்புக்கும்பெயர் (அகலமென்

பது) மார்புவிரிவுக்கும்பெயர் (ஆர்வலனென்பது) தலைவர் - அன்புடையோர்க்கும்பெயர் (அணுவென்பது) சீவன் - அட்டபத்துக்கும்பெயர் (ஆர்தலென்பது) நிறைதல்-புசித்தலுக்கும்பெயர்(அகளமென்பது)மிடா-சாடிக்கும்பெயர்-எ-று.

பாரமேகவசந்தோணிபல்லணம்பொறையினோடு......*
நீருறுகரைகனம்பார நிரைநிகழ்த்துமென்பேர்....*
சூரனேயிரவிதீநாய் துகளென்பகுற்றந்தூளாம்......*
சாரங்கமானும்வண்டுஞ் சாதகப்புள்ளுமாமே ... ...*

(இ-ள்.) (பாரமென்பது) கவசம்-தோணி-குதிரைச்சேணம்-பொறுமை-நீர்க்கரை-கனம்-ஓர்நிறை-பூமிக்கும்பெயர்(சூரனென்பது) சூரியன்-நெருப்பு-நாய்க்கும்பெயர்(துகளென்பது) குற்றம்-புழுதிக்கும்பெயர் (சாரங்கமென்பது) மான்-வண்டு-சாதகப்பட்சிக்கும்பெயர்-எ-று. (உக)

ஆரல்கார்த்திகைநாள்செவ்வாயரணுறப்பொருமீனூற்டேர் *
சாரலேமருதயாழினிசையொடுசைலப்பக்கம்........... ...*
மூரலேநகைபல்சோறும் மூரம்பென்பமேடுபாறை... ...*
கூரல்புட்சிறகுவாதரோதியமிருபேர்கூறும்..............*

(இ-ள்.) (ஆரலென்பது) கார்த்திகைநட்சத்திரம் - அங்காரகன் - மதில்-ஆரான்மீனுக்கும்பெயர் (சாரலென்பது) மருதயாழினோரிசை - மலைப்பக்கத்துக்கும்பெயர் (மூரலென்பது) நகைப்பு-பல்-சோற்றுக்கும்பெயர்(முரம்பென்பது) மேடு - பாறைக்கும்பெயர் (கூரலென்பது) பறவையினிறகு - பெண்மயிருக்கும்பெயர்-எ-று. (உஉ)

சாரிகைபூவைசுங்கஞ் சுழல்காற்றுத்தானுமாகும்.........*
காரிகையழகுபெண்ணே கலித்துறையோர்நூற்கும்பேர் *
வாரணங்கவசங்கோழி கடைசங்குவாரிகைம்மா...........*
பூருவமுதுமைமுன்பு கிழக்கென்றும்புகலலாமே........*

(இ-ள்.) (சாரிகையென்பது) நாகணவாய்ப்புள் - சுங்கம் - சுழல்காற்றுக்கும்பெயர் (காரிகையென்பது) அழகு-பெண் - கட்டளைக்கலித்துறை-ஓர்யாப்பிலக்கணநூலுக்கும்பெயர் (வாரணமென்பது) கவசம்-கோழி-தடுத்தல்-சங்கு-கடல் - யானைக்கும்பெயர் (பூருவமென்பது) பழமை - முன்பு - கீழ்த்திசைக்கும்பெயரொன்றவாறு. (உஙு)

ஏரழகுழுபெற்றப்பேர் இராசிதானேராசிகூட்டம்...*
பாருலகந்தேர்ப்பாரம் பயல்பள்ளம்பாதிசிற்றாள்...*
போரமர்சதயத்தோடு புகலுநெல்முதலான்சும்மை *
பீருவேயச்சமூற்றேன் பெயரொடுபுருவமாமே ... *

(இ-ள்.) (ஏரென்பது) அழகு-உழுமாட்டிற்கும்பெயர் (இராசியென்பது) இராசிப்பொது கூட்டத்துக்கும்பெயர் (பாரென்பது) பூமி- தேரின்பரப்புக்கும்பெயர் (பயலென்பது)பள்ளம்-பாதி-சிறுபையனுக்கும்பெயர்(போரென்பது)

யுத்தம்-சதயநட்சத்திரம்-ரென்முதலியசுவைக்கும்பெயர்(பீருவென்பது) யமு
ற்றோன்-புருவத்துக்கும்பெயர்-எ-று. (உச)

அருப்புமாரிடைநோய்காடா மரணுட னாருமப்பேர்......*
மரக்காலாயிலியஞ்சோதி மாயவனுடன்முப்பேர்... ... ...*
நிரப்பென்பமுடிநிறைப்பேர் நிறையழியாமைநீர்ச்சால்...*
திருக்கமேயாண்கத்தூரி குங்குமமரமுஞ்சொல்லும்......*

(இ-ள்) (இருப்பமென்பது) வழுக்குநிலம்-வியாதி-காடு-கோட்டை மரு
தநிலத்துக்கும்பெயர் (மரக்காலென்பது) ஆயிலியநட்சத்திரம்-சோதிநட்சத்தி
ரம்-திருமால்-கூத்துக்கும்பெயர் (நிரப்பென்பது) தரித்திரம் - நிரப்புதலுக்கு
ம்பெயர் (நிறையென்பது) அழிவின்மை நீர்ச்சாலுக்கும்பெயர் (துருக்கமென்
பது) மலைமேற்கோட்டை-கத்தூரிமரம்-குங்குமமரத்துக்கும்பெயர்-எ-று.(உரு)

குருதியேசிவப்பிரத்தங் குசனெனக்கூறுமுப்பேர்... ... ...*
பருதியேயூர்கோள்வட்டம் டரர்க்கரனேமிநாற்பேர்......*
சுருதியேயாலிவேதப்பேர் சுரமருநெறிநான்மார்க்கம்...*
இரதிபித்தளைபெண்யானை மதன்றேவியிச்சைநாற்பேர்...*

(இ-ள்.) (குருதியென்பது) சிவப்பு-உதிரம்-செவ்வாய்க்கும்பெயர் (பருதி
யென்பது) சூரியசந்திரனைச்சூழத்தோன்றும்வட்டம்-வட்டவடிவு - சூரியன்-
சக்கராயுதத்துக்கும்பெயர் (சுருதியென்பது) சத்தம்-வேதத்திற்கும்பெயர் (சுர
மென்பது) அரியவழி-காடு-வழிக்கும்பெயர் (இரதியென்பது)பித்தளை-பெண்
யானை-இரதிதேவி-ஆசைக்கும்பெயர்-எ-று. (உசு)

புரைகுற்றமுவமையில்லம் புரையுயர்ச்சியுமைம்பேரோ ...*
விரைமணஞ்சாந்துதூபம் வீரைதான்றுயரம்வாரி.........*
நரைவெள்ளையிவுளிவெண்மை நந்திநற்சவரிநாரை........*
சுரைகள்ளான்முலைதுலைப்பேர் துளும்பலேதிமிறறுள்ளல்*

(இ-ள்.) (புரையென்பது) குற்றம்-ஒப்புமனை-உட்டுளை- உயரத்துக்கும்பெ
யர் [வீரையென்பது] வாசனை - கலவைச்சாந்து-நறும்புகைக்கும்பெயர் [மீரை
யென்பது] துன்பம் - கடலிற்கும்பெயர் [நரையென்பது] வெள்ளைக்குதிரை-
வெண்மை-இடபம்-சாமரம்-நாரைப்பட்சிக்கும்பெயர் [சுரையென்பது] கள்-
பசுவின்முலை-உட்டுளைக்கும்பெயர் [துளும்பலென்பது] திமிறல்-துள்ளலுக்கு
ம்பெயரொன்றவாறு. [உஎ]

மருளென்பகுறிஞ்சியாழின் நிறத்தொடுமயக்கமுப்பேர்...*
இருளொருநரகமையவிருளொடுகருமமென்ப...............*
பொருநர்போத்தலைவர்கூத்தர் புரலவர்பாணர்வீரர்... ...*
இருபிறப்பெயிறுமார்பு மிந்துவும்புள்ளுமாம்மே.........*

(இ-ள்.) [மருளென்பது] குறிஞ்சியாழ்த்திறம் - மயக்கத்துக்கும்பெயர்
[இருளென்பது] ஒருவகைநரகம் - மயக்கம் - இருட்டு - கறுப்புக்கும்பெயர்

[பொருநவொன்பது]படைத்தலைவர்-நாடகர்-அரசர்-புகழ்ந்துபாடுவோர்-படைவீரருக்கும்பெயர் [இருபிறப்பென்பது] பல்-பிராமணர் - சந்திரன் - பறவைக்கும்பெயரொன்றவாறு. (௨௮)

மருதமேயொருமரஞ்செய் மருதநன்னிலப்பாடற்பேர்...*
எருவையேகொறுக்கைகோணாகழுகுசெம்பிரத்தமென்ப. *
தருமராசன்றான்புத்தன் சண்டனேயருகன்றானும்........*
கரியென்பதிருந்தைசான்று கனாயடிசேகுநாற்பேர்......*

(இ-ள்.) [மருதமென்பது] ஓர்மரம்-வயல்-மருதநிலத்துக்கும்பெயர் [எருவையென்பது] கொறுக்கை-கோனை-கழுகு-செம்பு-இரதத்துக்கும்பெயர்[தருமராசனென்பது] புத்தன்-இயமன்-அருகனுக்கும்பெயர் [கரியென்பது] கரி-காட்சி-மரவயிரத்துக்கும்பெயர்-எ-று. (௨௯)

கருவிபல்லியத்துணைக்கா ரணங்கள்யான்கவசமீட்டம் ...*
பொருபடைக்கலந்தொடர்ச்சிபுயல்பலவினைப்பேர்கூட்டம்
பரியின்பல்லணமேயாடைகசைபதின்மூட்பேர்பன்னும். .*
சுரிகையேகவசம்வாளம்துவைபிண்ணாக்கிறைச்சியோசை . *

(இ-ள்.) [கருவியென்பது] வாச்சியம்-உபகரணங்கள்-வீணை-கவசம்- ஈட்டம்-ஆயுதம்-தொடர்பு-மேகம்-பலவினைப்பேர் - கூட்டம் - குதிரைச்சேணம்-வஸ்திரம்-குதிரைச்சம்மட்டிக்கும்பெயர் [சுரிகையென்பது] கவசம்-உடைவாளுக்கும்பெயர்[துவையென்பது]பிண்ணாக்கு-தசை-சத்தத்திற்கும்பெயர்-எ-று.

குருகுபுள்ளிளமைநாரைகொல்லுலைமூக்குக்கோழி ......*
சரிவெள்ளைமூலநாள்வாசத்தியொன்பான்பேர்சாற்றும்...*
முரசேயுத்திரட்டாதிப்பேர் பறையென்றுமொழியலாமே *
தரளமேயருட்சிமுத்தாம் சார்பென்பதிடமும்பற்றும்...*

(இ-ள்.) [குருவென்பது) பறவைப்பொது-இளமை-நாரைப்பட்சி- கொல்லனுலைமூக்கு-கோழி-கைவளை-வெண்மை-மூலநட்சத்திரம்- குருக்கத்திக்கொடிக்கும்பெயர் [முரசென்பது) உத்திரட்டாதிநட்சத்திரம்- வாச்சியப்பொதுவிற்கும்பெயர் [தரளமென்பது) உருண்டவடிவு-முத்துக்கும்பெயர் [சார்பென்பது] இடம்-பற்றுதலுக்கும்பெயர்-எ-று. (௩௰)

முரண்வலிபகையாமென்ப மொய்ம்புகோள்வலியுமாகும் *
உரையென்பகிளவிதேய்வாம்உவா த்தந்தியிளையோன்பௌவம்
ஒருரவொலிவிரையுமாகும்நிதியிருநிதிபொன்னென்ப ...*
உருநிறம்வடிவட்டைப்பேர்ஓதனஞ்சோறேயுண்டி.........*

(இ-ள்.) [முரணென்பது] வலிமை - பகைக்கும்பெயர் [மொய்ப்பென்பது) பயம்-வடிமைக்கும்பெயர் [உரையென்பது) சொல்-தேய்தலுக்கும்பெயர் [உவரவென்பது) யானை - இளையோன்- பூரணைக்கும்பெயர் [ஒருரவென்பது) சத்தம்-சீக்கிரத்துக்கும்பெயர் [நிதியென்பது) இருவகைநிதி - பொன்னுக்கும்பெயர் [உருவென்பது] நிறம்-வடிவு - அட்டைக்கும்பெயர் [ஓதனமென்பது] சோறு-உணவுக்கும்பெயர்-எ-று. (௩௧)

அரிகிளிபிணரிமாறே னாம்மையிந்திரன்கால்காந்தி... ...*
பரிபுகர்பன்றிசிங்கம் பகைபகைவாயல்சோலை ... ... ...*
வருமதிசேருதேளா வானரமியமன்மூங்கில்... ...........*
எரிபுளாதிலம்பொன்பாந்த ளிரவிகண்வரிதார்பச்சை ... *
அரிசிநெற்கதிர்கள்கூர்மை யரிபடைக்கவமேயீர்வாள் ... *
ஆரிதலேசயனநேமி யடல்விசிபலாயரித்தல் ............ *
பரிபுரமதனுட்பெய்த பரலோடிவ்வாறேனைழந்தாம்......*
அரிதமேபசுமைதிக்காம் ஆர்ப்பொலிசிரித்தற்பேரோ ... *

(இவற்றின்பொருள்.) (அரியென்பது] கிளி-கடல்-திருமால்-இரதம்-அச்சவடிவு-தேவேந்திரன்-காற்று-ஒளி-குதிரை-குற்றம்-பன்றி-சிங்கம்-பதை-புகைபர்யல்-சோலை-வரி-சந்திரன்-மரவயிரம் தவளை-குரங்கு-இயமன்-மூங்கில்-நெருப்பு-உட்டுளை-நிறம்-பொன்-பாம்பு-சூரியன்-கண்வரி-பூமாலை-பச்சரிசி-நெற்கதிர்-கள்-கூர்மை-மண்டு-ஆயுதம்-இரம்பம்-அரிதல்-சயனம்-சக்கராயுதம்-வலிமை-விசிப்பலகைவாச்சியம்-அரித்தல்-சிலம்பிலுட்பருக்கைக்கல்லுக்கும்பெயர் [அரிதமென்பதி] பசியநிறம்-திகைக்கும்பெயர் (ஆர்ப்பென்பது] சத்தம்-நகைப்புக்கும்பெயர்-எ-று. (௬௪)

அருவியேமலைச்சார்வாது மரிதினைத்தாளுமாகும்........*
அரலையோகினிலித்தாழி மரங்கழலையுமாமென்ப...... ...*
கரடமேமதம்பாய்கின்ற கவட்டொடுகாக்கையாகும் ......*
கரியருன்பெண்மயிர்க்கே சொல்லுமாண்மயிர்க்கும்பேராம்*

(இ-ள்.) [அருவியென்பது) மலைச்சாரலாறு-தினைத்தாளுக்கும்பெயர் [அரலையென்பது)பாலைக்கிழத்தி-வித்தை-கடல்-மரம்-கழலைக்கட்டிக்கும்பெயர்[கரடமென்பது) மதம்பாய்கவுள்- காக்கைக்கும்பெயர் [கரியலென்பது] பெண்மயிர்-ஆண்மயிருக்கும்பெயர்-எ-ற. (௬௫)

திருவென்பகமலைசெல்வஞ் சிறப்பொடுமுப்பேர்செப்பும்*
பரிவென்பதுன்பமின்பம் பகருமன்பிறக்குமப்பேர் ... *
கரையேநீர்க்கரைசேர்வாகும் கைத்துநீணிதிவெறுப்பாம். *
சுரகுருமகவான்றேவ மந்திரியிருபேர்சொல்லும் ... ... *

(இ-ள்:) [திருவென்பது) திருமகள்-செல்வம்- சிறப்புக்கும்பெயர் (பரிவென்பது] துன்பம்-சுகம்-அன்பிற்கும்பெயர் [கரையென்பது] நீர்க்கரை-சேர்வுக்கும்பெயர் (கைத்தென்பது] பொன்-வெறுப்புக்கும்பெயர் [சிரகுருவென்பது) இந்திரன்-பிரகற்பதிக்கும்பெயர்-எ-று. (௬௬)

அரற்றலேயழுதலோசை ஐதென்பவிளாவுநொய்தாம் ...*
இரத்தஞ்செந்நீர்சிவப்பாம் இலாங்கலியலந்தென்காந்தள் :
அரக்கென்பமெழுகுகள்ளின் விதற்பமுஞ்சிவப்புமாகும் *
அருச்சுனமருதுவெண்ணெய் அறிக்கைதானறிவுபற்றும் *

(இ-ள்.) (அரற்றலென்பது) அழுதல்- சத்தத்திற்கும்பெயர் (ஐதென்பது] சீக்கிரம்-நுண்மைக்கும்பெயர் [இரத்தமென்பது] உதிரம்-சிவப்புக்கும்பெயர் [இலாங்கலியென்பது) கலப்பை - தென்னமரம் - செங்காந்தளுக்கும்பெயர் (அரக்கென்பது) மெழுகு- கள்ளின்விகற்பம் - சிவப்புக்கும்பெயர் [அருச்சுனமென்பது] மருதமரம்-வெளுப்புக்கும்பெயர் [அறிக்கையென்பது) அறிவு-பற்றுக்கும்பெயர்-எ-று. (௩எ)

அரந்தையென்பதுகுறிஞ்சி யாழிசைதுன்பமாகும்......*
அருந்தலேயருமையுண்டல்அளித்தருள்கொடுத்தல்காத்தல்
அரங்கமாற்றிடைக்குறிப்பே ராடுடஞ்சவையுமப்பேர் ...*
அரங்குபோரிடம்வட்டாடு மிடஞ்சவையவைவிகற்பாம்...*

(இ-ள்.) [அரந்தையென்பது) குறிஞ்சியாழிசை- வருத்தத்துக்கும்பெயர் [அருந்தலென்பது] அருமை-உண்டலுக்கும்பெயர்) (அளித்தலென்பது] கொடுத்தல்-காத்தலுக்கும்பெயர் (அரங்கமென்பது) ஆற்றிடைக்குறை-நாடகசாலை சபைக்கும்பெயர் (அரங்கென்பது) போர்க்களம் - சூதாடுதற்குவகுத்தவறை-சபை-மனைவிகற்பத்துக்கும்பெயர்-எ-று. (௩அ)

முருந்தென்பமயிலின்றோகை முதன் முள்ளுத்தவளமாகும்.
விருந்தமேகிளையின்கூட்டம்விலங்கின்கூட்டமுமென்றாகும்
குரங்குவானரம்விலங்கின் பொதுமிருகோணலாகும்......*
எருந்துரல்கிளிஞ்சிலென்ப இடஞ்செல்வம்விசாலம்வாமம்*

(இ-ள்.) (முருந்தலென்பது] மயிலிறகினடியிற்குருத்து- வெண்மைக்கும்பெயர் (விருந்தென்பது] சுற்றத்தின்கூட்டம்- மிருகத்தின்கூட்டத்திற்கும்பெயர் (குரங்கென்பது) குரங்கு-மிருகத்தில்பொது-வளைவிற்கும்பெயர் (எருந்தென்பது) உரல்-கிளிஞ்சலுக்கும்பெயர் [இடமென்பது] ஐச்சுவரியம் - அகலம்-இடப்பக்கத்துக்கும்பெயர் எ-று. (௩௯)

ஆரியர்மிலேச்சர்நல்லோர் ஆனென்பதிடைச்சொலாவாம் *
ஆரியேகதவுசோழ னழகொடுமேல்மைக்கும்பேர் ...... *
சாருகர்தந்துவாயர் கடுகொலையாளர்வண்ணார்... ... ... *
தாருகாரியன்பகாளி சண்முகன்றானுமாமே............*

(இ-ள்.) [ஆரியரென்பது) மிலேச்சர்- நல்லோருக்கும்பெயர் [ஆனென்பது) இடைச்சொல்-பசுவுக்கும்பெயர் (ஆரியென்பது] கதவு- சோழன்- அழகு-மேன்மைக்கும்பெயர் சாருகரென்பது) நெய்வோர்கொலையாளர்- வண்ணருக்கும்பெயர் [தாருகாரியென்பது) காளி-முருகக்கடவுளுக்கும்பெயர்-எ-று. (௪0)

சார்கூடலொருதாரப்பேர் சான்றோன்மான்றலைநாள்பானு.
வேறொன்பமரம்வேர்வேர்வாம் விழைச்சுநல்லிளமைபோகம்.*
பாராவர்ரந்தான்வாரி கடற்கனாயிருபேர்பன்னும்.........*
சாரணரென்பவொற்றர் சமண்முனிவர்க்கும்பேராம்......*

(இ-ள்.) (சாரொன்பது) கூடுதல் - ஓர்மரத்துக்கும்பெயர் (சான்றேனென்பது] மிருகசீரிடநட்சத்திரம் - சூரியனுக்கும்பெயர் (வேரொன்பது) மரவேர்-வேர்வைக்கும்பெயர் (விழைச்சென்பது) கட்டிளமை - வுணர்ச்சிக்கும்பெயர் பாராவாரமென்பது) கடல்-கடற்கரைக்கும்பெயர் (சாரணரொன்பது) வேவுகாரர்-சமணவிருடிகட்கும்பெயர்-எ-று. (சச)

அராகஞ்செந்நிறமேபாலை யாழ்முடுகியற்பாட்டாசை ......*
கரேணுவேபிடியானைக்குங் கடுங்கொலைய ணைக்குப்பேர் . *
கிராணமேகிராணமூக்காங் கிளர்சிறுவட்டிலும்பேர்...... *
கீரமேமிடாவகத்தி கரியின்பல்லடிமூளைப்பேர் ........*

(இ-ள்.) [அராகமென்பது) சிவந்தநிறம்-பாலையாழ் -முடுகியல்- இசைப்பாட்டு-ஆசைக்கும்பெயர் (கரேணுவென்பது) கிரகணம்-மூக்கு-சிறுவட்டிலுக்கும்பெயர் (கீரமென்பது) மிடா-அகத்திமரம்-யானைப்பல்லடி- மூளைக்கும்பெயரொன்றவாறு. (சரு)

ரகரவெதுகை-முற்றிற்று.

# லகரவெதுகை.

புலவர்பாடுநரோகூத்தர் புதனும்பர்கவிகண்ணாளர். ........*
வலவனேவெற்றியாளன் மருவந்தேர்ப்பாகன்மாயோன் ...*
அலகுநெற்கதிரோயாதி பலகறைநுளம்பெண்ணேதி ......*
அலரிகண்வரியருக்க னழகொருபரம்பூவாமே............*

(இ-ள்.) (புலவரொன்பது] பாடுவோர்-கூத்தர்- புதன்-தேவர்-கவிஞன்-கம்மாளருக்கும்பெயர் (வலவனென்பது) வெற்றியாளன்-தேர்ப்பாகன்-திருமாலுக்கும்பெயர் (அலகென்பது) நெற்கதிர்முதலியபலகறை- நிலப்பூச்சி- இலக்கம்-ஆயுதத்திற்கும்பெயர் (அலரியென்பது] கண்வரிசூரியன்-அழகு- ஓர்மரம்-பூப்பொதுவிற்கும்பெயர்-எ-று. (க)

ஆலமேவடுவிருக்க மடுநஞ்சோடலர்பூநீராம் ............*
மூலம்வேர்முதலேயது முதிர்வுருகிழங்கோர்நாளாம் ... *
சீலமேகுணந்தண்ணிடித்த நிகழ்சரித்திரமுப்பேரோ......*
சாலமேவலைசாலேக மராமரஞ்சவைமதிற்பேர் ............*

(இ-ள்) (ஆலமென்பது) ஆலமரம்-விடம்-மலர்ந்தபூ-நீருக்கும்பெயர் (மூலமென்பது) வேர்-முதல்-காரணம்-கிழங்கு- ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர் (சீலமென்பது) குணம்-தண்டித்தல்-சரித்திரத்துக்கும்பெயர் (சாலமென்பது)வலைபலகணி-ஆச்சாமரம்-கூட்டம்-மதிலுக்கும்பெயர்-எ-று. (உ)

காலம்வைகறைகாலப்பேர் கலமலம்யாழ்பூணுவாய் ... ... *
சாலகங்காலதர்ப்பேர் தானேபூமொட்டுமாகும்... .....*

தாலமுண்கலமேநாவே தராதலம்பனையேநாற்பேர் ... ...*
ஆலலாடுதலொலிப்போர் அநுவைசித்திரைநாளாடை ...*

(இ-ள்.) (காலமென்பது) விடியற்காலம்-பொழுதிர்கும்பெயர் (கலமென்பது) கலப்பை-ஆபரணம்-மரக்கலத்திற்கும்பெயர் (சாலகமென்பது)பலகணி பூவருக்கும்பெயர் (தாலமென்பது) உண்கலம்-நா-பூமி-பனமரத்திற்கும்பெயர் (ஆலலென்பது) ஆடுதல்- சத்தத்திற்கும்பெயர் (அநுவையென்பது] சித்திரைநட்சத்திரத்திற்கும்பெயர்-எ-று. (௩)

இலம்பகமத்தியாய நுதற்சூட்டென்றிருபேராமே ... ...*
இலஞ்சிமாவாவிகொப்பூழெயில்குணமகிழேயேரி ... ...*
பலங்கனிபயன்காய்சேனை பலங்கிழங்கறுபேராகும் ......*
அலங்கலென்பதுபூமாலை யசைவொடுதளிரிலங்கல் ... ...*

(இ-ள்.) (இலம்பகமென்பது) அத்தியாயம்-நுதலணி-பூமாலைக்கும்பெயர் (இலஞ்சியென்பது) மாமரம்-குளம்-உந்தி-மதில்-குணம்-மகிழமரம்-ஏரிக்கும்பெயர் (பலமென்பது) பழம் பயன்-காய்-சேனை-வலிமை -கிழங்கிற்கும்பெயர் (அலங்கலென்பது) பூமாலை-அசைதல்-தளிர்-ஒளிசெய்தலுக்கும்பெயர்எ-று(ச)

ஒலியென்பதிடியேகாற்றே யோசையென்றுகுமப்பேர்...*
ஒலியலேயாறுந்தோலு முடித்தவாடையும்பைந்தாரும் ...*
கலுழியேகான்யாறென்ப கலங்கியநீருமாமே...... ......*
கலைமதிப்பங்குநூசு கல்விநூலிரலைகாஞ்சி ............ *

(இ-ள்.) (ஒளியென்பது) இடி-காற்று-சத்தத்திற்கும்பெயர் (ஒலியலென்பது] நதி-தோல்-வஸ்திரம்-பூமாலைக்கும்பெயர் (கலுழியென்பது) காட்டாறு-கலங்கனீருக்கும்பெயர் (கலையென்பது) மதியின்பங்கு-சீலை- வித்தை-நூல்-ஆண்மான்-மேகலைக்கும்பெயர்-எ-று. (௫)

பீலியேயாலவட்டம் பெருவரைகலாபிதோகை...........*
பாலிகையுதடுவட்டம் பட்டவாண்முட்டியும்பேர் ...... ..*
வேலியூர்மதில்காவற்பேர் மெத்தைமெல்லணையேசட்டை -*
தோலியம்வனப்புவார்த்தை துருத்திதோற்பலகையம்பேர்.

(இ-ள்.) (பீலியென்பது) ஆலவட்டம் - மலை-மயில்- மயிற்றோகைக்கும்பெயர் (பாலிகையென்பது] உதடு-வட்டவடிவு-படைவாளின்முட்டிக்கும்பெயர் (வேலியென்பது) ஊர்-மதில் - காவலுக்கும்பெயர் (மெத்தையென்பது] அமளி-சட்டைக்கும்பெயர் (தோலென்பது) யானை- எண்வகைவனப்பிலொன்று-சொல்- ஊதுந்துருத்தி-தோலாற்செய்தகேடகத்துக்கும்பெயர்-எ-று. (௬)

பாலையோர்மரநிலம்மன் னிலத்தினிற்பாடலும்பேர் ... ...*
வேலையேகடலதற்கு மேவியகரையோர்காலம்... ... *
மாலையேயிரவோடந்தி மாலிகையொழுங்குநாற்பேர்......*
சாலையேகுதிரைப்பந்தி யறப்புறந்தானுமாமே,............*

(இ-ள்) [பாலையென்பது] ஓர்மரம்- ஓர்நிலம்- அந்நிலப்பாலுக்கும்பெயர் [வேலையென்பது] கடல் -கடற்கரை - நிகழ்காலத்திற்கும்பெயர் [மாலையென்பது] இராத்திரி- அந்திப்பொழுது- மாலை - ஒழுங்குக்கும்பெயர் [சாலையென்பது] குதிரைப்பந்தி-அறத்தின்சாலைக்கும்பெயர்-எ-று. (எ)

அல்லிவெள்ளாம்பல்காயா வகவிதழாகுமுப்பேர்.........*
அல்லிராவிருளேயென்ப ஆகமார்பு—டலுமாமே...........*
சில்லியேவட்டங்கீரை தேருருள்சிள்வீடென்ப ..........*
வல்லியாய்ப்பாடிவள்ளி வறைகொடிதளமாமே .........*

(இ-ள்.) [அல்லியென்பது) வெள்ளாம்பல் - காயாமரம்—உள்ளிதழுக்கும் பெயர் [அல்லென்பது) இரவு-இருளுக்கும்பெயர் [ஆகமென்பது) மார்பு-உடம்புக்கும்பெயர் [சில்லியென்பது] வட்டம்- சிறுகீரை- தேருருள் சிள்வண்டுக்கும்பெயர் [வல்லியென்பது) இடைச்சேரி-படர்கொடி-அளவு-கால்விலங்குக்கும்பெயர்-எ-று. (அ)

இல்லில்லாளில்லையென்ற விராகிசாவிடம்வீடாறே ... ...*
மல்வளம்வலியினோடு மாயவனுடன்முப்பேர் ... ... *
சில்லையென்பதுபிரண்டை சிள்வீடுதூர்த்தைக்கும்பேர்...*
ஒல்லையேவிரவுதொல்லை கடுப்புடன்சிறுபோதாமே... ...*

(இ-ள்.) [இல்லென்பது] மனைவி-இல்லையெனல்- இராசி-சாவு-இடம்-வீட்டிற்கும்பெயர் [மல்லென்பது) வளமை-வலிமை- திருமால்- கூத்திற்கும்பெயர் [சில்லையென்பது) பிரண்டை-சிள்வண்டு- தூர்த்தைக்கும்பெயர் [ஒல்லையென்பது) காலவிரைவு-பழமை-வேகம்-சிறுபொழுதுக்கும்பெயர்-எ-று- (கூ)

வில்லென்பமூலநாளாம் வெஞ்சிலையொளியுமப்பேர்......*
வல்விலிவிரைவுசூதாம் மலர்தலேயெதிர்தலேன்றல்... ...*
புல்புவிபுணர்ச்சிபுன்மை புதல்பனையனுடநாளாம்.........*
சொல்லென்பதசைச்சொலையங் கொலையேவல்வருத்தநாற்பேர்.

(இ-ள்·) [வில்லென்பது) மூலநட்சத்திரம்-வில்- பிரகாசத்திற்கும்பெயர் [வல்லென்பது] வலிமை - சீக்கிரம் - சூதாடுகருவிக்கும்பெயர் [மலர்தலென்பது] எதிர்தல்-தோன்றுதலுக்கும்பெயர் [புல்லென்பது) புவி-கல்வி - அற்பம்-புல்- பனைமரம் - அனுடநட்சத்திரத்துக்கும்பெயர் [கொல்லென்பது) அசைச்சொல்-அனுமானம்-கொல்லென்னேவல்-துன்பத்திற்கும்பெயர்-எ-று. (௰)

மால்புதன்பெருமைமேகம் மாயவன்மயக்கங்காற்றே ... *
ஆலோடவிரண்டுசொல்லு மாமென்பதல்லவும்பேர் .....*
வால்வெண்மைமிகுதிதூதாம் வசந்தனேதென்றல்காமன் *
சால்புமாட்சிமைசான்றாண்மை சாற்றியவிருபேர்தானே..*

(இ-ள்.) [மாலென்பது) புதன்-பெருமை-மேகம்-திருமால் -மயக்கம்-காற்றுக்கும்பெயர் (ஆலென்பது) அல்லென்பதும்-ஆமென்பதற்கும்-அல்லவென்

பதற்கும்பெயர் (வாலெலன்பது] வெண்மை-மிகுதி- சுத்தத்திற்கும்பெயர் (வசந் தனென்பது] தென்றல்-மன்மதனுக்கும்பெயர் (சால்பென்பது) மாண்புடமை கால்புடைமைக்கும்பெயர்-எ-று. (௰க)

வலம்புரிசங்குநந்தியா வர்த்தமோர்மரமுப்பேரே... ... *
புலம்பொலிதனிமையசசம்பொய்யென்பபொக்கம்போந்தாம்
சிலம்பொலிஞெகிழிதன்றும்செருந்திடஞ்சரம்வாட்கோரை.*
விலங்குகாற்றளேகுறுக்கு மிருகத்தின்பொதுவுமாமே ... *

(இ-ள்.) (வலம்புரியென்பது) சங்கு- நந்தியாவட்டம்- ஓர்மரத்திற்கும்பெயர் (புலம்பென்பது) சத்தம்-தனிமை- பயத்திற்கும்பெயர் (பொய்யென்பது) அபத்தம்- மரப்பொந்துக்கும்பெயர் (சிலம்பென்பது] சத்தம்- சிலம்பு- மலைக்கும்பெயர் (செருந்தியென்பது] செருந்திமரம்-வாட்கோரைக்கும்பெயர்[விலங்கென்பது)கால்விலங்கு-குறுக்கு-மிருகத்தின்பொதுவிற்கும்பெயர் -எ-று(௰௨)

உலகமேதிசைவிண்பூமி யுயர்குணஞ்சனமுயர்ந்தோர் ...*
அலவனேஞெண்டுபூனை யப்புலிகடகராசி ... ... ..*
இலயமேகூத்துங்கூத்தின் விகற்பமுமிருபேரொன்ப......*
வலவைவஞ்சப்பெண்வல்லோன் வருடைதான்கிம்புளாடாம்

(இ-ள்.) [உலகமென்பது) திக்கு-ஆகாயம்-பூமி-குணம்-சனம்-உயர்ந்தோருக்கும்பெயர் [அலவனென்பது) நண்டு-பூனை-சந்திரன்- கடகவிராசிக்கும்பெயர் [இலயமென்பது) கூத்து-கூத்தில்வேறுபாட்டிற்கும்பெயர் [வலவையென்பது] காளி-வவஞ்பெண்- வல்லவனுக்கும்பெயர் [வருடையென்பது] எண்காற்புள்-ஆட்டுக்கும்பெயர்-எ-று. (௰௩)

கலாபமேமணிவடம்மே கலைமயிலிறகுமுப்பேர்.........*
கிலீமுகமூலக்கண்வண்டு சித்திரபுங்கந்தானும் ... ...*
சலாகநன்மணிநாராசஞ் சவளமுமாகுமென்ப ... ... *
விலோதம்பெண்மயிர்பதாகை விடமென்பநஞ்சுந்தேளும்.

(இ-ள்.) [கலாபமென்பது) மணிவடம்-பதினறுகோவை- மணியுண்மாதரிடையணி- மயிலிறகுக்கும்பெயர் [கிலீமுகமென்பது] மூலக்கண் - வண்டு- அம்புக்கும்பெயர் [சலாவையென்பது) தெய்வகமணிசலாகு - ஈட்டிக்கும்பெயர் [விலோதமென்பது) கூந்தல்-பொருங்கொடிக்கும்பெயர் [விடமென்பது) நஞ்சு-தேளுக்கும்பெயர்-எ-று. (௰௪)

செல்லிடியேவன்மேகஞ் சிதலையுமாகுமென்ப............*
உல்லொளியகலிகழ்ச்சி யிரவுடனிரவியம்பேர் ........*
சொல்லுணாகீர்த்திநெல்லாம் தொடுத்தலேவளைத்தல்பார்றல்.
கல்லெலாவிமலைகல்லென்ப காண்டநீர்காக்கைசெப்பாம்...*

(இ-ள்.) [செல்லென்பது) இடி-செல்லென்னேவல்-மேகம்-கறையானுக்கும்பெயர் (எல்லென்பது) பிரகாசம்-பகல்-இகழ்க்கி-இராத்திரி-சூரியனுக்கும்

பெயர் [சொல்லென்பது) வார்த்தை-புகழ்-நெல்லுக்கும்பெயர் [தொடுத்தலெ ன்பது] வளைத்தல்-பற்றலுக்கும்பெயர் [கல்லென்பது] சத்தம்- மலை - கல்லுக் கும்பெயர் [கரண்டமென்பது) நீர்க்காக்கை-செப்புக்கும்பெயர்-எ-று. (ம௫)

கலிவஞ்சக டலிமேவாரி கடையுகம்வலியைம்பேரே...... *
சிலையொலிமலைகல்வில்லாம் செடியொளிசெறிபுதீதாம் ... *
தலமென்பதிலைபுவிப்பேர் தலையிடந்தலைவிண்ணாதி ......*
திலமேமஞ்சாடியெள்ளாம் திலகமஞ்சாடிபொட்டாம் .. *

(இ-ள்.) [கலியென்பது) வஞ்சனை-சத்தம்-கடல்-கடையும்-வலிமைக்கும் பெயர் [சிலையென்பது) சத்தம்-மலை-கல் வில்லுக்கும்பெயர் செடியென்பது) பிரகாசம்-நெருக்கம்-தீமைக்கும்பெயர் தலமென்பது) இலை-பூமிக்கும்பெயர் [தலையென்பது] இடம்-சிரசு-ஆகாயம்-முதலுக்கும்பெயர் (திலமென்பது]மஞ் சாடிமரம்- எள்ளுக்கும்பெயர் (திலகமென்பது) மஞ்சாடிமரம்- திலதத்துக்கும் பெயரொன்றவாறு. (மசு)

வல்லைகான்விரைவுமைந்தாம் வடமணிவடமாருட்பு ... ... *
பல்லமோர்கணக்குப்பாணம் பல்லணங்கரடிநாற்பேர் ...*
மல்லலேவலிவளப்பேர் வாயிலைம்புலன்கபாடம் .........*
முல்லைமல்லிகையேவென்றி முல்லைநன்னிலங்கற்பாமே ...*

(இ-ள்.) [வல்லையென்பது) காடு-காலவிரைவு-வலிமைக்கும்பெயர் [வட மென்பது]மணிவடம்-ஆலமரம்-கயிற்றுக்கும்பெயர்[பல்லமென்பது]ஓரெண்- அம்பு-குதிரைக்கல்லணை-கரடிக்கும்பெயர் [மல்லலென்பது) வலிமை-வளமை க்கும்பெயர் [வாயிலென்பது) ஐம்புலன்-கதவுக்கும்பெயர் [முல்லையென்பது வனமல்லிகை-வெற்றி-முல்லைநிலம்-கற்புக்கும்பெயர்-எ று. (மஎ)

கோலென்பதீட்டிவாட்கோ றுகிலிகைதுலாஞ்சம்மட்டி...*
சீலமன்னவன்றன்செங்கோ றிரட்டியாழ்நரப்போடம்பு...*
நீலவஞ்சனக்கோலோடு நீளிலந்தையும்பன்னோர்பேர் ... *
காலியருணன்பாம்பு காற்றெருடுமுப்பேராமே......... ...*

(இ-ள்.) [கோலென்பது] ஈட்டி- வாட்கோல்- எழுதுகோல் -தராசு-குதி ரைச்சம்மட்டி-செங்கோல்-திரண்டவடிவு- யாழ்நரம்பு -பாணம்-மையெழுது கோல்-இலந்தைமரத்திற்கும்பெயர் [காலியென்பது]சூரியன்-தேர்ப்பாகன் பாம்பு-காற்றுக்கும்பெயர்-எ-று. (மஅ)

கூலமேபண்ணிகாரம் புனற்கரைகோவிலங்கின் ... ......*
வாலொடாவனமேபாகல் வரம்பொடுகுரங்கெண்பேரே, ..*
காலிடமரக்கால்பிள்ளை குறுந்தறிவனங்காம்பூற்றங் ... .. *
காலனங்குரங்கால்வாய்க்கால்காற்றுத்தேருருள்பன்மூன்றே

(இ-ள்.)[கூலமென்பது) பலபண்டம் நீர்க்கரை-பசு - மிருகத்தின்வால்- கடைவீதி-பாகல்-சிறுவரம்பு- குரங்குக்கும்பெயர் [காலென்பது) இடம்- மரக்

கால்-புத்திரன்-குறுந்தறி-காடு-மலர்க்காம்பு-பற்றுக்கோல்-காலன்-மூளை-பாதம் வாய்க்கால்-காற்று-தேருருளைக்கும்பெயர்-எ-று. (௰௯)

கோலமேயழகுபன்றி பாக்குநீர்க்கொழுந்துபீர்க்காம் ...*
மாலியேபிரவிகள்ளாம் மாந்தலேமரித்தலுண்டல்... ...*
வேலயில்படைக்கலப்பேர்வேதண்டங்கைலவெற்பாம்...*
சாலிநெற்பொதுவுங்கள்ளுமருந்ததிதானுமாமே.........*

(இ-ள்.) (கோலமென்பது) அழகு-பன்றி-பாக்கு-நீரோட்டம்-பீர்க்கும்கும்பெயர் (மாலியென்பது) சூரியன் - கள்ளுக்கும்பெயர் (மாந்தலென்பது) சாதல்-உண்டலுக்கும்பெயர் (வேலென்பது) வேலாயுதம் - ஆயுதப்பொதுவிற்கும்பெயர் (வேதண்டமென்பது) வெள்ளிமலை-மலைக்கும்பெயர் (சாலியென்பது) நெற்பொது-கள்-அருந்ததிக்கும்பெயர்-எ-று. (௨௰)

உலவைகான் மரந்தின்கொம்போடுறுதழை விலங்கின்கோ
டாம்,மலைதலேபொரல்சூடற்பேர்மந்திரிகுபேரன்வெள்ளி*
அலர்பழிவிரிபூநீராம்அவிர்தலேயொளிபீறற்பேர்.........*
எலிபூரநாளெலிப்பேர் இரணம்பொன்கடன்மாணிக்கம்...*

(இ-ள்.) (உலவையென்பது) காற்று - மரக்கொம்பு - தழை- மிருகத்தின் கொம்புக்கும்பெயர் (மலைதலென்பது) பொருதல்-அணிதலுக்கும்பெயர் (மந்திரியென்பது) குபேரன் - சுக்கிரனுக்கும்பெயர் (அலரென்பது) பழிச்சொல்-மலர்ந்தபூ-நீருக்கும்பெயர் (அவிர்தலென்பது)ஒளிசெய்தல்-பீறலுக்கும்பெயர் (எலியென்பது) பூரநட்சத்திரம்-எலிக்கும்பெயர் (இரணமென்பது) பொன்-கடன்-மாணிக்கத்திற்கும்பெயர்-எ-று. (௨௧)

ஆலய நகரங்கோயிலானையின் கூடமுப்பேர்...............*
பாலமேமழுநெற்றிப்பேர்பவித்திரஞ்சுசிதருப்பை.......*
நூலோர்மந்திரிகள்பார்ப்பார் நுவல்கவிப்புலவற்கும்பேர்*
வேலாவலயந்தான்பூமி விரிகடலிருபேராமே... .........*

(இ-ள்.) (ஆலயமென்பது) நகரம் - தேவாலயம் - யானைநிற்குங்கூடத்திற்கும்பெயர் (பாலமென்பது) மழுப்படை - நெற்றிக்கும்பெயர் (பவித்திரமென்பது) தூய்மை - தருப்பைக்கும்பெயர் (நூலோரென்பது) மந்திரிகள்-பிராமணர் - புலவருக்கும்பெயர் (வேலாவலயமென்பது) பூமி - கடலுக்கும்பெயரொன்றவாறு. (௨௨)

சூலிபேகருப்பப்பெண்ணுந் துர்க்கையுஞ்சிவனுமுப்பேர்,
வாலியேயலாயதன்கிட்கிந்தையின்மன்னன்பேராம்... ...*
பால்புடையியல்புதிக்குப் பகுத்தல்பாலென்னுமைம்பேர்*
ஏலமே மயிர்ச்சாந்தோடேயேலத்தின்விகற்புமாமே.....*

(இ-ள்.) (சூலியென்பது) கருப்பவதி-துர்க்கை-சிவனுக்கும்பெயர்-(வாலியென்பது) பலதேவன்-கிட்கிந்தை-மன்னுக்கும்பெயர் (பாலென்பது)பக்கம்-குணம்-திசை-பங்கு-பாலுக்கும்பெயர் (ஏலமென்பது) மயிர்ச்சாந்து - ஏலத்தின்வேறுபாட்டிற்கும்பெயர்-எ-று. (௨௩)

லகரவெதுகை-முற்றிற்று.

# வகரவெதுகை.

நவமென்பபுதுமைகேண்மை யொன்பதுநந்கார்காலம்..*
கவனமேகலக்கம்தெம்மைகுதிரையின்கதிப்போர்காடாம்.*
உவணமேகலுழனுகுருயர்ச்சிக்குங்கழுகுக்கும்பேர்.....*
பவனமேயிராசிபூமிபடர்காற்றுமனேயேகோயில்........*

(இ-ள்:) (நவமென்பது) புதமை-நட்பு-ஒன்பது - மழைகாலத்திற்கும்பெயர் [கமனமென்பது] கலக்கம்-வெப்பம்-குதிரை-நடை யுத்தம் - காட்டுக்கும் பெயர் [உவணமென்பது] கருடன்-உயரம் கழுகிற்கும்பெயர் [பவனமென் பது] இராச்சி-ப்பொது பூமி-காற்று-வீடு-அரசன்-மனைவிக்கும்பெயர்-எ-று(க)

புவனநீர்புவியுமாகும்புரத்தலேகாத்தல்வண்மை........*
நவணேநூனுண்மைபிண்டிநூலேசாத்திரமுந்தந்தும் ...*
தவவென்பமிகுதிகுன்றன் தந்தேநூல்சாத்திரைப்பேர்...*
சிவநன்மைகுறுணிமுத்தி சீவனேயுயிர்வியாழம்........*

(இ-ள்.) [புவனமென்பது) நீர்-பூமிக்கும்பெயர் [புரத்தமென்பது] காத் தல்-கொடுத்தலுக்கும்பெயர் [நவணேயென்பத] கல்வி-நூல் - நுட்பம்-திணே மாவிற்கும்பெயர் [நூலென்பது] சாத்திரம் - பஞ்சிநூலுக்கும்பெயர் [தவவெ ன்பது] மிகுதி-குறைதலுக்கும்பெயர் [தந்தென்பது] பஞ்சிநூல்-சாத்திரத்துக் கும்பெயர் [சிவமென்பது] நன்மை-குறுணி-மோட்சத்திற்கும்பெயர்[சீவனெ ன்பது] உயிர்-பிரகற்பதிக்கும்பெயர்-எ-று. (உ)

இவறலேமறதியாசை யென்படேரிகைக்குமப்பேர். ......*
இவர்தலேயெழுச்சியாசை யேறுதல்சேறல்மேவல் ... ...*
சுவவென்பபுள்ளின்மூக்குஞ்சுவர்க்கமுஞ்சுண்டனும்பேர்*
குவவென்பதிரட்சிமற்றுங்குவிதலேபெருமைக்குப்பேர். .*

(இ-ள்.) [இவரலென்பது] மறதி-ஆசை - பேரிசைச்கும்பெயர் [இவர்த லென்பது] எழுச்சி-ஆசை-எறுதல்-செல்லல்-மேவதலுச்கும்பெயர் [சுவவென் பது] பறவைமூச்கு-தேவலோகம்-மூஞ்சூருக்கும்பெயர் [குவவென்பது] திர ண்டவடிவு-குவிதல்-பெருமைக்கும்பெயர்-எ-று. (௩)

தவிசென்பதடுக்குமெத்தையிலகடமுப்பேர்தானே......*
சவிமணிக்கோவைசெவ்வி சாற்றியவனப்புகாந்தி.........*
நவிரமேமஞ்சைபுன்மை நஞ்மலையுடனேயுச்சி..........*
நவிலல்சொல்லுதல்பண்ணற்பேர்ரவியமேமழுக்கோடாலி,

(இ-ள்.) [தவிசென்பது] தடுக்கு-மெத்தை -யானைமேற்றவிசுக்கும்பெயர்- [சவியென்பது] மணிக்கோவை-செவ்வை-அழகு-ஒளிக்கும்பெயர் [நவிரமெ ன்பது] மயில்-புண்மை-மலை-உச்சந்தலைச்கும்பெயர் [நவிலலென்பது]சொல்

லல் - செய்தலுக்கும்பெயர் [நவியமென்பது] மழுப்படை - கோடாலிக்கும் பெயரொன்றவாறு. (௪)

கவுசிகம்விளக்குத்தண்டோர்பண்பட்டுக்கடியகோட்டான் *
சவுரியெதிருமாகள்வன்சனியமனினையநாற்பேர் ......... *
மவுலியேமுடிகோடீரம்வட்கலென்பதுநாணங்கேடாம். ... *
கவலையெசந்தினையோர்வல்லி கவர்வழிதுன்பநாற்பேர் ...... *

(இ-ள்.) [கவுசிகமென்பது] விளக்குத்தண்டு-ஓர்பண் பட்டுச்சீலை-கோட்டானுக்கும்பெயர் [சவுரியென்பது] திருமால் - கள்வன்-சனி - இயமனுக்கும் பெயர் [மவுலியென்பது] கிரீடம்-சடைக்கும்பெயர்[வட்கலென்பது]நாணம் கெடுதலுக்கும்பெயர் (கவலையென்பது) கம்பு-ஓர்கொடி-கவர்வழி-துன்பத்துக்கும்பெயர்-எ று. (௫)

சேவகம்வீரம்யானைத்துயிலிடந்துயிலுஞ்செப்பும். ...... *
சீவினியோர்மருந்துசெவ்வழித்திறந்தோரோசை... ...... *
யாவணம்புணர்தம்வீதியங்காடியுரிமைநாற்பேர் ... ..... *
நீவியேதுடைத்தலாடை நெருங்குகொய்சகமும்பேரே... *

(இ-ள்.) [சேவகமென்பது]வீரம்-யானைத்துயிலிடல்-நித்திரைக்கும்பெயர் [சீவினியென்பது] ஓர்மருந்து-செவ்வழித்திறத்திலோசைக்கும்பெயர்[ஆவணமென்பது] புனர்பூசநட்சத்திரம்-தெரு-கடைவீதி-உரிமைக்கும்பெயர்[நீவியென்பது] துடைத்தல்-வஸ்திரம்-கொய்சகத்திற்கும்பெயர்-எ-று. (௬)

உவளகமதிலோர்பக்கமூருணிபள்ளமுள்ளில்... .... *
கவடென்பாப்பியானைகழுத்திடுபரசைக்கும்பேர் .. *
சுவையுமைமரவேர்கொல்லைலமுகநந்திரியுமோரி . *
கவையேயாயிலியங்காடு கவர்வழியெள்ளிளங்காய் . *

(இ-ள்.) [உவலகமென்பது] மதில்-ஓர்பக்கம்-குளம்-பள்ளம்- அந்தப்புரத்திற்கும்பெயர் [கவடென்பது] மரக்கொம்பு - யானைக்கழுத்திற்கட்டுங்கயிற்றுக்கும்பெயர் [சிவையென்பது] பார்வதி-மரவேர் கொல்லுலைமுகம்- நரிக்குபெயர் [கவையென்பது] ஆயிலியநட்சத்திரம் - காடு - கவர்வழி - எள்ளிளங்காய்க்கும்பெயர்-எ-று. (௭)

சிவப்பென்பசினமுஞ்செம்மையுடன்சினர்க்குறிப்புமுப்பேர். *
உவப்பென்பமகிழ்ச்சிமேடாம்ஒழுக்கமேவழியாசாரம்.. ....... *
தெவிட்டலேயடைத்தல்காண்றனிறைதலுமொலியுஞ்செப்பும்... *
துவக்கேதோல்பிணக்கிரண்டாம்சூழலேயிடம்விசாரம் ........ *

(இ-ள்.) (சிவப்பென்பது) கோபம்-சிவப்பு-கோபக்குறிக்கும்பெயர் (உவப்பென்பது) களிப்பு-மேட்டுக்கும்பெயர் (ஒழுக்கமென்பது) வழி-ஒழுக்கத்திற்கும்பெயர் [தெவிட்டலென்பது] அடைத்தல்-உமிழ்தல்-நிறைதல்-சத்தத்திற்கும்பெயர் (துவக்கென்பது) தோல் - பிணக்குக்கும்பெயர் [சூழலென்பது] இடம்-ஆராய்தலுக்கும்பெயர்-எ-று. (௮)

சேவலேகாவலோடுசேறுபுள்ளரண்முப்பேரோ..... *
கேவலந்தனிமைமுத்தி கீரமென்பதுபால்கிள்ளை ... *
பூவைசாரிகைகாயாவாம் புலிசிங்கமுமூலவசாந்தே .*
வாவலேதுருஞ்சிற்புள்ளுந்தாவலும்வகுக்கலாமே ..*

(இன்.) [சேவலென்பது] காவல்சேறு-மயிரொழிந்த பறவையாணுக்கும் பெயர் [கேவலமென்பது] தனிமை-மோட்சத்திற்கும்பெயர் [கீரமென்பது] பால்-கிளிக்கும்பெயர் [பூவையென்பது] நாகணவாய்ப்புள்-காயாமரத்திற்கும் பெயர் [புலியென்பது] சிங்கம்-புலி- நால்வகைச்சாந்திலொன்றுக்கும்பெயர் [வாவலென்பது] வௌவால்-தண்டலுக்கும்பெயர்-எ-று. (௯)

கவல்பிடர்தோண்மேல்மேடு துரகதக்குழைநாற்பேரோ.. *
கவிமந்திபுலவன்சுங்கன் கழியெனமிகுதிகாய, நவிரேயா
ண்மயிர்பண்வாளாம் நாஞ்சிலெந்திரங்கலப்பை, கவிகை
யேகுடைகொடைப்பேர்படிப்பங்காதணிபூண்செப்பாம்*

(இ-ன்.) [கவலென்பது] பிடரி-தோண்மேல்-மேடு-குதிரை- மயிருக்கும் பெயர் [கவியென்பது] குரங்கு-புலவன்-சுக்கிரனுக்கும்பெயர்[கழியென்பது] மிகுதி-கழிக்கும்பெயர் [நவிரென்பது] ஆண்மயிர்-மருதயாழ்த்திறம் - வாளுக்கும்பெயர் [நாஞ்சிலென்பது] மதிலுறுப்பு-கலப்பைக்கும்பெயர் [கவிகையென்பது] குடை-கொடைக்கும்பெயர் [கடிப்பமென்பது] காதணி - ஆபரணச் செப்புக்கும்பெயர்-எ-று. (௰)

மாவண்டுபெருமைபிண்டி வாசிகூப்பிடல்வெறுத்தல்,
காவுறுவிலங்குசெல்வக்கருநிறங்கமலைபத்தாம்......*
கோவிழிபசுநீர்திக்குக்குலிசம்விண்கிரணம்பூமி .. *
ஏவுரைசுவர்க்கம்வேந்தனிங்கல்வெற்பீரொழாமே ..*

(இ-ன்.) [மாவென்பது] வண்டு-பெருமை-நென்மா-குதிரை-அழைத்தல் வெறுப்பு-விலங்கின்பொது-செல்வம்-கருநிறம்-திருமகளுக்கும்பெயர்[கோவென்பது] கண்-பசு-நீர்-திசை-வச்சிராயுதம்-ஆகாயம்-கிரணம்-பூமி-அம்பு-சொல் தேவலோகம்-அரசன்-இரங்கல்-மலைக்கும்பெயர் எ-று. (௰௧)

ஆவியேவாவிநாற்ற மாருயிர்புகைமூச்சைம்பேர்........ *
கூவிரந்தேர்தேரமொட்டாம்குதடுநீண்மலைவெற்புச்சி ..*
காவியேகுவளைகாவிக்கல்லொடுகள்ளுமுப்பேர்.........*
நாவிதன்மஞ்சிகன்கார்த்திகைபூரநாளுமாமே.......... *

(இ-ன்.) (ஆவியென்பது) குளம்-வாசனை-உயிர்புகை-உயிர்ப்புக்கும்பெயர் (கூவிரமென்பது] தேர் - தேர்க்கொடிஞ்சிக்கும்பெயர் (குவடென்பது) மலை-மலையினுச்சிக்கும்பெயர் (காழியென்பது) கருங்குவளை- காவிக்கல்- கள்ளுக்கும்பெயர் (நாவிதனென்பது] அம்மட்டன்- கார்த்திகைநட்சத்திரம்- பூரநட்சத்திரத்திற்கும்பெயர்-எ-று. (௰௨)

ஆவென்பதிரக்கம்பெற்ற மாச்சாவோடிசைவியப்பாம்...*
காவென்பதுலாம்பூஞ்சோலை காத்தலேருட்சுமைநாற்பேரோ.

பாவென்பபனுவனூற்பா பரவுதல்பரப்புமாகும் ........*
தாவென்பபகைவருத்தந் தாண்டுதல்வலிகேடெம்பேர்...*

(இ-ள்.) (ஆவென்பது) இரக்கம் பசு-ஆச்சாமரம்-இசை- அதிசயத்திற்கும்பெயர் (காவென்பது) துலை-சோலை-இரட்சித்தல்- தோட்சுமைக்கும்பெயர் (பாவென்பது) பஞ்சினூல்-வெண்பாமுதலியபா- பரவுதல்- பரப்புக்கும்பெயர் (தாவென்பது) பகை-துன்பம் - தாண்டுதல் - வலிமை - கெடுதலுக்கும்பெயரொன்றவாறு. (மரு)

கவ்வையேபழிச்சொறுன்பங் கள்ளொலியென்ளிளங்காய் •*
பவ்வமேநுமிழிவாரி பருமரக்கணுவுமாவாம் ... ... ...*
தவ்வைமுன்பிறந்தாளோடு தாயுமூதேவியும்பேர்... ...*
நவ்வியேதோணிமானும் நன்றென்பபெருமைநன்மை ... *

(இ-ள்.) (கவ்வையென்பது] பழிச்சொல்-வருத்தம்-கள்-சத்தம்-என்ளிளங்காய்க்கும்பெயர் (பவ்வமென்பது] நீர்க்குமிழி-கடல்-மரக்கணுவு-பௌர்ணிமிக்கும்பெயர் (தவ்வையென்பது] அக்காள்- தாய் - மூதேவிக்கும்பெயர் (நவ்வியென்பது] தோணி- மானுக்கும்பெயர் (நன்றென்பது) பெருமை - நன்மைக்கும்பெயரொன்றவாறு. (மச)

அவலேசிற்றுண்டிபள்ள நீர்நிலையாமுமப்பேர் ... ......*
செவிலியேவளர்த்தகைத்தாய் முன்பிறந்தவளுஞ்செப்பும்.
கவுடமோர்கொடியோர்தேச மிருபெயர்கழறலாமே......*
சுவடுவச்சிராங்கியோரொண் சுபமென்பதழகுவெண்மை..*

(இ-ள்.) (அவலென்பது] சிற்றுண்டி-பள்ளம் - குளத்திற்கும்பெயர் (செவிலியென்பது) செவிலித்தாய்-அக்காளுக்கும்பெயர் (கவுடமென்பது]ஓர்கொடி ஓர்தேசத்துக்கும்பெயர் (சுவடென்பது) வச்சிராங்கி-ஓர்நெல்லிலக்சத்துக்கும் பெயர் (சுபமென்பது) அழகு-வெண்மைக்கும்பெயர்-எ-று. (மரு)

பவமென்பசனனம்பாவம் பாவந்தான்வினைதியானம் .....*
சவுரியங்களவுவீரம் தன்மைதான்குளிர்ச்சிதாழ்வு ... ...*
அவமொருதானியப்பே ரொன்பநெல்லிற்குமப்பேர்......*
யவனர்சோனகர்கண்ணளர் சித்திரகாரரொன்ப.......... ...*

(இ-ள்.) (பவமென்பது] பிறப்பு - பாவத்திற்கும்பெயர் (பாவமென்பது) தீவினை - தியானத்திற்கும்பெயர் (சவுரியமென்பது] களவு- வீரத்திற்கும்பெயர் (தண்மையென்பது) குளிர்ச்சி-தாழ்விற்கும்பெயர் (அவமென்பது) ஓர்வகைக் கோதுமை-நெல்விற்கும்பெயர் (பவனரென்பது] சோனகர்-கம்மாளர்-சித்திரக்காரருக்கும்பெயர்-எ-று. (மசு)

ஆவரணந்தான்சட்டை தடைமறைவரணமாடை... ......*
ஏவலேவியங்கோளென்ப வெய்தியவறுமைக்கும்பேர் ... *
ஓவியர்சிற்பநூலோ ரொடுசித்திரகாரரும்பேர் ... ... *
ஓவிரக்கச்சொன்னீக்க மோடுநீர்தகைகபாடம்.........*

(இ-ள்.) (ஆவரணமென்பது] சட்டை-தடுத்தல்-மறைவு-கோட்டை-வஸ்திரத்திற்கும்பெயர் (எவலென்பது) வியங்கோள் - தரித்திரத்துக்கும்பெயர் (ஓவியரென்பது)சிற்பாசாரியர்-சித்திரக்காரருக்கும்பெயர்(ஓவென்பது) இரக்கச்சொல்-நீங்குதல்-மடையடைக்குங்கதவிற்கும்பெயர்-எ-று. (௰௭)

அவ்வையேதாயின்பேரு மவ்வையேயடிருபேராமே ... ...*
செவ்வியோர்பொழுதினோடு செப்பியபருவமாகும் ... *
தெவ்வமர்பகையிரண்டாம் தீவினைகொடுமைபாவம்......*
சைவமோர்புராணமீசன் சமயத்தின்விகற்பமாமே ... ...*

(இ-ள்.) (அவ்வையென்பது) தாய்- அவ்வைக்கும்பெயர் (செவ்வியென்பது) அழகு-காலம்-பருவத்திற்கும்பெயர் (தெவ்வென்பது) யுத்தம் -பகைக்கும்பெயர் (தீவினையென்பது) கொடுமை-பாவத்திற்கும்பெயர்(சைவமென்பது) ஓர்புராணம்-சிவசமயத்தின்வேறுபாட்டிற்கும்பெயர்-எ-று. (௰௮)

வகரவெதுகை-முற்றிற்று.

# ழகரவெதுகை,

விழவென்பமிதுனராசிவிளங்குமுற்சவமுமாகும்.........*
கழையென்பபுனர்தமூங்கில்கழும்பெனவிரும்புமுப்பேர்
கழல்கழங்கொடுசெருப்புக் காலணிகாலிந்நாற்பேர்.......*
கிழமைமூப்புரிமைபண்பாங் கிழிநிதிபொதிகீற்றுமே .*

(இ-ள்.) [விழவென்பது] மிதுனராசி-திருவிழாவிற்கும்பெயர் [கழையென்பது] புநர்பூசநட்சத்திரம்-மூங்கில்-கரும்புக்கும்பெயர் [கழலென்பது]கழற்காய் - செருப்பு - காலணி -காலுக்கும்பெயர் [கிழமையென்பது] முதுமை-உரிமை-குணத்திற்கும்பெயர் [கிழியென்பது] நிதிமுடிப்பு - கீற்றுக்கும்பெயரொன்றவாறு. (௧)

குழியேசுனையும்வெய்ய தும்பியின்முகபடாமும்.........*
பாழியேவலிவிலங்கின் படுக்கையூர்பற்றிலாரூர்... ...... *
நாழியேயளக்குநாழி நாழிகைபூரட்டாதி... ... .........*
ஆழிமோதிரமேநேமியலைகடல்கரையேவட்டம்...............*

(இ-ள்.) [குழியென்பது] சுனை - யானைமுகப்படாத்திற்கும்பெயர்[பாழியென்பது] வலிமை-மிருகத்தின்படுக்கை-ஊர் பகைவருருக்கும்பெயர்[நாழியென்பது] அளக்குநாழி-நாழிகை-பூரட்டாதிநட்சத்திரத்திற்கும்பெயர் [ஆழியென்பது] மோதிரம்-சக்கராயுதம்-கடல்-கடற்கரை - வட்டவடிவிற்கும்பெயரொன்றவாறு-எ-று. (௨)

இழுமெனலோசையென்பவினிமையுமியம்புமுப்பேர்...*
விழுமமேசிறப்புச்சீலமை யிடும்பையும்விரித்தும்பேர்.....*

தொழுவென்பதுழலைதானேபிரோவதிநாளுஞ்சொல்லுஞ் *
செழுமையேவளர்கொழும்பாந்தேனென்பநறவும்வண்டும்.

(இ-ள்.) [இழுமெனல்] அனுகரணவோசை-இனிமைக்கும்பெயர்[விழுமமென்பது] சிறப்பு-சீர்மை-துன்பத்திற்கும்பெயர்[தொழுவென்பது] தொழுமரம்-இரோவதிநட்சத்திரத்திற்கும்பெயர் [செழுமையென்பது] வளமை-கொழுப்புக்கும்பெயர் [தேனென்பது] கள்-வண்டுக்கும்பெயர்-எ-று. (௩)

கழுதுபேய்பரண்வண்டென்பகயவுகீழ்பெருமைமேன்மை
யழுவமேபரப்புநாடு மழுங்கலேயிரங்கல்கேடாங் ... ...*
கழுமல்பற்றுறுமயக்கம் காதலேயாசைகோறல் ........*
கழிதலென்பதுவேசாதல் கடந்திடல்மிகுதிமுப்பேர் ...*

(இ-ள்.) [கழுதுவென்பது] பிசாசம்-பரண் - வண்டுக்கும்பெயர்[கயவென்பது] கீழ்மை-பெருமை-மேன்மைக்கும்பெயர் [அழுவமென்பது]பரப்பு-நாட்டிற்கும்பெயர் [அழுங்கலென்பது] இரங்கல்-கேட்டிற்கும்பெயர் [கழுமலென்பது] பற்றுதல்-மயக்கத்திற்கும்பெயர் [காதலென்பது]ஆசை-சொல்லுதலுக்கும்பெயர்[கழிதலென்பது]சாதல்-கடத்தல்-மிகுதிக்கும்பெயர் எ-று.(௪)

மாழைபொன்னுலகக்கட்டி மடமையேர்புளிமாவோலை..*
கூழையேசிறகுமாதர்கூந்தல்வெம்படையுறுப்பாந் .....*
தாழையேதகைதெங்காகுஞ் சாகினிசேம்புகீரை........*
ஊழ்முறைவெயில்பகைப்பேர் ஊசியேகூசியாணி ......*

(இ-ள்.)[மாழையென்பது] பொன் உலோகக்கட்டி-அறிவின்மை-அழகு புளிமா-ஓலைக்கும்பெயா [கூழையென்பது] சிறகு-பெண்மயிர்-படையுறுப்புக்கும்பெயர் [தாழையெனபது] தாழை-தென்னமரத்திற்கும்பெயர் [சாகினியென்பது] சேம்பு-சிறுகீரைக்கும்பெயர் [ஊழென்பது] முறைமை- வெயில்-பகைக்கும்பெயர்[ஊசியென்பது]இழைவாங்கி-எழுத்தாணிக்கும்பெயர்-எ-று

உழையென்பதிடமான்யாழிலோர் நரம்பிற்கும்பேராங் - கு
ழையென்பதளிர்துவாரங்குண்டலஞ்சேறுநாற்பேர் -விழை
வென்பபுணர்ச்சிகாதல் வெறுக்கையென்பதுபொல்செல்வ
ம்-வழிமரபிடம்பின்மார்க்கம்வழங்கலேகொடையுலாவல் *

(இ-ள்.) [உழையென்பது] இடம்-மான் - யாழினோர்நரம்பிற்கும்பெயர் [குழையென்பது]தளிர்-துளையுடைப்பொருள்-குண்டலம்-சேற்றிற்கும்பெயர் [விழைவென்பது]புணர்தல்-ஆசைக்கும்பெயர் [வெறுக்கையென்பது]பொன் செல்வத்துக்கும்பெயர் [வழியென்பது] பழமை-இடம்-பின்வழிக்கும்பெயர்- [வழங்கலென்பது] கொடுத்தல்-உலாவலுக்கும்பெயர்-எ-று. (௫)

ஈழம்பொன்கள்ளோர்தேசமெல்லையேயளவையெய்யோன்-
மேழகங்தவசமாடாம் வேளாண்மைகொடையேமெய்மை*
காழியர்வண்ணாருப்பு வாணிகரிருபேர்காட்டு ...........*
வேழமேகரும்பியானை கொறுக்கச்சிவேணுநாற்பேர்......*

(இ-ள்.) [ஈழமென்பது] பொன்-கள்-சிங்களதேசத்திற்கும்பெயர் [எல்லையென்று] அளவு-சூரியனுக்கும்பெயர் [மேழகமென்பது] கவசம்-ஆட்டிற்கும் பெயர் [வேளாண்மையென்பது] கொடுத்தல் - உண்மைக்கும்பெயர் [காழியனென்பது வண்ணார் - உப்புவாணிகருக்கும்பெயர் [வேழமென்பது] கரும்பு-யானை-கொறுக்கை-மூங்கிலுக்கும்பெயரென்றவாறு. (எ)

கூழென்பதுணவும்பொன்னும்பயிரென்றுங்கூறுமுப்பேர்
காழென்பமணியின்கோவை கற்பரல்சேருவித்தாம்... ...*
யாழென்பமிதுனவீணை யிரலைநாளாதிரைப்பேர்.........*
கீழென்பதிடங்கீழ்சாதிகீழ்த்திசைகயமைநாற்பேர்......*

(இ-ள்.) [கூழென்பது] உணவு பொன்-பயிருக்கும்பெயர்[காழென்பது] மணிக்கோவை-பருக்கைக்கல்-மரவயிரம் - விதைக்கும்பெயர் [யாழென்பது] மிதுனவிராசி-வீணை-அச்சுவினிநட்சத்திரம் - திருவாதிரைநட்சத்திரத்துக்கும் பெயர் [கீழென்பது] இடம்-ஈனசாதி-கிழக்கு-கீழ்மைக்கும்பெயர்-எ-று. (அ)

கோழிமேபகுருகொறூரம்குய்யமேமறைவுயோனி........*
மூழியேவாவிசோறுடகப்பையுமொழியுமுப்பேர் ......*
மூழையேயகப்பைசோறுமுறஞ்சுள்கொடுவிசாக.........*
நூழில்லேகோறல்யானைநுண்கெடிகொடிக்குத்தான்பேர்...*

(இ-ள்) [கோழியென்பது] கோழி - உறையூருக்கும்பெயர் [குய்யமென்பது] மறைவு-பெண்குறிக்கும்பெயர் [மூழியென்பது] குளம் - சோறு-அகப்பைக்கும்பெயர் [மூழையென்பது] அகப்பை-சோற்றுக்கும்பெயர்[முறமென்பது] முறம் - விசாகநட்சத்திரத்துக்கும்பெயர் [நூழிலென்பது] கொல்லல்-யானை-படர்கொடி-கொடிகொத்தானுக்கும்பெயர்-எ-று. (கூ)

தொழுதிபுள்ளொலிகூட்டப்பேர்தொறுநிரையடிமைகூட்டங்-
கெழுவுதன்மயக்கம்பற்றுங்கிலாலங்கனாநீர்காடி.........*
குழறுளையுடைப்பொருள்பெண்மயிரிசைக்குழன்மூப்பேரோ*
அழிவென்பவீதல்கேடாம் அவிநெய்சோறமரருண்டி ...*

(இ-ள்.) (தொழுதியென்பது) பறவையினொலி - கூட்டத்திற்கும்பெயர் (தொறுவென்பது) பசுக்கூட்டம்- அடிமை - கூட்டத்திற்கும்பெயர் (கெழுவுதலென்பது) மயக்கம்-பற்றுக்கும்பெயர் (கீலாலமென்பது) இரத்தம்-நீர்-காடிக்கும்பெயர் (குழலென்பது) உட்டுளைப்பொருள் - கூந்தல் -வேய்ங்குழலுக்கும்பெயர் (அழிவென்பது) சாதல்- கேட்டிற்கும்பெயர் (அவியென்பது) நெய்-சோறு-தேவருணவிற்கும்பெயர்-எ-று. (ய)

ழகரவெதுகை-முற்றிற்று.

# ளகரவெதுகை.

குளநுதல்கரும்பின்கட்டி குட்டமுமிட்டநாமம்... ......*
களமமர்களம்மகன்றடங் களாவிடங்கறுப்பேயில்லாள் ... *
வளமைமாட்சிமைகொழுப்பாம் வாருணங்கடலுமேற்குப் *
விளமென்பகமர்விளாவாம் விம்மலேங்குதலொலித்தல்... *

(இ-ள்.) (குளமென்பது) நெற்றி-வெல்லம் -குளத்திற்கும்பெயர் (களமென்பது) போர்க்களம்- கழுத்து- களாச்செடி-நஞ்சு- கறுப்பு- மனைவிக்கும்பெயர் [வளமையென்பது] மாட்சிமை - கொழுப்புக்கும்பெயர் (வாருணமென்பது) கடல்-மேற்குக்கும்பெயர் (விளவென்பது) நிலப்பிளப்பு-விளாமரத்திற்கும்பெயர் (விம்மலென்பது) அழுதல்-ஒலித்தலுக்கும்பெயர்-எ-று. (௧)

முளரியேவிறகுசெந்தீ முண்டகஞ்சிறுமைகாடாம் ......*
விளரென்பதிளமைதானே வெளுப்பொடுகொழுப்புமாகும்.
களபமேயானைக்கன்று கமழ்சாந்துகலவைமுப்பேர்......*
உளர்தலேசிதறலாகு தடவலுமுளாக்கற்பாந்தே...... ...*

(இ-ள்.) (முளரியென்பது) விறகு-நெருப்பு- தாமரை- தண்மை-காட்டிற்கும்பெயர் (விளரென்பது) இளமை-வெண்மை-கொழுப்புக்கும்பெயர் (களபமென்பது) யானைக்கன்று-சாந்து- கலவைக்கும்பெயர் (உளர்தலென்பது) சிந்தல்-தடவலுக்கும்பெயர்-எ-று. (௨)

குளிர்மழுநண்டிருத்தல் குளிர்கவண்முழாமீன்றூணா.....*
நளிர்குளிர்பெருமைஞெண்டு நாட்டியசெறிவுநாற்பேர் .*
ஒளிவட்டந்தான்கண்ணாடி சக்கரமிருபேரோதும்........*
இளியிசையிசித்தலெல்லே யிணங்குதலுரித்தற்கும்பேர் .*

(இ-ள்.) (குளிரென்பது) மழுப்படை-நண்டு-நங்கல்-குளிர்ச்சி- கவண்குடமுழா-மீனெழுங்கிற்கும்பெயர் (நளிரென்பது) குளிர்ச்சி-பெருமை-நண்டு-நெருக்கத்திற்கும்பெயர் (ஒளிவட்டமென்பது) கண்ணாடி - சக்கராயுதத்திற்கும்பெயர் (இளியென்பது) எழிசையினொன்று இசித்தல் - இகழ்ச்சிக்குறிப்பு-இணங்குதல் - உரிதலுக்கும்பெயர்-எ-று. (௩)

பளிதமென்பதுகர்ப்பூரம் பல்லமென்கணக்குமாகும் ... *
வெளிலணில்வேழத்தம்பம் வெண்டயிர்கடைதறிப்பேர் ...*
களிறென்பவத்தநாளே கறையடிசுறவுபன்றி ... .........*
யொளியிருசுடரேதீயே யொளிப்பிடம்புகழுமாமே......*

(இ-ள்.) (பளிதமென்பது) கர்ப்பூரம்-பல்லமெனுமோரெண்ணிற்கும்பெயர் (வெளிலென்பது) அணில்-யானைத்தறி-தயிர்கடைதறிக்கும்பெயர் (களிறென்பது) அத்தநட்சத்திரம்-யானை-சுறா-பன்றிக்கும்பெயர் (ஒளியென்பது) சூரியசந்திரர்-நெருப்பு-ஒளிப்பிடம்-புகழுக்கும்பெயர்-எ-று. (௪)

பாளிதஞ்சோறுகண்ட சருக்கரைகுழம்புபட்டா .........*
மோளியேயானைக்கூட மொழுங்கென்றும்வழங்கநூலே...*
கோளிமிதான்மரமேயத்திகொள்வோனுங்கொழுஞ்சியும்பேர் *
மீளிதிண்ணியன்வலிப்பேர் மேன்மகன்பெருமைக்கும்பேர்.

(இ-ள்.) [பாளிதமென்பது] சோறு-கண்டசருக்கரை-குழம்பு-பட்டுச்சீலைக்கும்பெயர் [ஒளியென்பது] யானைக்கூட்டம் - ஒழுங்குக்கும்பெயர் (கோளியென்பது) ஆலமரம்- அத்திமரம்-கொள்வோன்-கொழுஞ்சிமரத்திற்கும்பெயர் (மீளியென்பது) திண்ணியன்-வலிமை -மேன்மையுள்ளோன்-பெருமைக்கும் பெயரொன்றவாறு. (ரு)

அளை தயிர்முழைபுற்றாகும் அசனியேயருமூவச்சிர ... ...*
முளைபரிமீதுகட்டு மயிர்பிறமயிருமோதும்...............*
கிளையென்பவோர்பண்மூங்கில் கேளொடுகிளைத்தலும்பேர்.
இளைபுயலிளமைவேலி தலைக்காவலிமைநாற்பேர் ... ......*

(இ-ள்.) (அளையென்பது) தயிர்- மலைக்குகை- புற்றுக்கும்பெயர் [அசனியென்பது] இடி-வச்சிராயுதத்துக்கும்பெயர் (உளையென்பது) குதிரையிற்கட்டுமயிர்-பிறமயிருக்கும்பெயர் [கிளையென்பது] ஏழிசையினொன்று - மூங்கில்-உறவு-கிளைத்தலுக்கும்பெயர் (இளையென்பது) மேகம்- இளமை- வேலி-தலைக்காவலுக்கும்பெயர்-எ-று. (சு)

உள்ளலேநினைவள்ளான்பேர் உழப்பென்பவலியுற்சாகம்...*
ஞெள்ளலேபள்ளமேன்மை நீண்டவீதியமுப்பேரே......*
எள்ளலேநகையிழிப்பாம் யாமந்தெற்கிரவுசாமம் ... ... *
ஞொள்கல்சோம்பிளைத்தலச்சக்குறிப்பென்றுநுவலற்பாலாம்*

(இ-ள்.) (உள்ளலென்பது) நினைத்தல்-உள்ளான்குருவிற்கும்பெயர் [உழப்பென்பது] வலிமை- உற்சாகத்திற்கும்பெயர் (ஞெள்ளலென்பது) பள்ளம்-மேன்மை - தெருவிற்கும்பெயர் [எள்ளலென்பது] நகைப்பு - இழிவுக்கும்பெயர் (யாமமென்பது) தென்றிசை-இராத்திரி-சாமத்திற்கும்பெயர் (ஞொள்கலென்பது) சோம்பல்-இளைத்தல்-அச்சக்குறிப்புக்கும்பெயர்-எ-று. (எ)

வள்ளென்பகாதுகூர்மை வலிவளம்வாளோவாராம்........*
வெள்ளையேமுசலிசங்கு வெளிறுவெள்ளாடுவெண்பா ... *
கள்வனேமுசுஞெண்டியானை கருநிறத்தவனேசோரன் ... *
பள்ளியூர்சிற்றூர்கோயில் பாயல்கண்படைநீத்தோரூர் ...*

(இ-ள்.) [வள்ளென்பது] காது -கூர்மை- வலிமை-வளமை -வாளாயுதம்-வாருக்கும்பெயர் (வெள்ளையென்பது) பலபத்திரம்- சங்கு- வெண்மை-வெள்ளாடு- வெண்பாவிற்கும்பெயர் [கள்வனென்பது] முசு-நண்டு - யானைகரியன்-திருடனுக்கும்பெயர் [பள்ளியென்பது] மருதநிலத்தூர்- சிற்றூர்கோயில்-மக்கட்படுக்கை-நித்திரை-முனிவரிருப்பிடத்திற்கும்பெயர்-எ-று. (அ)

விளக்கொளிசோதிநாளாம் வேள்வியேமகநாளீதல் ... ...*
அளக்கமேபுடவிசேறுப் பளங்கடல்கார்த்திகைப்பேர் .. *
திளைத்தலேயநுபவித்தல் செறிதலேநிறைதன்முப்பேர் . *
இளைத்தலேபிளைப்பிரங்கல் என்றூழேயிரவிவெய்யில் ... *

(இ-ள்.) [விளக்கென்பது] தீபம்- சோதிநாளுக்கும்பெயர் [வேள்வியென்பது] யாகம்- மகநட்சத்திரம்- கொடுத்தலுக்கும்பெயர் [அளக்கென்பது] பூமி-சேறு-உப்பளம்-கடல்- கார்த்திகைக்கும்பெயர் (திளைத்தலென்பது) அநுபவித்தல்-நெருங்கல்- நிறைதலுக்கும்பெயர் (இளைத்தலென்பது) மெலிதல் -இரங்கலுக்கும்பெயர் [என்றூழென்பது] சூரியன்-வெயிலுக்கும்பெயர்-எ-று. (௯)

பிள்ளையேவடுகன்காக்கை பெடப்ருன்விரும்பல்வேண்டாம்
மள்ளரேமள்ளர்வீரர் மறவர்க்குந்துறவர்க்கும்பேர் ...... *
உள்ளமேமுயர்ச்சிநெஞ்சாம் உளுற்றிழுக்கொடுதாளாண்மை
வள்ளியேவல்லிசெங்கை வளைபுனையிழைநாற்பேரே ......*

(இ-ள்.) [பிள்ளையென்பது] வயிரன்-காக்கைக்கும்பெயர் (பெட்டலென்பது) ஆசை- ஆசைப்பெருக்கத்திற்கும்பெயர் (மள்ளரென்பது) உழவர்-படைவீரர்-திண்ணியோர் - குறிஞ்சிநிலமாக்களுக்கும்பெயர் [உள்ளமென்பது] முயற்சி-நெஞ்சுக்கும்பெயர் [உளுற்றென்பது] இழுக்கம்-முயற்சிக்கும்பெயர் (வள்ளியென்பது) படர்கொடி-கைவளை-ஆபரணத்திற்கும்பெயர்-எ-று. (௰)

தாளமேயூதுகொம்பு கழுநஞ்சுகருமைநாற்பேர் ... ...*
வேளதுமுருகன்காமன்பேர் விபூதியூன்கொடுமைசெல்வம் . *
கோளிடையூறுறுன்பான்கோள் கொலைகுணம்வலிபொய்கோ
ஞாளியேசுணங்கன்கள்ளாம் நான்முகனருகன்வேதா [ள்கை;

(இ-ள்.) [காளமென்பது] ஊதுகொம்பு- கழுமரம்- விடம் - கறுப்புக்கும்பெயர் [வேளென்பது] குமாரன் - மன்மதனுக்கும்பெயர் (விபூதியென்பது) தசை-பொல்லாங்கு-செல்வத்திற்கும்பெயர் [கோளென்பது] இடையூறு-நவக்கிரகம் -கொலை-குணம்- வலிமை- பொய்கொள்ளலுக்கும்பெயர் (ஞாளியென்பது) நாய்- கள்ளுக்கும்பெயர் (நான்முகனென்பது) அருகதேவன்-பிரமதேவனுக்கும்பெயர்-எ-று. (௰௧)

களமென்பமிடறுகோட்டி களர்நீலக்கருமைநாற்பேர் ...*
தளமிலைபடையேசாந்து தாழிபூவிதழேமேடை.........*
அளகமேமாதரோதி யறன்மயிர்குழச்சிமுப்பேர் .........*
தளைவிலங்கொடுதொடர்ச்சி தாட்சிலம்பாண்மயிர்ப்பேர் .*

(இ-ள்.) (களமென்பது) கழுத்து-கூட்டம்-களர்நிலம்- கறுப்புக்கும்பெயர் [தளமென்பது] இலை-சேனை-சாந்து-சாடி-பூவிதழ்-உப்பரிகைக்கும்பெயர்](அளகமென்பது) பெண்மயிர்-நீர்-மயிர்க்குழற்சிக்கும்பெயர் [தளையென்பது] விலங்கு-தொடர்பு-காற்சிலம்பு-ஆண்மயிர்க்கும்பெயர்-எ-று. (௰௨)

புள்ளுவண் டவிட்டம்புட்பேர் டளகந்தர்ப்பணங்குழிப்பாங்
கள்ளென்பகளவுகள்ளாம் கனலிதீயிரவுபன்றி... ... ......*
அள்ளுறஞ்செறிவுகாதோ டயில்வலிபற்றிரும்பாம் ... *
வெள்ளமெண்மிகுதிமுந்நீர் வேணுவேமூங்கில்வில்வாள் . *

(இ-ள்.) (புள்ளென்பது) வண்டு-அவிட்டநட்சத்திரம்-பறவைக்கும்பெயர் [புளகமென்பது] கண்ணாடி-மயிர்சிலிர்த்தலுக்கும்பெயர் [கள்ளென்பது] களவு கள்ளுக்கும்பெயர் (கனலியென்பது) நெருப்பு-சூரியன்-பன்றிக்கும்பெயர் [அள்ளென்பது] வலிமை- நெருக்கம்- காது-கூர்மை- அள்ளுக்கும்பெயர் (வெள்ளமென்பது) ஒரெண் - மிகுதி - கடலுக்கும்பெயர் (வேணுவென்பது) மூங்கில்-வில்-வாளாயுதத்துக்கும்பெயர்-எ-று. (௰௩)

வாளென்பதொளிகட்கப்பேர் வல்லரிதளிர்பசுங்காயாங் ... *
கூளிபேர்தமரோருசு குறல்படைத்தலைவன்கூட்டம் ... ...*
தோளென்படியங்கையாகும் சுந்தரியுமையேசுணடன் ...*
தேளென்பதனுடராளே விருச்சிகன்தெறுக்காலும்பேர் *

(இ-ள்.) [வாளென்பது] பிரகாசம்-வாளாயுதத்திற்கும்பெயர் [வல்லரியென்பது] தளிர்-பசுங்காய்க்கும்பெயர் [கூளியென்பது] பேய் -உறவு-எருது-குற்றம் பூதம்-படைத்தலைவன்-கூட்டத்திற்கும்பெயர் [தோளென்பது] தோள்-கைக்கும்பெயர் [சுந்தரியென்பது] துர்க்கை-மூஞ்சூறுக்கும்பெயர்[தேளென்பது] அனுடநட்சத்திரம்-விருச்சிகவிராசி-தேளுக்கும்பெயர்-எ-று. (௰௪)

அளியென்பநறவும்வண்டு மன்பொடுகொடையுநாற்பேர் *
அளவையேயெல்லைநாளாம் ஆசாரந்துகிறாய்மாரி........*
விளரியேயிளமையாழி ளோர்நரம்பியாழ்நீள்வேட்கை. .. *
வளமென்பபதவியும்பல் பண்டமுமழவனப்புமாகும் ......*

(இ-ள்.) (அளியென்பது) கள் - வண்டு - அன்பு-தொடுத்தலுக்கும்பெயர்-(அளவையென்பது) எல்லை-நாளுக்கும்பெயர்(ஆசாரமென்பது)சீலை-தய்மை பெருமழைக்கும்பெயர் (விளரியென்பது) இளமை-யாழிலோர்நரம்பு-நெய்தநிலத்தியாழ்-ஆசைப்பெருக்கத்திற்கும்பெயர் (வளமென்பது) பதவி-பலபண்டம் அழகுக்கும்பெயர்-எ-று. (௰௫)

வள்ளமேமரக்கால்வட்டில் கடிகைவட்டிற்குமப்பேர்......*
வள்ளுரம்பசுவிறைச்சி வனாத்தலூன்பொதுவுமாகும்......*
அள்ளலேநரகஞ்சேறும்அம்புநீர்புயல்வேயேவாம்-வெள்ளி
லேவிளாப்பாடைப்பேர்வேலன்வேள் வெறியாட்டாளன்...*

(இ-ள்.) (வள்ளமென்பது) மரக்கால்-வட்டில் - நாழிகைவட்டிலுக்கும்பெயர் (வள்ளுரமென்பது) பசுவினிறைச்சி-தசைப்பொதுவிற்கும்பெயர் (அள்ளலென்பது) நரகம்-சேற்றிற்கும்பெயர் (அம்பென்பது) நீர்-மேகம் - மூங்கில்-கணைக்கும்பெயர் (வெள்ளியென்பது) விளாமரம் - ஆசத்திக்கும்பெயர் (வேலனென்பது) முருகக்கடவுள்-வெறியாட்டாளனுக்கும்பெயர்-எ-று. (௰௬)

காளையேயெருதுபாலைக்கதிபனலிளமையோன்பேர்......*
கூளியர்நண்பர்பூதகணவீரர்கொலைத்திறத்தோர்.........*
கோளகைவட்டமோடுமண்டலிப்பாம்புங்கூறுங்.........*
கேள்வியேசெவிகல்விப்பேர் கிடங்ககழ்வாவியாமே......*

(இ-ள்.) [காளையென்பது] எருது - பாலைத்தலைவன் - கட்டிளமையோனுக்கும்பெயர் [கூளியரென்பது] சினேகிதர்-பூதகணவீரர்- கொலையாளிகட்கும்பெயர் (கோளகையென்பது) வட்டவடிவு-மண்டலிப்பாம்புக்கும்பெயர் (கேள்வியென்பது) காது - கல்விக்கும்பெயர் (கிடங்கென்பது) அகழி - வாவிக்கும் பெயரொன்றவாறு. (௰எ)

இளமையேதண்மைகாமமிளமையின்பருவமும்பேர்......*
அளறென்பநரகஞ்சேறும்அக்காரம்புடவைவெல்லம்......*
கிளரொன்பகிரணத்தோடுகிளர்கோட்டுமலர்ப்பூந்தாதாம்....*
களரிபோர்க்களங்காடென்ப கருமஞ்செய்யிடமுமாமே...*

(இ-ள்.) (இளமையென்பது) தாழ்மை-காமம் - இளமைப்பருவத்திற்கும் பெயர் (அளறென்பது) நரகம்-சேற்றிற்கும்பெயர் (அக்காரமென்பது)புடவை வெல்லத்துக்கும்பெயர் (கிளரென்பது) ஒளி-பூந்தாதுக்கும்பெயர் (களரியென்பது) போர்செய்யிடம்-காடு-தொழில்செய்யிடத்துச்கும்பெயர்-எ-று. (௰அ)

ளகரவெதுகை-முற்றிற்று.

## றகரவெதுகை.

இறைவையேபுட்டிலேணி யென்பகூர்மிகுதிகூர்மை.....*
குறடென்பபலகைதிண்ணைகொண்மூவென்பதுவிண்மேகம்
புறவமோர்புள்ளுங்காடு முல்லைநன்னிலனும்போற்றும் *
புறணியேகுறிஞ்சிமுல்லை நிலத்தொடுபுறமுந்தோலும்...*

(இ-ள்.) (இறைவையென்பது) கூடை - ஏணிக்கும்பெயர் (கூறென்பது) மிகுதி-தனிக்கும்பெயர் (குறடென்பது) பலகை-திண்ணைக்கும்பெயர்(கொண்மூவென்பது) ஆகாயம்-மேகத்திற்கும்பெயர் (புறவமென்பது) ஓர்பறவை-காடு முல்லைநிலத்திற்கும்பெயர் (புறணியென்பது) குறிஞ்சிநிலம் - முல்லைநிலம் புறம்- தோலுக்கும்பெயரொன்றவாறு. (க)

மறஞ்சினம்பிணக்குக்கூற்றும் மலைந்தசேவகமுமாகும், குறிஞ்சியோரிசையேர்பண்ணே குறிஞ்சிசெம்முள்ளிக்கும்பேர்
பிறங்கலேமிகுதிவெற்பு நிறைவொலிபெருமையைம்பேர்*
குறும்பொறைகுன்றுகாடுகுறிஞ்சிநன்னிலத்தூர்மூப்பேர்*

(இ-ள்.) (மறமென்பது) கோபம்-பிணக்கு-நமன்-வீரத்திகும்பெயர் (குறிஞ்சியென்பது) ஓரிசை-ஓர்பண்-குறிஞ்சிநிலம்- செம்முள்ளிக்கும்பெயர் (பிறங்கலென்பது) மிகுதி-மலை-நிறைதல்-ஒலி- பெருமைக்கும்பெயர் (குறும்பொறையென்பது) மலை-காடு-குறிஞ்சிநிலத்தூருக்கும்பெயர்-எ-று. (உ)

தாறுவிற்குதையேயெல்லைதாழ்மரக்குலைமுட்கோலாஞ்... *
சேறென்பகும்பிசாரந் தித்திப்புவிழவுகள்ளே.......... *
யூறென்பதீமைதீண்ட லுயிர்க்கொலையிடையூறொன்ப ... *
வேறிடைமுதனாளாகுமிடபமோடெருதுமப்பேர்........ *

(இ-ள்.) [தாறென்பது] விற்குதை அளவு-மரக்குலை- முட்கோலுக்கும்பெயர் [சேறென்பது] சேறு-சாரம்-தித்திப்பு திருவிழா-கள்ளுக்கும்பெயர் [ஊறென்பது] தீமை-தொடுதல்- கொலை- துன்பத்திற்கும்பெயர் [ஏறென்பது] இடி-அச்சுவினிநாள்-இடபம்-எருதுக்கும்பெயர் -எ-று. (௩)

சிறையேவேறிடமாம்புள்ளின் சிறகொடுகாவலும்பேர் ... *
கறையிறுத்திடலிரத்தங் கறுப்புரம்விடம்பேராந்தே ... *
முறையென்பகோசமேயூழ் முறைமையும்முப்பேரொன்ப*
பிறழ்தலேநடுக்கம்வேறு பெயர்தலோடொளிவிடற்பேர் .*

(இ-ள்.) (சிறையென்பது) வேறிடம்- பறவையின்சிறகு- காவலுக்கும்பெயர் (கறையென்பது) குடியிறை-உதிரம்- கறுப்பு-உரல்- நஞ்சுக்கும்பெயர் [முறையென்பது] புத்தகம் - பழமை- முறைமைக்கும்பெயர் (பிறழ்தலென்பது) நடுக்கம்-வேறாகப்போதல்-ஒளிசெய்தலுக்கும்பெயர்-எ-று. (௪)

ஏற்றலேகோடலென்ப வெதிர்ந்துபோர்செய்தலும்பே... *
ராற்றலேபொறைமுயர்ச்சி யதிகமேவலியேஞானந் ... *
தோற்றலேவலிபிறப்புத் தோன்றுதல்புகழேநாற்பேர் ...*
போற்றலேபுகழ்தலோம்பல் புறமென்பமுதுகுவீரம்,.. *

(இ-ள்.) (ஏற்றலென்பது) கொள்ளல்-எதிர்ந்துபோர்செய்தலுக்கும்பெயர் [ஆற்றலென்பது] பொறுத்தல்.முயற்சி-மிகுதி-வலிமை- ஞானத்திற்கும்பெயர் [தோற்றலென்பது] வலிமை-பிறத்தல்-தோன்றுதல்-புகழ்ச்சிக்கும்பெயர் [போற்றலென்பது] புகழ்தல் - பாதுகாத்தலுக்கும்பெயர் [புறமென்பது] முதுகு-வீரத்துக்கும்பெயர்-எ-று. (௫)

அற்றமேமறைவுஞ்சோர்வு மவகாசந்தானுமாகும்... ...*
குற்றலேகுறல்பறித்தல் குணாவென்ப விடைச்சொலோசை*
யெற்றென்பதிரக்கமொத்த லெறிதலெத்தன்மைத்தென்றல்.
கொற்றியேதூர்க்கைநாமங் கோவிளங்கன்றுங்கூறும் ... *

(இ-ள்.) (அற்றமென்பது) மறைவு-சோர்வு- சமையத்திற்கும்பெயர் [குற்றலென்பது] குற்றல்- பறித்தலுக்கும்பெயர் (குணாவென்பது) இடைச்சொல்-ஒலிக்கும்பெயர் [எற்றென்பது] இரக்கச்சொல்-அடித்தல்- எறிதல்-எத்தன்மைத்தென்றலுக்கும்பெயர் [கொற்றியென்பது] தூர்க்கை-பசுவினிளங்கன்றுக்கும் பெயரொன்றவாறு. (௬)

உறழ்வென்பபுணர்வுகாலஞ் செறிவிடையீடொப்பைம்பே*
ருறவியேயெறும்புநீருற் றுலைக்கலமுறவுயிர்ப்பே ......*
ருறுகணென்பதுவேதுன்ப முறுபயமுடிநோய்நாற்பே ,*
ருறுவனேமுனிபுத்தன்பே ருலக்கையேயுரோங்கலோணம்*

(இ-ள்.) [உழல்வென்பது] புணர்ச்சி- காலம்-நெருக்கம்- இடையீடு-உவமைக்கும்பெயர் (உறவியென்பது) எறும்பு-ஊற்று-உலைக்களம்- சுற்றம்-உயிருக்கும்பெயர் [உறுகணென்பது] துன்பம்-அச்சம்-தரித்திரம்-வியாதிக்கும்பெயர் [உறுவனென்பது] முனிவன் - அருகனுக்கும்பெயர் (உலக்கையென்பது) உலக்கை-திருவோணநட்சத்திரத்துக்கும்பெயர்-எ-று. (எ)

விறப்பென்பசெறிவுவெற்றி வெருவுதல்பொருதநாற்பேர் *
பொறுத்தலேபொறைதாங்கற்பேர் புந்திதான்புதனேபுத்தி
இறுத்தலேயொடித்தறங்க லியம்புதன்மூப்பேரென்ப.....*
கறுப்பிருள்சினக்குறிப்பாங் கன்றுகைவளைகன்றுமே.....*

(இ-ள்) (விறப்பென்பது) நெருக்கம்-வெற்றி-அஞ்சுதல்-யுத்தத்திற்கும்பெயர் [பொறுத்தலென்பது] பொறுமை - சுமத்தலுக்கும்பெயர் [புந்தியென்பது] புதன்-புத்திக்கும்பெயர்(இறுத்தலென்பது)ஒடித்தல்-தங்கல்-சொல்லுதலுக்கும் பெயர் (கறுப்பென்பது) கருமை-கோபக்குறிப்புக்கும்பெயர் [கன்றென்பது] கைவளை-கன்றுக்கும்பெயர்-எ-று. (அ)

பொறிமரக்கலமேசெல்வம் பூமகளெழுத்திரங்க ........ *
ளறிவிலாஞ்சனையெழுத்தோ டைம்பொறிவரியொன்பான்பேர்
வெறிவெருவுதல்கலக்கம் வெறியாட்டுவட்ட நாற்றம்......*
குறியபேய்துருவைகள்ளு கூறுநோயொன்பதாமே.....*

(இ-ள்.) [பொறியென்பது] தோணி-ஐச்சுவரியம்- இலக்குமி- சூத்திரம்-அறிவு-அடையாளம்-எழுத்து-ஐம்பொறி-தேமலுக்கும்பெயர்(வெறியென்பது) அஞ்சுதல்-கலக்கம்-தேவர்க்காடுங்கூத்து-வட்டவடிவு-வாசனை-பிசாசம் ஆடு-கள் வியாதிக்கும்பெயர்-எ-று. (கூ)

உறைபொருண்மருந்துவாழ்நாளுணவுவெண்கலமேகார.*
மெறிபுடைக்கலத்தின்கூடேயெண்குறித்திறிதிபெய்த ...*
னறியபாற்பிரையிடைச்சொன் னகரநீர்த்துளியீராறு.....*
மறைமுழைமோதல்பாறை திறைசிற்றின்மொழியாறுமே. *

(இ-ள்.) (உறையென்பது) பொருள்-மருந்து-வாழ்நாள் - உணவு - வெண்கலம்-உறைப்பு-ஆயுதவுறை-ஓரிலக்கக்குறிப்பு - பாலிடுபிரை- இடைச்சொல்-நகரம்-நீர்த்துளிக்கும்பெயர் (அறையென்பது) மலையினுட்குகை - அறைதல்-பாறை-அலை-சிறுவீடு-சொல்லுக்கும்பெயர். (ம)

இறைசிவன்கடன்வேந்தன்கையிறையிறுப்பிறைசிறந்தோன்
சிறுமைபுள்ளிறகுதங்கல் சென்னிகூனிறப்பீராறே ...... *
உறையுளென்பதுநாடூரோம் உறுதியேநன்மைகல்வி.....*
பொறைமலைதுறுகல்பாரம் பொறைசுமைகருப்பம்பூமி. *

(இ-ள்.) (இறையென்பது) சிவன்-கடன்-அரசன் - கையிறை-குடியிறை-உயர்ந்தோன்-அற்பம்-பறவையினிறகு-தங்கல்-தலை-கூன்-வீட்டிறப்புக்கும்பெயர் (உறையுளென்பது) நாடு - ஊர்ப்பொதுவுக்கும்பெயர் (உறுதியென்பது) நன்மை-வித்தைக்கும்பெயர் (பொறையென்பது) மலை-துறுகல்-பாரம் - பொறுமை-சுமை-கருப்பம்-பூமிக்கும்பெயரொன்றவாறு. (மக)

இறம்புதாமரையின்பூவே மலைகுறுங்காடுமேற்கு.........*
பிறம்பூதுதலைகமைவெற்போ டதிசயங்குழைதுமொன்றும்,
கறங்கமேல்சுழலலோசைகதிரொன்பதிரவிசோதி............*
பறம்புயர்மலைமுலைப்பேர் பாய்மாவேகுதிரைமாவேங்கை....*

(இ-ள்) [இறும்பென்பது] தாமரைப்பூ-மலை - குறுங்காட்டுக்கும்பெயர் [இறும்பூதென்பது] பெருமை-மலை-அதிசயம்-தளிர்-சிறுதூறுச்கும்பெயர் [கறங்கலென்பது] சுழலல்-ஒலிக்கும்பெயர் [கதிரென்பது] சூரியன்-பிரகாசத்துக்கும்பெயர்[பறம்பென்பது]மலை-முலைக்கும்பெயர்[பாய்மாவென்பது] குதிரை புலிக்கும்பெயரொன்றவாறு. (௰௨)

கூற்றென்பதியமன்சொல்லாங்கோமானேமூத்தோன்பன்றி
நாற்றநாறுதல்தோன்றற்பேர் நனவென்பதகலந்தேற்ற.....*
ஊற்றென்பதூன்றுகோலு மூறவியுமிருபேரோது - நோற்
றலேபொறைதவப்பேர் நுணங்கென்ப நுண்மைதேமல்...*

(இ-ள்.) [கூற்றென்பது] நமன்-சொல்லுக்கும்பெயர் (கோமானென்பது) மூத்தோன்-பன்றிக்கும்பெயர் (நாற்றமென்பது) மணத்தல்-தோன்றுதலுக்கும் பெயர் (நனவென்பது) அகலம்-தெளிவுக்கும்பெயர் (ஊற்றென்பது) ஊன்றுகோல்-ஊற்றுக்கும்பெயர் (நோற்றலென்பது) பொறுத்தல்-தவத்துக்கும்பெயர் (நுணங்கென்பது) நுண்மை-தேமலுக்கும்பெயர்-எ-று. (௰௩)

கற்பமேபிரமன்வாழ்நாள் கற்பகத்தருசுவர்க்கம்.........*
பொற்பென்பதழகினோடு பொலிவுமெய்ப்பணையுமாகும் *
பற்பமேபதுமம்தூளாம்பழங்கணேதுன்பமோசை......*
உற்கைதாரகைதீக்கொள்ளி யுண்டிதான்புசித்தல்சோறே *

(இ-ள்.) (கற்பமென்பது) பிரமதேவனுயுள்-கற்பகவிருட்சம்-தேவலோகத்திற்கும்பெயர் (பொற்பென்பது) அழகு-பொலிவு-அலங்காரத்திற்கும்பெயர் (பற்பமென்பது) தாமரைதுகளுக்கும்பெயர் (பழங்கணென்பது) துன்பம்-ஒலிக்கும்பெயர் (உற்கையென்பது) வான்மீன் - கடைக்கொள்ளிக்கும்பெயர் (உண்டியென்பது) உண்டல்-சோற்றுக்கும்பெயர்-எ-று. (௰௪)

முற்றல்காழ்க்கோடன்மூப்பு முடிவுடன்வளைத்தநாற்பேர் *
நெற்றியேநுதலின்மேருநெடும்படைவகுப்புமாகும்.....*
கொற்றமேவன்மைவெற்றி கோவரசியன்மூட்டேரே......*
எற்றுதல்படைத்தலோடே யெறிதலுமிரும்பராமே......*

(இ-ள்.) [முற்றலென்பது] வயிரங்கொள்ளல்-முதுமை-முற்றுதல்-வளைத்தலுக்கும்பெயர் [நெற்றியென்பது] நெற்றி-படைவகுப்புக்கும்பெயர் [கொற்றமென்பது] வலிமை-விசயம்-அரசியலுக்கும்பெயர் [எற்றுதலென்பது] அடித்தல்-எறிதலுக்கும்பெயர்-எ-று. (௰௫)

அறுகென்பசிங்கமோர்புல்யாளியுமாகுமுப்பேர் .........*
வறிதென்பதருகலேசற் றறியாமைபயனில்வார்த்தை.....*

மறலியேமயக்கங்கூற்ரும் மறவிகண்மறதியீனங் ........*
குறளென்பகுறளும்பேயுங் குறுமையுங்கூறுமுப்பேர் ... *

(இ-ள்.) [அறுகென்பது] சிங்கம்-ஓர்வகைப்புல் - யாளிக்கும்பெயர் [வறிதென்பது] குறைதல்-சிறுமை-அறியாமை-பயனிலாமொழிக்கும்பெயர் [மறலியென்பது] மயக்கம்-இயமனுக்கும்பெயர் [மறவியென்பது] கள்-மறதி-இழிவுக்கும்பெயர் [குறளென்பது] குள்ளம்-பிசாசம்-சிறுமைக்கும்பெயர்-எ-று. (டசு)

விறலென்பவலிவெற்றிப்பேர் விழைந்தோனேநண்பன்வேட்டோ,னொறிலென்பவிரைவினோடுநடக்கமுநிருமேராமே,
நெறிவழிநீதியென்பநிருமித்தல்படைப்பாராய்தல் ... ...*
பறைபறைவசனத்தோடேபறக்கும்புள்ளிறகுமுப்பேர்.....*

(இ-ள்.) [விறலென்பது] வல்லமை - வெற்றிக்கும்பெயர் [விழைந்தோனென்பது] சிநேகிதன் - கணவனுக்கும்பெயர் [நொறிலென்பது] சீக்கிரம்-நடக்கத்துக்கும்பெயர் [நெறியென்பது] வழி - நியாயத்திற்கும்பெயர் [நிருமித்தலென்பது] சிருட்டித்தல்-ஆராய்தலுக்கும்பெயர் [பறையென்பது] வாச்சியம்-சொல்-பறவையினிறகுக்கும்பெயர்-எ-று. (டஎ)

றகரவெதுகை-முற்றிற்று.

## னகரவெதுகை.

மனவுநன்மணிசங்கக்காம் வனைமலைமிறைவேய்மட்டாந் ...*
தனிதமியொப்பின்மைப்பேர் சாந்தமேகமையுஞ்சாந்து. *
முனைபகைநுனிவெறுப்பா முனைவேயங்குரமேபிள்ளை ...*
இனமிருங்கிளையமைச்சாமெழில்வண்ணமிளமைக்கும்பேர்,

(இ-ள்.) [மனமென்பது] மணிப்பொது - சங்கு-அக்குமணிற்கும்பெயர் [வனையென்பது] மலை-கையிறை-மூங்கில்-அளவிற்கும்பெயர் [தனியென்பது] தனி-ஒப்பின்மைக்கும்பெயர் [சாந்தமென்பது] பொறுமை - சந்தனத்திற்கும்பெயர் [முனையென்பது] பகை-நுனி-வெறுப்புக்கும்பெயர் [முளையென்பது] மூங்கில்-முளை-மகனுக்கும்பெயர் [இனமென்பது] சுற்றம்-மந்திரிக்கும்பெயர் [எழிலென்பது] அழகு-இளமைக்கும்பெயர்-எ-று. (க)

ஆனகம்படகத்தின்பே ராகுந்துந்துமியுமப்பேர்......*
மானமேயளவிலச்சை விமானமேபெருமைகுற்றம்.......*
பானலேபழனநெய்தல் பாங்கரோயிடம்பக்கப்பேர்... ...*
மானலேமயக்கமொப்பாம் வருடமேமழையுமாண்டும் ...*

(இ-ள்.) [ஆனகமென்பது] தம்பட்டன்-பேரிகைக்கும்பெயர் [மானமென்பது] அளவு-வெட்கம்-விமானம்-பெருமை-குற்றத்திற்கும்பெயர் [பானலெ

ன்பது] வயல்-நெய்தலுக்கும்பெயர் [பாங்கரென்பது] இடம் - பக்கத்திற்கும் பெயர் [மானலென்பது] மயக்கம்-ஒப்புக்கும்பெயர் [வருடமென்பது] மழை-வருடத்திற்கும்பெயர் எ-று. (உ)

தானமேமதநீராட்டுத் தருகொடைசுவர்க்கநாற்பேர்.......*
பீனமேபருமைபாசிபேடென்பபேடிபூமே..............*
நானமேபூசும்பூச்சு நானமுங்குளிக்குநீரும்.............*
வானமாகாயமென்ப மழையுலர்மரமுமாமே..........*

(இ-ள்.) [தானமென்பது] யானைமதம்-நீராடல்-கொடுத்தல்- தேவலோகத்திற்கும்பெயர் [பீனமென்பது] பருமை-பாசிக்கும்பெயர்[பேடென்பது]அலிஊருக்கும்பெயர் [நானமென்பது]பூசும்பூச்சு-கஸ்தூரி-குளிக்குநீருக்கும்பெயர் [வானமென்பது] ஆகாயம்-மழை-உலர்ந்தமரத்திற்கும்பெயர்-எ-று. (ந)

வானிமேற்கட்டுசேனை வண்டுகிற்கொடிமுப்பேரே ... ...*
ஆனியேமூலநாளுஞ் சேதமுமாகுமென்ப ... ... ...*
ஏனையேயொழிபுமற்றை யெனுமிடைச்சொற்குமப்பேர்*
ஆனியம்பொழுதுநாளா மனந்தையோர்சத்திபூமி .......*

(இள்.) [வானியென்பது] மேற்கட்டி-சேனை-துகிற்கொடிக்கும்பெயர் [ஆனியெனபது] மூலநட்சத்திரம் - கேட்டிற்கும்பெயர் (ஏனையென்பது) ஒழிவு-மற்றையெனுமிடைச்சொல்லுக்கும்பெயர் (ஆனியமென்பது) காலம் - நாளுக்கும்பெயர் (அனந்தையென்பது) ஓர்சத்தி-பூமிக்கும்பெயர்-எ-று. (ச)

முன்னலேநினைவுநெஞ்சாம்முன்னஞ்சீக்கிரியோடெண்ணம்.
கன்னல்சர்க்கரைகரும்பு கரகநாழிகைவட்டிற்பேர் ... ...*
மன்னனுத்திரட்டாதிப்பேர் மன்னவன்றனுமாகும் ... *
கின்னரநீர்ப்புள்யாழாம் கிடைக்கைபூதலம்பாயற்பேர் ... *

(இ-ள்.) [முன்னலென்பது] நினைப்பு- நெஞ்சுக்கும்பெயர் (முன்னமென்பது) சீக்கிரிமரம்-கருத்துக்கும்பெயர் (கன்னலென்பது) சருக்கரை-கரும்பு-கரகம்- நாழிகைவட்டிலுக்கும்பெயர் (மன்னனென்பது) உத்திரட்டாதிநட்சத்திரம்-அரசனுக்கும்பெயர் (கின்னரமென்பது)நீர்வாழ்பறவை-வீணைக்கும்பெயர் (கிடைக்கையென்பது) பூமி-மக்கட்படுக்கைக்கும்பெயர்-எ-று. (ரு)

பின்னையேபின்றைகங்கை பெரியமாற்குரியதேவி ... ...*
கொன்பயனிலாமைகாலங் கூறியபெருமையச்சம்.........*
பொன்னென்பவனப்பிரும்பு பூமகள்வியாழநாற்பேர் ... *
மன்னிலைமிகுதிவேந்தே வாழிவாழ்கெனலிடைச்சொல் ...*

(இ-ள். ) (பின்னையென்பது) பின்பு-இளையவர் - திருமகளுக்கும்பெயர் ( கொன்னென்பது ) பயனின்மை-பொழுது -பெருமை -பயத்திற்கும்பெயர் (பொன்னென்பது) அழகு-இரும்பு-இலக்குமி-பிரகற்பதிக்கும்பெயர்(மன்னென்பது) நிலை-மிகுதி-அரசனுக்கும்பெயர்(வாழியென்பது)வாழ்கெனல் இடைச்சொல்லுக்கும்பெயர் எ-று. (சா)

வன்னியேபிரமசாரி வளர்கிளிசமிசெந்தீயாஞ் ... ...*
சென்னிகும்பாணன்சோழன் சீருளீயஞ்செம்பாகும் ......*
கன்னிபெண்ணழிவிலாமை கட்டிளமைக்கும்பேரே ......*
தென்னிசைவனப்புத்தாழை தெற்கொடுகற்புமாமே......*

(இ-ள்.) (வன்னியென்பது) பிரமசாரி - கிளி-வன்னிமரம்·நெருப்புக்கும்பெயர் (சென்னியென்பது ). தலை - விசைபாடுவோன் - சோழனுக்கும்பெயர் [சீருளென்பது] ஈயம் - செப்புக்கும்பெயர் (கன்னியென்பது) பெண்அழிவின்மை - கட்டிளமைக்கும்பெயர் (தென்னென்பது) இசை - அழகு - தென்னமரம் - தெற்கு - கற்புக்கும்பெயர்-எ-று. (எ)

குன்றுவேதண்டமாகும் குறைவொடுசதயநாட்பேர் ... *
அன்றிலோர்புள்ளுமூல நாளெனவாமிரண்டே ...........*
மன்றமேவெளியினுமம் வாசமம்பலமுமப்பேர் ... ...*
மன்றலேபரிபளப்பேர் மருவுகல்யாணமும்பேர் .........*

(இ-ள்.) (குன்றென்பது) மலை -குறைதல் -சதயநட்சத்திரத்திற்கும்பெயர் (அன்றிலென்பது) ஓர்பறவை - மூலநட்சத்திரத்திற்கும்பெயர் ( மன்றமென்பது) வெளி -வாசனை- சபைக்கும்பெயர் (மன்றலென்பது) வாசனை- விகாகத்திற்கும்பெயர் - எ - று. (அ)

தனமுலைபொன்னான்கன்று சந்தமுத்தனமைம்பேராங்...*
கனவுநித்திரைமையற்பேர் கலிங்கஞ்சாதகப்புள்ளாடை... *
கனைசெறிவொலியாமென்ப கவரியேசவரிமேதி ... ...*
பனுவலேகிளவிநூலாம் படைப்பையூர்ப்புறமேதோட்டம்*

(இ-ள்.) (தனமென்பது) முலை - பொன் - பசுவின்கன்று-சந்தனம்- பசுமுதலியமுப்பொருட்கும்பெயர் (கனவென்பது) நித்திரை- மயக்கத்திற்கும்பெயர் (கலிங்கமென்பது) வானம்பாடி - சீலைக்கும்பெயர் (கனையென்பது) நெருக்கம் ஓசைக்கும்பெயர் (கவரியென்பது) சாமரம்-எருமைக்கும்பெயர் (பனுவலென்பது) சொல்- நூலுக்கும்பெயர் (படப்பையென்பது) நாட்டிற்புறம்- தோட்டத்திற்கும்பெயர்-எ-று. (கூ)

அனந்தனேசிவன்மால்சேடனலாயுதனருகனேந்தே... ...*
அனந்தமேமுடிவிலாமையாடகம்விண்முப்பேரோ... ...*
அனங்கமேயிருவாட்சிப்பேராகுமல்லிகைக்குமப்பேர் . *
தனஞ்சயன்பார்த்தனேசந்தழலொருகாற்றுமாமே... ...*

(இ-ள்.) (அனந்தனென்பது) சிவன் திருமால்- பூமிதாங்கும்பாம்புபலபத்திரன்-அருகனுக்கும்பெயர் (அனந்தமென்பது) அளவின்மை பொன் ஆகாயத்திற்கும்பெயர் (அனங்கமென்பது) இருவாட்சி மல்லிகைக்கும்பெயர் (தனஞ்சயனென்பது) அருச்சுனன் நெருப்பு தசவாயுவிலொன்றுக்கும்பெயர்-எ-று. (௰)

சானகிசீதைமூங்கில் தனுவென்பதுடல்வில்லற்டம் ... .. *
சானுவேமலைமுழந்தாண் மலைப்பக்கந்தானுமாகும் *
சோனையேயோணநாளும் விடாமழைமேசொரிதலும்பேர். *
கானலேமலைச்சார்சோலை கடற்கரைச்சோலைபேட்த்தேர்.. *

(இ-ள்.) [சானகியென்பது] சீதை-மூங்கிலுக்கும்பெயர் [தனுவென்பது] உடம்பு-வில்-சிறுமைக்கும்பெயர் [சானுவென்பது] மலை-முழங்கால்-மலைச்சாரலுக்கும்பெயர் [சோனையென்பது] திருவோணநாள் - விடாதுபெய்மழைக்கும்பெயர் [கானலென்பது] மலைச்சார்சோலை-கடற்கரைச்சோலை-கானலுக்கும் பெயரொன்றவாறு. (௰க

வானென்பவிசும்புமேக மழையொடுபெருமைநாற்பேர் *
தானையேசேனையாடை படைக்கலந்தானுமாகும் ......*
கானந்தேரிசையேபேதைகாடுதற்பாடியைம்பே ....... *
ரேனலேசெந்தினைப்பேர் தினைப்புனமென்றுமாமே ......*

(இ-ள்.) [வானென்பது] ஆகாயம் - மேகம்-மழை-பெருமைக்கும்பெயர் [தானையென்பது] சேனை-வஸ்திரம்-ஆயுதப்பொதுவிற்கும்பெயர் [கானமென்பது] தேர்-இராகம்-அறிவிலி-காடு-வானம்பாடிக்கும்பெயர் [ஏனலென்பது] செந்தினை-தினைப்புனத்திற்கும்பெயர்-எ-று. (௰உ)

முனியென்பதியானைக்கன்று முனிவன்வில்லகத்திநாற்பேர்
துனியென்பபுலவினீட்டத் துன்பமேநாயாறுகோபம்.... .. *
பனியென்பநடுக்கந்துன்பம்பயங்குளிரிமையம்பேரோ...*
சினையென்பமுட்டைபீளா மரக்கொம்புஞ்செப்புமப்பேர்.

(இ-ள்.) (முனியென்பது) யானைக்கன்று-தவத்தோன்-வில் - அகத்திற்கும் பெயர் [துனியென்பது] புலவினீட்டம்-துன்பம்-வியாதி-நதி-கோபத்திற்கும் பெயர் [பனியென்பது] நடுக்கம்-துன்பம்-அச்சம்-குளிர்ச்சி-பனிக்கும்பெயர் [சினையென்பது] முட்டை-கருப்பம்-மரக்கொம்புக்கும்பெயர்-எ-று. (௰ஙூ)

மானேசாரங்கமாவின் பொதுவொடுமகரராசி.......,....*
கானேநன்மணங்காடென்ப கல்வியூர்க்குருவியாமே.......*
ஏனுதிமஞ்சிகன்மந்திரியுந்தந்திரியுமென்ப ............... *
மீனேசித்திரைநாள்வான்மீன் பயிலையுமேவுபப்பேர் .. ...*

(இ-ள்.) [மானென்பது] மான் - விலங்கின்பொது-மகரராசிக்கும்பெயர் [கானென்பது] வாசனை - காட்டிற்கும்பெயர் [கல்வியென்பது] ஊர்க்குருவி-ஆமைக்கும்பெயர் [ஏனுதியென்பது] நாவிதன்-மந்திரி-படைத்தலைவனுக்கும் பெயர் [மீனென்பது] சித்திரைநட்சத்திரம்-விண்மீனுக்கும்பெயர்-எ-று. (௰ச)

ஞானமேயறிவுகல்விநல்லதத்துவநூன்முப்பேர்........*
யானமேமரக்கலத்தோடெழிலூர்திவிகற்பிரண்டா........*
மேனமேலைக்குடைப்பே ெறாறுமியுமறமுமப்பேர் ... ...*
மேனியேவடிவமென்ப நிறத்தையும்விளம்பலாமே ..... *

(இ-ள்.) [ஞானமென்பது) அறிவு-வித்தை-ஞானநூலுக்கும்பெயர் [யானமென்பது] நாவாய் - வாகனவிகற்பத்துக்கும்பெயர் [ஏனமென்பது] ஓலைக்குடை - பன்றி-பாவத்திற்கும்பெயர் [மேனியென்பது] உருவம் - காந்திக்கும்பெயரொன்றவாறு. (௬ரு)

அன்னையேமுன்பிறந்தாடோழிதாயாகுமென்ப ... ......*
அன்னமேதுமமுஞ்சோறும் ஆகாரமுடனெய்யுண்டி......*
தன்மையேரியல்பினோடுதன்மையினிடமுன்சாற்றும்......*
பன்னலேநெருக்கம்வார்த்தை பருத்தியின்பேருமாமே...*

(இ-ள்.) [அன்னையென்பது] அக்காள்-தோழி - தாய்க்கும்பெயர் [அன்னமென்பது] அன்னப்புள்-சோற்றுக்கும்பெயர் [ஆகாரமென்பது)உடம்பு-நெய்-உணவுக்கும்பெயர் (தன்மையென்பது) அழகு-குணம்-தன்மையிடத்துக்கும்பெயர் [பன்னலென்பது] நெருக்கம்-சொல்-பருத்திக்கும்பெயர்-எ-று. (௬சு)

வனமேநீர்மிகுதிகாடு வளர்சோலை துளசிபீமம..............*
மனுவேமந்திரமோர்நூலா மண்ணையேபிளமைமூடன் ...*
புனையென்பதழகினோடு பொலிவுமப்பனையுமாகும் ... ...*
மனையென்பமனைவிவீடாம் வதுவையேமணங்கல்யாணம் *

(இ-ள்.) (வனமென்பது) நீர்-மிகுதி-காடு-சோலை-துளசி - சுடுகாட்டுக்கும்பெயர் (மனுவென்பது) மந்திரம் - ஓர்தருமநூலுக்கும்பெயர் (மண்ணையென்பது) பிசாசம் - இளமை - அறிவிலானுக்கும்பெயர் (புனையென்பது) அழகு-பொலிவு - அலங்காரத்திற்கும்பெயர் (மனையென்பது) இல்லாள் - வீட்டிற்கும்பெயர் (வதுவையென்பது) வாசனை-விவாகத்திற்கும்பெயர்-எ-று. (௬எ)

அன்வினையொடுபெயர்க்கும் விகுதிசாரிகையுமாகு ... ...*
மன்னிடுங்கனத்தலென்ப திருளோசையிருபேர்வைக்கு ...*
மின்னனவொருசொற்பல்பேர்க் கியற்கவிமுந்நூறென்பான்-சொன்னவன்குணபத்திரன்றாள் சூடுமண்டலவன்றானே*

(இ-ள்.) (அன்னென்பது) வினைவிகுதி-பெயர்விகுதி- சாரிகைக்கும்பெயர் (கனத்தலென்பது) இருள்-ஒளிக்கும்பெயர்-எ-று.

ஙகரவெதுகை-முற்றிற்று.

---

ஆ-எதுகை-௰அ-இ விருத்தம்-௬௱அ-காப்பு-க-ஆ௬௱கூ.